

என் தாயார் மிகவும் கெட்டிக்காரி

ஒரு குழந்தைக்குத் தேவையானவை மிகவும் சொல்பம்— எளிதானது. ஆகாரம் கொடுத்தல், ஸ்நானம் செய்து வைத்தல், துணிகள் மாற்றுதல் இவைகள் மட்டும் போதாது. என்னுடைய நிச்சயமான சௌகரியத்துக்கும் சுகத்துக்கும் ஒவ்வொரு தடவை என்னை ஸ்நானம் செய்து வைத்த பிறகும் நறுமணமுள்ள கஸ்ஸன்ஸ் வைட் க்ராஸ் பவுடரை என் மீது தாராளமாக பூசவேண்டும் என்பதை என் தாயார் நன்கு அறிவாள். அரிப்பு, புண், வியர்வை இவைகள் ஒன்றும் என்னைப் பாதிக்காது. எப்போதும் என் சருமம் பட்டுப்போல் மிருதுவாக இருக்கிறது.

இங்கிலாந்தில் கஸ்ஸன்ஸினால் தயாரிக்கப்பட்ட இந்தப் பிரசித்திப் பெற்ற பவுடர் இந்தியாவெங்கும் பம்பாய் முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்டாராலும் அவர்களது பிராஞ்சுகளாலும் விநியோகிக்கப்படுகிறது.



Ad. No. 11.






அழகின் சிறப்பு

சருமசுகத்தின் மகிமையே

உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சருமசுகத்தினால் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமான தைலங்கள் சேர்ந்துள்ள கேடில் ரெக்ஸோனாவில் அடங்கியிருப்பதால் அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமன்றி சரும அழகு ஏற்படவும் உதவுகிறது. அதிசீக்கிரத்தில் நுரைதருவதுண்டாகும் ரெக்ஸோனாவின் நுரை சருமத்தினுள் சுகமளிக்கும் கேடிலை சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனாலேயே, சருமத்தை மாசு மருக்களிலிருந்து மாறுகாத்து ஆரோக்கியத்தையளித்து ஒவ்வொரு மங்கையும் விரும்பும் மேனியழகைத்தரும் குணத்தை இச்சோப்பும் பெற்றிருக்கிறது.

ஆரோக்கிய விருத்தியைச் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனாவின் உறுதுணையளித்து சக்தியை காட்டும் நிறைமையை பெறுகிறார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனா இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.



குழந்தைக்கு ரெக்ஸோனா! குழந்தையின் மெல்லிய சருமத்தில் புண்கள், சிரைப்புகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனாவின் மருந்து சேர்ந்த நுரை சிறு வைகைக்களை சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ கலப்பு மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

சருமசுகத்திற்கு ரெக்ஸோனா

REXONA PROPRIETARY LIMITED



ஏஜண்டுகள்:—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், தைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பேர்ஹாம்பூர் & செகந்தராபாத்; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

சிலோன் ஏஜண்டுகள்:—M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொளும்பு



குலதனம்

போலக் கேச தனமும், சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதுண்டு. கேச தனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக் கொண்டு அதை அடையுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்து வருவதால், இள நரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக் கட்டைப் பெறுவது போல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக் கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டே விருத்திசெய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்



ஒரிஸ்ஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர் - செகந்திராபாத்

பெஜவாடா - மதுரை



மதராஸ் ஏஜண்டு :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு :

B. பாலபட்டாபி,

வைசியாள் தெரு, கோயமுத்தூர்

கல்கி


பொருளடக்கம்

சுதந்திர மலர்

மலர் 7	ஆகஸ்ட் 15	சர்வஜித்து
இதழ் 3		ஆடி 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

★



கல்கி

என்ன சேதி?

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 3

சுதந்திர மந்திரிகள்

நாளது ஆகஸ்டு மாதம் 14உ நள்ளிரவு கடந்ததும், இந்தியாவின் பூரண ஆட்சிப் பொறுப்பை, பண்டித ஜவாஹர்லால்ஜி அவர்களைப் பிரதம மந்திரியாகக் கொண்ட சுதந்திர மந்திரி சபை ஏற்றுக் கொள்ளுகிறது. மேற்படி மந்திரி சபையில் மொத்தம் பதினாறு மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னின்னார் என்பதைப் பார்க்கும்போது, நமது காங்கிரஸ் மேலோர் எவ்வளவு விசால புத்தியுடனும், குறுகிய கட்சிப் பற்று இல்லாமலும், தேச நன்மை ஒன்றையே நோக்கமாகக் கொண்டும் புதிய சுதந்திர மந்திரி சபையை அமைத்திருக்கிறார்கள் என்பதை நன்கு அறியலாம். முதன் முதலில் ஏற்படும் இந்திய சுதந்திர சர்க்காரில் 'ஆகஸ்டு தியாகி'கள் தான் இருக்க வேண்டுமென்றோ, சிறை புகுந்த தேச பக்தர்கள் தான் இருக்க வேண்டுமென்றோ, காங்கிரஸ் வாதிகள் தான் இருக்க வேண்டுமென்றோ கூட நமது தலைவர்கள் எண்ணவில்லை. தேசப் பொது மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாயும், நிர்வாகத் திறமையிற் சிறந்ததாயும் புது மந்திரி சபை அமைய வேண்டுமென்று தீர்மானித்து, அவ்விதமே அமைத்திருக்கிறார்கள். மௌலானா ஆஸாதுடன், ஜனாப் கித்வாய்! என்னும் இன்னொரு தேசிய முஸ்லிம் புது மந்திரி சபையில் இடம் பெற்றிருக்கிறார். ஸ்ரீ ஜகஜீவன்ராமைத் தவிர, சென்ற ஆண்டு வரையில் காங்கிரஸுக்குப் பரம விரோதி என்று கருதப்பட்ட டாக்டர் அம்பேத்கார் ஹரிஜனப் பிரதிநிதியாக இடம் பெற்றிருக்கிறார். ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலாவது சுதந்திர சர்க்காரில் பொருளாதார மந்திரியாகி இருப்பது தமிழ் மக்களுக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சி தரும் விஷயம். ஐக்ய மாகாணத்தில் ஒரு பக்கம் ஹிந்துமகா சபைக்காரர்கள் காங்கிரஸ் மந்திரி சபைக்குப் பெருந் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த போதிலும், ஹிந்து சபைப் பிரமுகர் டாக்டர் சியாம பிரசாத் முக்கர்ஜி புது மந்திரி சபையில் இருக்கிறார். சுதந்திரப் போர் நடத்தி வெற்றி பெற்ற தலைவர்கள் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு தாராள புத்தியுடன் மந்திரி சபை அமைத்திருக்க மாட்டார்கள் என்று நிச்சயம் சொல்லலாம். பண்டித ஜவாஹரையும் அவருடைய சுதந்திர மந்திரி சபையையும் மனமார, வாயார, வாழ்த்துகிறோம். உலகம் கண்டு வியக்கும் படியாக அவர்கள் நடத்தப் போகும் சுதந்திர தர்ம இராஜ்யத்தில் பாரத மக்கள் சகல விதங்களிலும் செழித்தோங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நல்ல உதாரணம்

சர்தார் வல்லபாய் பட்டேல் சென்ற திங்கட்கிழமை யன்று பம்பாயில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது, தேசத்தில் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைத் தெளிவாக விளக்கி யிருக்கிறார்.

இதற்கு உதாரணமாக அவர் தற்போது பிரிட்டனில் இருந்து வரும் சோஷியலிஸ்ட் சர்க்காரை எடுத்துக் காட்டி யிருக்கிறார். பிரிட்டன் தற்போது ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறது. அதனுடைய பொக்கிஷம் காலியாக இருக்கிறது. அமெரிக்காவிட மிருந்து அது வாங்கிய கடனில் பெரும்பகுதி செலவாகி விட்டது. இந்த நிலைமையில், அது சமாளித்து மீண்டும் ஒரு பெரிய வல்லரசாக வேண்டுமானால், எல்லாத் தொழிற்சாலைகளும் மக்களும் அதிக நேரம் உழைத்து உற்பத்தியைப் பெருக்கவேண்டு மென்றும், இல்லாவிடில் பிரிட்டனுடைய நிலைமை மோசமாகி

விடுமென்றும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி சொல்லியிருக்கிறார்.

இது நம்முடைய நாட்டுக்கும் ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது. இந்தியாவும் பிரிட்டனை விட நெருக்கடியான நிலைமையிலேயே இப்போது இருக்கிறது. இங்கு உணவுப் பஞ்சமும் துணிப் பஞ்சமும் சொல்ல முடியாத அளவு அதிகமாகி வருகிறது. இந்த நிலைமையில், உற்பத்தியைப் பெருக்க வேண்டியதுதான் நம்முடைய முக்கிய வேலையாக இருக்க வேண்டும்.

ஆனால், இங்கு?

ஆனால், துர்ப்பாக்கியவசமாக இங்கு அப்படி இல்லை. பிரிட்டனில் அதிகாரத்திலிருக்கும் சோஷியலிஸ்ட் சர்க்கார் உற்பத்தியைப் பெருக்கச் சொல்லுகிறது. இங்குள்ள சோஷியலிஸ்ட்டுகளோ, உற்பத்தி பெருகாமல் இருப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து வருகிறார்கள். தேசத்தின் நன்மையைக் காட்டிலும், கட்சியின் செல்வாக்கையே பெரிதாக நினைக்கிறார்கள். வேலை நிறுத்தம் என்பது இங்கு சர்வ சாதாரண விஷயமாகி விட்டது. இந்த வேலை நிறுத்தங்களின் தொல்லையைப் பொறுக்க முடியாமல் காந்திஜி கூட அதை வெறுத்திருக்கிறார்; "வேலை நிறுத்தம் என்பது ஒரு வீண் தொல்லையாகி விட்டது" என்றும் கண்டித்திருக்கிறார்.

தேசம் இப்போதுதான் புது வாழ்வு பெற்றிருக்கிறது. வறுமையையும் ஏழ்மையையும் சமாளித்து மக்கள் அமைதியான, சுபிட்சமான நிலைமையை அடைவதற்கு, சர்தார் வல்லபாய் படேல் கூறுவதுபோல் கட்சி வேற்றுமைகளை மறந்து, இந்தியாவைப் பலப்படுத்துவதையே எல்லோரும் தங்களுடைய லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

வெளியேறுக!

இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டது. பிரிட்டிஷ்காரர்கள் மூட்டை கட்டிவிட்டார்கள். ஆனால், அந்த பிரிட்டிஷ்காரர்களுடன் இந்தியாவுக்கு வந்த பிரஞ்சுக்காரர்கள் மூட்டை கட்டுவதற்கான அறிகுறியைக் காணோம். அந்த நல்ல புத்தி தானாக அவர்களுக்கு உண்டாகும் என்று நினைத்தோம், ஆனால் உண்டாகவில்லை.

சமீபத்தில் பிரஞ்சிந்திய கவர்னரான ஸ்ரீ பாரன் பம்பாயில் பேசும்போது, "இந்தியாவுக்கும் பிரான்ஸுக்குமிடையே உண்மையான நட்பை ஏற்படுத்துவதற்காக பிரஞ்சிந்தியா ஏதாவது ஒரு ஏற்பாடு செய்தாக வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

இந்தியாவுக்கும் பிரான்ஸுக்குமிடையே உண்மையான நட்பு இருக்க வேண்டும் என்று ஸ்ரீ பாரன் விரும்பினால், அவரும் அவருடைய சகாக்களும் முதல் கப்பல் ஏறி அவர்களுடைய ஊரை நோக்கிக் கிளம்பட்டும்! அதுதான் புத்திசாலித்தனம்.

பெயர்களுக்கும் சுதந்திரம்!

தேசத்துக்குச் சுதந்திரம் வந்திருக்கும் இந்தச் சமயத்தில், நம்முடைய புராதனப் பெருமை வாய்ந்ததும், அழகியதும் அற்புதமுமான நதிகள், நகரங்கள், மலைகள் முதலியவற்றின் பெயர்களுக்கும் வெள்ளைக்காரர்களிடமிருந்து சுதந்திரம் கிடைக்கப் போகிறது!

புனிதமான நம்முடைய கங்காநதியை வெள்ளைக்காரர்கள் 'காஞ்ஜஸ்' என்று கர்ண கடூரமாக அழைத்தார்கள். 'யமுனை' என்னும் அழகிய, காதுக்கு இனிமையான பெயர் வெள்ளைக்காரர்களுடைய வாயில் 'ஜம்னு'வாக ஆயிற்று.

இப்போது மேற்படி பெயர்களுக்கு விடுதலைக் காலம் பிறந்திருக்கிறது. ஐக்கிய மாகாண சர்க்கார் இந்தப் பெயர்களையெல்லாம் முன்பு இருந்ததைப் போலவே மாற்றி வைக்கப் போகிறார்களாம். யமுனையும் கங்கையும் வெள்ளைக்காரர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்பட்டது கூட அவ்வளவு அதிகம் அல்ல; தென்னாட்டிலுள்ள சில நகரங்களின் பெயர்களை பிரிட்டிஷ்காரர்கள் உருத் தெரியாமலே அடித்து விட்டதுதான் ரொம்பப் பரிதாபமாகும். 'திருநெல்வேலி' 'டின்னவெலி'யாக மாறிவிட்டது. 'நாகபட்டணம்' அணுகுண்டால் தாக்கப்பட்டது போல 'நெகபட்டாம்' ஆயிற்று. சென்னை சர்க்காரும் ஐக்கிய மாகாண சர்க்காரைப் போலவே இந்த நகரங்களின் பெயர்களை எல்லாம் முன்பு இருந்த நிலைமைக்கு திருத்தி அமைக்கப் போகிறார்களாம்.

இவ்விதம் தேசத்துக்குக் கிடைத்த சுதந்திரம் ஒவ்வொரு நகரத்துக்கும் மலைக்கும் நதிக்கும் கூடக் கிடைக்கிறது.

வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!

பேரிகை கொட்டுங்கள்! முரசம் முழங்குங்கள்! சங்கம் ஊதுங்கள்! கொடி உயர்த்துங்கள்! விழா நடத்துங்கள்! ''வந்தே மாதரம்'' என்று வணங்குங்கள்! ''வாழ்க பாரதம்!'' என்று வாழ்த்துங்கள்! ''ஜெய ஹிந்த்!'' என்று கோஷமிடுங்கள்!

கனவு அல்ல; பிரமை அல்ல; கற்பனையும் அல்ல; — நம்முடைய வாழ்நாளில், நம்முடைய கண் முன்னே, இதோ பாரத புண்ணிய பூமி பூரண சுதந்திரம் அடைந்தது! இருநூறு வருஷத்து அன்னிய ஆட்சி முடிவடைந்தது! பாரத கண்டத்துப் பெரியோர்கள் செய்த தவம் சித்தி அடைந்தது! ஆயிரமாயிரம் தேச பக்தர்கள் கண்ட கனவு நனவாயிற்று! லட்சோப லட்சம் தேசத் தொண்டர்கள் செய்த தியாகம் பலன் தந்தது! பகவத் கீதையில் பகவான் அருளிய திருவாக்குப் பலித்தது! சத்தியம் ஜயித்தது!

அதோ, இந்தியாவின் சுதந்திரக் கொடி நாடெங்கும் பறப்பதைப் பாருங்கள்! நேற்று வரையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி பறந்து கொண்டிருந்த கவர்ன்மெண்ட் மாளிகைகளிலும், இராணுவக் கோட்டைகளிலும், சர்க்கார் காரியாலயங்களிலும் இன்று தாயின் மணிக்கொடி வானளாவப் பறப்பதைப் பாருங்கள்! அதில் நீல வர்ணத்தில் பொறித்திருக்கும் அசோக சக்கரத்தையும் பாருங்கள்! இந்தியாவின் ஒருமையையும் பழம் பெருமையையும் ஒருங்கே காட்டி, இமயமலை முதல் குமரி முனை வரையில் இந்தியா ஒரே சாம்ராஜ்யமாயிருந்த காலத்தை நினைவூட்டும், அந்த தர்ம சக்கரத்தை நன்றாய்ப் பாருங்கள்!

புது டில்லியில் நடக்கும் அதிசய நிகழ்ச்சியையும் கவனியுங்கள்! இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியிடமிருந்து இந்தியப் பொதுமக்கள் தேர்ந்தெடுத்த தலைவர்கள் ஏற்றுக் கொள்வதைப் பாருங்கள்!

பிரிட்டிஷ் சர்க்கார் நியமித்த மாகாண கவர்னர்கள், தேசிய சர்க்கார் நியமித்த புதிய சுதந்திர கவர்னர்களிடம் மாகாண ஆட்சியை ஒப்புவிக்கும் அற்புதத்தைப் பாருங்கள்!

இந்தியாவின் கவர்னர் ஜெனரலும், கவர்னர்களும், மந்திரிமார்களும் இத்தனை காலமும் பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்து வந்ததற்குப் பதிலாக, இன்றைக்கு இந்திய மக்களுக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் விந்தையைப் பாருங்கள்!

* * *

இப்படியெல்லாம் நம்முடைய வாழ்நாளில் நடக்கும் என்றும், நம் கண்ணாலே பார்ப்போமென்றும் நம்மில் யாராவது நம்பியிருந்தோமா? அதிலும் இவ்வளவு சீக்கிரத்தில், இந்த 1947-ம் வருஷம் ஆகஸ்டு மீ 15ல இத்தகைய அற்புதம் நடக்கும் என்று எதிர்பார்த்தோமா?

ஆம்; யாரும் எதிர்பாராத அதிசயந்தான் நடைபெற்றிருக்கிறது. நடக்க

முடியாது என்று பலரும் நினைத்த காரியந்தான் நிறைவேறி யிருக்கிறது.

இந்த அற்புதம் நடப்பதற்கு மூல காரணமா யிருந்து நடத்தி வைத்த மகா மந்திரவாதி யார்? சொல்லவும் வேண்டுமா? கையில் ஆயுதம் எடுக்காமல் பாரத யுத்தத்தை நடத்தி வைத்த மாயக் கண்ணனைப்போல் இன்று அஹிம்சா தர்மத்தையே ஆயுதமாகக் கொண்டு வீர சுதந்திரப் போரை நடத்தி மகத்தான வெற்றியும் அளித்தவர் மகாத்மா காந்தியேதான்! அத்தகைய மாய மந்திரவாதியான மகாத்மாவுக்கு வணக்கம் செலுத்துகிறோம். அவருடைய ஆத்ம சக்திக்குப் போற்றி கூறுகிறோம்.

* * *

பாரத நாடு பூரண சுதந்திரம் பெற்ற இந்தப் புனிதத் திருநாளில், தாயின் சுதந்திரத்துக்காக வாழ்நாளெல்லாம் பாடுபட்டு வானுலகம் எய்திய பெரியோர்களை நினைவோமாக!

தாதாபாய் நௌரோஜி என்ன, லோகமானிய திலகர் என்ன, லாலா லஜபதிராய் என்ன, கோபாலகிருஷ்ண கோகலே என்ன, சுரேந்திரநாத் பானர்ஜி என்ன, விபின்சந்திர பாலர் என்ன, வ. உ. சிதம்பரம் பிள்ளை என்ன, — இத்தகைய பெரியோர்களுடைய புனித ஞாபகத்தைப் போற்றுவோம்.

மோதிலால் நேருவையும், தேசபந்து தாஸையும், அஜ்மல்கானையும் டாக்டர் அன்ஸாரியையும், அன்னை கஸ்தூரிபாய் தெய்வத்தையும், நமது சத்திய மூர்த்தியையும், நேத்தாஜி சுபாஷ் போஸையும் வணங்கி வாழ்த்துவோம்.

பெரியோர்களே! அனைவரும் வாருங்கள்! ஆவி வடிவிலே ஆகாயத்திலே வந்து நின்று பாருங்கள்! உங்களுடைய வாழ்நாள் மனோரதம் நிறைவேறிப் பாரத நாடு பூரண சுதந்திரம் அடைந்திருக்கும் அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தப்படுங்கள்! ஆசி கூறுங்கள்!

பிரசித்தி பெற்ற தலைவர்களை நினைந்து போற்றிய நாம் பெயரும் புகழும் இல்லாமல் ஜன்ம தேசத்துக்குத் தொண்டு செய்து உயிரையும் அர்ப்பணம் செய்த தேச பக்த வீர திலகங்களையும் நினைப்போம். அவர்களுடைய தொண்டையும் தியாகத்தையும் வாழ்த்திப் போற்றுவோம்!

சுயநலமென்னும் நினைவே இல்லாமல், பட்டம் பதவி மோகமில்லா தாயின் விலங்கை முறித்தெறிய அரும்பாடு பட்ட தேசபக்தர் திருக் கூட்டத்துக்கு வணக்கம் செலுத்துவோம்.

தொண்டர்களே! தேசபக்தர்களே! தியாக மூர்த்திகளே! அனைவரும் வாருங்கள்! ஆகாச வெளியில் நின்று உங்கள் கனவு நிறைவேறும் காட்சியைக் கண்டு மகிழுங்கள்! பாரதத் தாயின் உள்ளம் நிறைந்த ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

* * *

காலஞ் சென்ற தேச பக்தர்களையும் தலைவர்களையும் தொண்டர்களையும் வாழ்த்தி வணங்கிய பிறகு உயிரோடிருக்கும் தேசத் தலைவர்களையும் நினைவோம். அவர்களை வாழ்த்துவோம், வணங்குவோம். அவர்களுக்கு நமது இரு மடங்கு நன்றியைச் செலுத்துவோம்.

தாதாபாய் நௌரோஜி முதல் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் வரையில் தியாக மூர்த்திகளான தேசத் தலைவர்கள் அநேகர் தாய் நாட்டுக்கு அரும் பெரும் தொண்டு செய்திருக்கிறார்கள். உண்மை; சந்தேகமில்லை.

ஆனால் அவர்கள் எல்லாரையும் காட்டிலும் இன்று உயிரோடிருக்கும் தேசத் தலைவர்கள் நமது நன்றிக்கு அதிக பாத்திரமாகிறார்கள். அவர்கள் உயிரோ டிருப்பதே ஒரு பெரும் தொண்டு; பாரதத் தாய் செய்த பாக்கியம்; பாரத மக்களின் தவப் பயன்.

ஜவாஹர்லால்ஜியும், வல்லபாய் பட்டேலும், ராஜாஜியும், ராஜேந்திரரும், மௌலானா ஆஸாதும் எல்லாருக்கும் மேலாக காந்தி மகாத்மாவும் உயிரோடிருப்பதால் அல்லவா இன்றைய தினம் பாரத நாடு சுதந்திரம் அடைந்த திருவிழாவை நாம் இவ்வளவு கோலாகலமாகக் கொண்டாடுகிறோம்? மேற்கூறிய உத்தமத் தலைவர்களுடைய காலத்துக்குப் பிறகு பாரத நாடு சுதந்திரம் அடைந்தால், மக்கள் இத்தனை குதூகலம் அடைய முடியுமா? அப்படிக் காலந் தப்பி வரும் சுதந்திரத்தால் நாடு பயன்தான் அடையுமா?

* * *

ஒரு தேசம் சுதந்திரம் அடைவதைக் காட்டிலும், அடைந்த சுதந்திரத்தை நிரந்தரமாகக் காப்பாற்றுவதுதான் அதிக கடினம் என்பதை நம்

காலத்திலேயே பார்த்திருக்கிறோம். ஹிட்லர், முசோலினி, டோஜோ, சர்ச்சில் முதலியவர்களைப் போன்ற மூர்க்கத் தலைவர்கள் ஒரு தேசத்துக்கு வாய்த்தால், அந்த தேசம் சுதந்திரம் அடைந்தும் பயனில்லை.

பிரஞ்சு மக்கள் எரிமலை வெடிப்பது போலக் கொதித்து எழுந்து புரட்சி செய்தார்கள்; சுதந்திரம் பெற்றார்கள். ஆனால் தக்க தலைவர்கள் இல்லாமையால் அடைந்த சுதந்திரத்தை உடனே இழந்தார்கள். ஓயாத யுத்தங்களும், ஒழியாத தொல்லைகளுமாக நெடுங்காலம் கஷ்டப்பட்டார்கள்.

ஒரு நாடு சுதந்திரம் பெற்ற நாடாக இருந்தால் மட்டும் போதாது; சுதந்திரத்தைக் காப்பாற்றவும், அதனால் மக்கள் நலன் அடையச் செய்யவும் ஆற்றல் படைத்த தலைவர்களை அச் சுதந்திர நாடு பெற்றிருக்க வேண்டும். சுயநலமில்லாதவர்களும், அறிவும் ஆற்றலும் உள்ளவர்களும், விசால நோக்கமும் திர்க்கதரிசனமும் படைத்தவர்களுமான தலைவர்களைப் பெற்றிருந்தால்தான் சுதந்திரத்தினால் அடையக்கூடிய பலனை முழுதும் அடையலாம்.

பாரதத் தாயின் பாக்கியவசத்தினால் அத்தகைய ஒரு சில தலைவர்களை இன்னமும் நாம் பெற்றிருக்கிறோம்.

அது எப்பேர்ப்பட்ட பாக்கியம் என்பதை நாம் உணர வேண்டும்; உணர்ந்து நன்றி செலுத்த வேண்டும். பாக்கியவசத்தினால் கிடைத்த அந்தத் தலைவர்களை நாம் இன்னும் ஐந்தாறு வருஷ காலத்துக்குக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்ற வேண்டும்.

நாற்றைம்பது வருஷம் அன்னிய ஆட்சியின் கீழ் அடிமையாயிருந்த நாட்டில் எத்தனையோ சிக்கல்களும் கோளாறுகளும் இருக்கத்தான் செய்யும். அரும்பாடு பட்டுப் பெற்ற சுதந்திரத்தை அபக்கென்று விழுங்க நாலா புறமும் அபாயங்கள் காத்திருக்கும்.

மேற்படி சிக்கல்களையும் கோளாறுகளையும் நீக்கி, அபாயங்களை யெல்லாம் போக்கி, கிடைத்த சுதந்திரத்தை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டுமென்றால், நமது தலைவர்களுக்கு எவ்விதத் தொந்தரவும் கொடாமல், அவர்களுக்குப் பக்க பலமாக மக்கள் உறுதியுடன் நிற்க வேண்டும்.

நாற்றைம்பது வருஷமாக நீங்காத குறைகளெல்லாம் சுதந்திரம் கிடைத்த தட்சணமே நீங்கிவிட வேண்டும்; இல்லாவிட்டால் தொல்லை கொடுப்போம் என்று ஆரம்பிக்கிறவர்கள், சுதந்திர விரோதிகள்; தேசத் துரோகிகள்.

இடிந்து தகர்ந்து குப்பையும் கூளமும் நிறைந்து கிடக்கும் வீட்டை ஒரே நாளில் சீர்திருத்திவிட முடியுமா? வீட்டையே சீர்திருத்த முடியாதென்றால், நாற்றைம்பது வருஷம் அடிமையில் உழன்ற நாட்டை உடனே சீர்திருத்திவிட முடியுமா?

அப்படிச் சீர்திருத்துவதற்கு நமது தலைவர்களுக்கு ஐந்து வருஷத் தவணையாவது கொடுக்க வேண்டாமா?

மகாத்மாவையும், ஜவாஹர்லாலையும், வல்லபாய் பட்டேலையும், ராஜாஜியையும்விட பொது மக்களின் க்ஷேமத்தில் அக்கறையுள்ளவர்களோ, ஆர்வம் உள்ளவர்களோ வேறு யாரும் இந் நாட்டில் இல்லையென்பது சத்தியம். அத்தகைய தலைவர்களுக்குத் துணை நிற்காமல் தொல்லை கொடுப்பது பெரும் பாவம்; தேசத் துரோகம்; நம்முடைய தலையில் நாமே மண்ணைப் போட்டுக் கொள்ளும் மௌடீகம். நாட்டின் பொது நலத்தில் அக்கறையுள்ளவர்கள் ஒரு நாளும் அத்தகைய பாதகத்தைச் செய்யக் கூடாது.

* * *

சுதந்திர ஆனந்தத் திருவிழாக் கொண்டாட வேண்டிய இந்தத் தருணத்தில், "ஐயையோ!" என்று கூவி, வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு, துக்கம் கொண்டாடும் சில புத்திசாலிகளும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்குக் காரணம் இயற்கை மௌடீகமாகவும் இருக்கலாம்; சுயநல அடிப்படை கொண்ட விஷம புத்தியாகவும் இருக்கலாம்.

இந்தியாவைப் பிளந்து பாகிஸ்தான் தனியாகப் பிரிக்கப்பட்டதை இவர்கள் துக்கம் கொண்டாடுவதற்குக் காரணமாகச் சொல்கிறார்கள்.

சுதந்திர இந்தியாவில் ஒரே சுதந்திர அரசாங்கம் ஏற்பட்டால் சிலாக்கியமான காரியந்தான்; சந்தேகமில்லை.

ஆனால் அரசாங்கம் இரண்டாக நடந்தாலும் சரி, மூன்றாக நடந்தாலும் சரி, சுதந்திரம் சுதந்திரந்தானே! இல்லையென்று யாரும் சொல்ல முடியாதல்லவா?

அரசாங்கம் இரண்டாக அல்லது மூன்றாக ஆனபோதிலும், தேசம் ஒன்றே ஒன்றுதான். இமயமலை முதல்

குமரி முனை வரையில் பரந்துள்ள பாரத தேசத்தை யாரும் துண்டு படுத்திக் கொண்டு போய்விட முடியாது!

பிரிந்துபோன பாக்கிஸ்தான் பிரதேசங்களை மறுபடியும் ஏக இந்திய அரசாங்கத்தின்கீழ்க் கொண்டு வருவது அசாத்தியமான காரியம் அல்ல; நடக்க முடியாத காரியமும் அல்ல.

மகாத்மா, ஜவாஹர்லால் முதலிய நமது அருமைத் தலைவர்களை நாம் உறுதியாகப் பின்பற்றி, சில வருஷ காலம் எல்லாக் கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு கட்டுப்பாடாகக் காரியம் செய்தோமானால் மீண்டும் அகில இந்தியாவிலும் ஒரே அரசாங்கம் ஏற்படக் கூடும்.

கட்டுப்பாட்டைக் குலைத்து, தலைவர்களை அவமதித்து, தறிதலைத்தனமாக மக்கள் நடந்து கொண்டார்களானால், தேசம் ஏக அரசாங்கமாவது நடவாத காரியம். அரும்பாடு பட்டுக் கிடைத்த சுதந்திரத்தை நிரந்தரமாக்கிக்கொள்ளவும் முடியாமற் போகலாம்.

இதை யெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்து இந்த ஆனந்த சுதந்திரத் திருநாளில் ஒரு திடசங்கல்பம் செய்து கொள்வோம்.


உலக சரித்திரத்தில் என்றும் இல்லாத விதமாக அன்னிய ஆட்சியிலிருந்து நம்மை இத்தனை எளிதில் விடுதலை செய்து பாரத நாட்டில் சுதந்திரத்தை ஸ்தாபித்த அருமைத் தலைவர்களைப் பிடிவாதமாகப் பின்பற்றுவது என்று உறுதி கொள்வோம். நமது சொந்த சுயநலங்களை மறந்து, நாட்டின் பொது நலமே பெரிதென அறிந்து, தலைவர்களின் கஷ்டங்களை உணர்ந்து கட்டுப்பாட்டுடன் நடப்பதென்று பிரதிக்ஞை செய்வோம்.

சுதந்திரம் நிரந்தரமாவதற்கு அது ஒன்றே மார்க்கம். தேச நன்மைக்கும் மக்களின் முன்னேற்றத்துக்கும் அது ஒன்றே சாதனம். வேறு வழி கிடையாது.


வாழ்க சுதந்திரம்!

வாழ்கநிரந்தரம்!

டாக்டர் ரவீந்திரநாத டாகூர் ஸ்தாபித்த உலகப் பிரசித்தி பெற்ற சாந்திநிகேதனத்தில் ஆகஸ்டு 8உ ரவீந்திரர் அமரர் ஆன புண்ணிய தினம் கொண்டாடப்பட்டது. அன்று, செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரின் சார்பாகச் சுமார் ஆயிரம் புத்தகங்கள் கொண்ட தமிழ்ப் புத்தகசாலை நன்கொடை அளிப்பதற்காக ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் ஸ்ரீ சாந்திநிகேதனுக்கு விஜயம் செய்தார். அவருடன் "கல்கி" ஆசிரியரும் ஸ்ரீ சின்ன அண்ணாமலையும் சென்றிருந்தனர்.



கவீந்திரரின் புதல்வரும் விசுவபாரதியின் காரியதரிசியுமான ஸ்ரீ ரதீந்திரநாத் டாகூர் ரஸிகமணியை வரவேற்கிறார்.



ஸ்ரீ ரதீந்திர டாகூர் வசிக்கும் 'ரவீந்திர பவனம்' என்னும் கட்டிடத்தில் சென்னையிலிருந்து வந்தவர்களுக்குச் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது. ரஸிகமணிக்கும் ரதீந்திர டாகூருக்கும் நடுவில் இருப்பவர் விசுவபாரதியின் பிரின்ஸிபால் ஸ்ரீ க்ஷிதிமோகன் ஸேன் அவர்கள்.




"தமிழ்ப் புத்தகசாலை விழாவின் ஆரம்பத்தில் விசுவபாரதி மாணவர் — மாணவியர் ரவீந்திர கீதங்களை இனிமையாகப் பாடினார்கள். கடைசியில் மங்கள கீதமும் பாடினார்கள்.




தமிழ்ப் புத்தகசாலை அளிப்பு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைத்துத் திருவிளக்கு ஏற்றி வைத்து, அலங்காரக் கோலம் இட்டு, பூரண கும்பம் வைத்து, வண்ண மலர்கள் தூவி, அழகிய கலை விழாவாக நடத்தினார்கள்.




'ரவீந்திர பவனம்' என்னும் கட்டிடத்தின் தோற்றம். இந்த அழகிய கலைக் கோயிலுக்குள்ளே மகாகவி ரவீந்திரநாதர் நமது முதுமைப் பிராயத்தில் எழுதிய நூற்றுக் கணக்கான ஓவியங்களும் கவீந்திரர் தினசரி உபயோகப்படுத்திய பல பொருள்களும் கண் காட்சியாக வைக்கப் பட்டிருக்கின்றன.




புத்தகங்களின் நெய்யைக்
ரஸிகமணி டி. கே. சி..
ஸ்ரீ ராஜேந்திர டாகூர் முதலிய
ரு எடுத்துச் சொன்னார்கள்.



சென்னை விருந்தினரை விசுவ
பாரதியிலுள்ள பல முக்கியமான
வித்யாஸ்தானங்களுக்கும்
அழைத்துச் சென்று காட்டினார்கள்.




இந்தியாவிலேயே இணையற்ற ஓவியக் கலைஞரான ஸ்ரீ நந்தலால் போஸ், 'கலை பவனத்துக்கு வரும் ரஸிகமணியை மகிழ்ந்து வரவேற்கிறார். இடையில் நிற்பவர், ஸ்ரீ ரவீந்திரரின் காரியதரிசியான ஸ்ரீ க்ஷிதீஸ் ராய்.




கலை பவனத்தினுள்ள சிற்ப சித்திரக் காட்சிகளை ரஸிகமணிக்கு ஸ்ரீ நந்தலால் போஸ் காட்டுகிறார்.



மகாகவி ரவீந்திர நாதர் அமரர் ஆன புண்ணிய தினத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி, 'விருக்ஷா ரோபணம்' என்னும் மரம் நடும் திருவிழாவாகும். இந்தத் திருவிழா நடக்கும் இடத்துக்கு மாணவிகள் நடனம் பயின்று கொண்டு செல்கிறார்கள்.



விருக்ஷா ரோபண விழா நடக்கும் இடத்தில் பஞ்ச பூதங்களுக்குப் பிரதிநிதிகளாகத் தக்க அலங்காரங்களுடன் ஐந்து பாலர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.



மேற்படி விழாவைப் பார்ப்பதற்குச் சௌகரியமாகச் சென்னை விருந்தினருக்குத் தகுதியான இட வசதி செய்து கொடுத்திருந்தார்கள்.



ஸ்ரீ ரதீந்திர டாகூரின் மனைவியார் (மகாகவி ரவீந்திரரின் செல்வ மருமகள்) வைக்கப் போகும் செடியை நீராட்டி மலர் மாலை சூட்டிக் கொடுக்கிறார்.



சித்திர விசித்திரமாகக் கோலம் போட்டு அலங்கரித்திருந்த இடத்தில், செடி வைக்கப்பட்டு, திரு விழா பூர்த்தி அடைகிறது.



அணுகுண்டு யுகத்தில் அன்பாகிற ஆயுதத்தினால் ஆங்கிலேய வல்லரசை வென்று பாரத நாட்டுக்கு வீர சுதந்திரம் கொண்டு வந்த மகாத்மா காந்தி.



சர்வதேச அரசியலின் சாணக்கியரும், மும் முறை ராஷ்டிரபதி பீடத்தை அலங்கரித்தவரும், பாரத
மின் அருந்தவப் புதல்வரும், இந்தியாவின் முடிசூடா மன்னருமான பண்டித ஜவாஹர்லால்




சுடச்சுட தங்கத்தின் மாற்று அதிகமாவதுபோலச் சிலர் ஆற்றத் ஆற்ற அதிக சோபையுடன் விளங்கி வருபவரும், அரசியல் ஞானியும், தியாக சீலரும், தீர்க்க தரிசியுமான ராஜாஜி.



பார்டோலி சத்தியாக்கிரகத்தில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தைப் பணியச் செய்து வெற்றி பெற்ற வீரரும், இந்தியாவின் இணையற்ற தலைவர் திலகங்களில் ஒருவருமான சர்தார் வல்லபாய் பட்டேல்.



புத்தர் மகான் ஜனித்த மாகாணத்தில் பிறந்து புத்தரின் தெய்வீக குணங்களும் வாய்க்கப் பெற்ற பாபு ராஜேந்திரப் பிரசாத்.





பகிரங்கமான சாத்துவிக யுத்தத்தின் தனிப் பெரும் தலைவரான மகாத்மா காந்தியைப் போல், இரகசியப் புரட்சியின் தனிப் பெரும் தலைவரும், இந்திய இளைஞர்களின் உள்ளத்தைத் தமது வீர தீரச் செயலினால் கவர்ந்தவருமான ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணன்.

'எல்லைக் காந்தி' என்று தனிப் பெரும் புகழ் பெற்றவரும், மகாத்மா காந்தி வகுத்துள்ள சாத்துவிகக் கொள்கையைத் தமது உயிரினும் பெரிதாக மதித்து அதைப் பாதுகாத்து வருபவரும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பரம வைரியுமான கான் அப்துல் கபார்கான்.





சென்ற முப்பது வருஷங்களுக்கு மேலாக தேசத் தொண்டில் ஈடுபட்டிருப்பவரும், மகாத்மா காந்தியின் அத்தியந்த சீடர்களில் ஒருவரும், இந்தியா சுதந்திரம் பெறும் போது காங்கிரஸ் அக்ராசனர் பதவியை வகிக்கும் பாக்கியம் பெற்றவருமான ஆச்சாரிய கிருபளானி.

இருபத்தி நான்கு வயதுக்குள் மத, அரபிய நூல்களைக் கரைத்துக் குடித்த மகா மேதாவியும், நாற்பது வயதுக்குள் ராஷ்டிரபதி பீடத்தில் ஏறும் கௌரவம் பெற்று ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்துக்கு உதாரண புருஷராக விளங்கி வருபவருமான அபுல்கலாம் ஆஸாத்.



கவிபாரதியும், பெண்களின் உலகத்துக்கே ஒரு மகாராணியும், தேசிய காங்கிரஸ் அக்ராசனப் பீடத்தை அலங்கரித்த,—ஒரு மாகாண கவர்னராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணியுமான ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.




வேஷதாரிகளின் வெற்றி


பிரிட்டிஷார் வியாபாரிகளாக வந்து....
1600
சகோதரர்களே! நான் ஒரு சாதாரண வியாபாரி. வயிற்றுப் பிழைப்புக்காகவே உங்களை நாடி வந்திருக்கிறேன்.
② இந்தியக் கைத்தொழில்களை நாசம் செய்தார்கள்.
③ துணிப் பிச்சை கேட்கும் கோலம்
முதலில் காசை வைத்தால்தான் துணி கொடுக்க முடியும்.
பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்கள் அளித்த பரிசு! ④
1857 சுதந்திர யுத்தத்தில் துரோகிகளின் சதி
⑥
பல்லைக் காட்டும் பதர்கள்
1858

காங்கிரஸ் ஜனனம்



885டிசம்பர் 28 : காங்கிரஸ் ஜனனம்
7
உன்னையும் என்னையும் இந்தியா முழுவதையும் காப்பாற்றப் போவது இந்தக் குழந்தைதான்.
காங்கிரஸ்
தாதாபாய் னௌரோஜி
கொடியைக் கண்டு மிரளும் காளி
8
திலகர்
திருவாழத்தான் குதிரை
1909
இந்தியா
10
தென்னாப்பிரிக்கா அனுபவங்கள்
இந்தியாவுக்குக் காந்திஜி விஜயம்
பிரிட்டிஷ் துணிகள் பகிஷ்காரம்
11
பிரிட்டிஷாருக்கு இரத்த தானம்
1914-18
முதலாவது உலக யுத்தம்
இந்தியா
பிரிட்டிஷாரின் வெகுமதி
1919
13
பசுகொலை
இந்தியா

தர்ம யுத்தம்




(16) கலாசாலைகள் காலியாயின
(15)
(17) ஆட்டுத் தோல் போர்த்திய
ஓநாயின் ஓட்டம் ௧௯௨௮
உப்புச் சத்தியாக்கிரகம்
1930
தண்டி யாத்திரை
(19) அவசரச் சட்ட ஆட்சி
அவசரச் சட்டம்
(20) காந்தி-இர்வின் ஒப்பந்தம்
1931

சர்ச்சில் யந்திர வேலை




"வெளியேறுக!"



1942 ஆகஸ்டு 8-ந்தேதி தீர்மானம்
27
சர்ச்சிலின் "செங்கோல்"
28
ஆகஸ்டு அமளி!
29
நேத்தாஜி சுபாஷ் போஸுக்கு ஜே! ஜேய் ஹிந்த்!
1945
30
இடைக்கால சர்க்கார் அமைப்பு
இடைக்கால சர்க்கார்
31
1946 டிசம்பர் 9: அரசியல் நிர்ணய மகாசபை ஜனனம்
உங்களுக்காகக் காத்திருக்க முடியாது.
அரசியல் நிர்ணய சபை
32
பாரதநாடு புற்றியெரியும் போது பாடுகிறர் வேவல்!
33
வேவலுக்கு விடையனுப்பு உபசாரம்!
வகுப்புக் கலவரங்கள்
34

தாயின் மணிக்கொடி பாரீர்!





சுமார் முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் ஒரு நாள். கைலையங்கிரியிலுள்ள பரமேசுவரனுடைய மாளிகை. அங்கே அவர் தனியாக உட்கார்ந்து யோசனை செய்துகொண் டிருந்தார். அப்பொழுது பார்வதி தேவியார் வந்து பார்த்தார்.

“இதென்ன, வெகு நேரமாக யோசனையில் ஆழ்ந்திருக்கிறீர்களே! ஏதோ பெருங் கவலை தங்கள் மனத்தில் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறதே!” என்று கேட்டார்.

அதற்குப் பரமேசுவரர், “ஆமாம், பெருங் கவலைதான். இதுவரை எனக்குக் கவலை உண்டானதில்லை, இப்பொழுதுதான் உண்டா யிருக்கிறது!” என்று சொன்னார்.

“அப்படி என்ன கவலை புதிதாக முளைத்திருக்கிறது?”

“நாம் ஆதியில் பெற்ற மக்கள் உனக்குத் தெரியுமே — இந்திய மக்கள், அவர்களைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறது.”

“அவர்களைப் பற்றி என்ன கவலை?”

“என்ன கவலையா! எத்தனை ஆயிரம் வருஷங்களாக அவர்களுக்கு அரசு புரியக் கற்றுக் கொடுப்பது? இன்னும் அவர்கள் அந்த வித்தையை அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறார்களே? அவர்களுக்கு யாரைக் கொண்டு கற்பிக்கலாம்? இதைப்பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.”

“இதைப்பற்றி இவ்வளவு தூரம் சிந்திப்பானேன்? நாம் சிருஷ்டித்த இந்த பூமியில் அடுத்த கோடியிலிருக்கும் ஆங்கிலேயரிடம் அவர்களை ஒப்படைத்து விட்டால் போதுமே!”

“ஆமாம், அதுதான் சரியான யோசனை! அப்படியே செய்கிறேன். நீயே என் மதிமந்திரி; உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்?”

“எனக்குக் கைம்மாறு வேண்டாம். ஆங்கிலேயருக்குத்தான் என்ன கைம்மாறு செய்ய முடியும் என்று தாங்கள் யோசிக்க வேண்டும்!”

“அதைப்பற்றிப் பின்னால் யோசிப்போம்” என்று கூறிவிட்டுப் பரமேசுவரர் ஆங்கில நாட்டுக்குப் பிரயாணமாகிக் காடு மலைகளை யெல்லாம் கடந்து போய் அந்த நாட்டை அடைந்தார். அவர்களிடம் விஷயத்தைச் சொல்லவே அவர்கள் அந்தக் கஷ்டமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். ஆயினும் பரமேசுவரர் படும் மனோவேதனையைக் கண்டு ஆங்கிலேயரின் மனம் இளகிவிட்டது. இறுதியில் அதை எடுத்துக் கொள்ளச் சம்மதித்தார்கள். அதனால்தான் அவர்கள் 1600-ம் வருஷத்தில் இந்திய நாட்டுக்கு வர நேர்ந்தது.



ஸ்ரீ பொ. திரிகூடசுந்தரம்

இந்தமாதிரி நடந்ததோ இல்லையோ—இப்படி நடந்ததாகத்தான் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் இருந்த நமது தேச பக்த சிகாமணிகள் கூறி வந்தார்கள். அந்தக் காலத்தில் வங்கப் பெருநாவலராக இருந்த சுரேந்திரநாத் பானர்ஜி, "இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சம்பந்தம் இறைவனாலேயே ஏற்பட்டதாகும்!" என்று ஒவ்வொரு பிரசங்கத்திலும் கூறி வந்தார்.

ஆங்கிலேயர்களும், இந்தியர்கள் சுயராஜ்யம், சுதந்திரம் என்று பேசும்பொழுதெல்லாம் தாங்கள் இந்த நாட்டுக்கு இறைவனால் ஏற்படுத்தப் பெற்ற தர்மகர்த்தர்கள் என்றே கூறி வந்தார்கள். ஆனால் உண்மை யாதெனில், ஆங்கிலேயர்களை இறைவன் இந்த நாட்டில் தர்மகர்த்தர்களாக நியமிக்கவுமில்லை; அவர்கள் இந்த நாட்டுக்கு அரசு புரியும் நோக்கத்துடன் வரவுமில்லை. அவர்களுடைய ஆதி நோக்கமெல்லாம் பொன் விளையும் பூமி என்று பூலோகமெங்கும் பெயர் பெற்றிருந்த இந்தியாவுடன் வர்த்தகம் செய்து செல்வம் தேட வேண்டும் என்பதேயாகும்.

அப்படியே அவர்கள் 1650-ம் வருஷம் வரையில் வியாபாரிகளாகவேதான் இருந்தார்கள். ஆனால், பிறகு அவர்கள் வியாபாரம் செய்வதுடன், நாடு சேர்க்கும் வேலையிலும் ஈடுபட ஆரம்பித்தனர். அவர்கள் ராஜதந்திரத்திலும் பிரித்தாளும் சூழ்ச்சியிலும் சமயோசித புத்தியிலும் சிறந்தவர்களாயிருந்தார்கள்.

1757-ம் வருஷத்தில் அவர்கள் வங்காளத்தில் தவறான வழியில் வியாபாரம் செய்து வந்தது, அங்கிருந்த சுராஜ தௌலா என்னும் வங்க அரசருக்குப் பிடிக்கவில்லை. அதனால் இருதரப்பாருக்கும் பிளாஸி என்னும் இடத்தில் போர் நடந்தது. ஆங்கில 'வீரர்' கிளைவ் வாகை சூடினார். சுராஜ தௌலா கொலையுண்டார். இந்த வெற்றிதான் ஆங்கில ஆட்சிக்கு அடிகோலியது.

அதன் பின் அவர்களுடைய அரசு நான்கு திசையிலும் பரவ ஆரம்பித்தது. டாக்டர் நான்ஸிலீவ் கூறியிருப்பதுபோல், வஞ்சனையும் சூதும் கொடுமையும் துரோகமும் செய்து நாட்டை எளிதில் தம் வசமாக்கிக் கொண்டார்கள். 1856-ம் வருஷம் ஆகஸ்டுக்குள் நாட்டில் மூன்றில் இரண்டு பாகம் கம்பெனியின் ஆட்சிக்குள் வந்து சேர்ந்து விட்டது. மற்ற ஒரு பாகத்தை ஆண்டு வந்த சுதேச மன்னர்கள் கம்பெனிக்கு அடங்கி ஒடுங்கிக் கிடந்தார்கள்.

அலக்ஸாண்டர் காலம் முதல் தங்கமயமாக இருந்த இந்த நாடு, பின்னர் பரம தரித்திர நிலையை அடைந்து விட்டது. அரச குடும்பத்தார்கள் சிம்மாசனம் இழந்தார்கள். விவசாயிகள் வாடி வதங்கினார்கள். வியாபாரம் க்ஷீணித்துப் போய் விட்டது. இராணுவத்தார் இட்ட வேலை செய்யும் அடிமைகளாகி விட்டார்கள்.

சுதந்திரப் போர்

1857-ம் வருஷம்தான் இந்தியப் போர் வீரர்கள் முதன் முதலாக இந்த அநியாய ஆட்சியை அடியோடு தொலைத்து விட்டுச் சுதந்திர அரசை ஸ்தாபிப்போம் என்று கொதித் தெழுந்தார்கள். சுதேச மன்னர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து போர் தொடுக்க ஆரம்பித்தார்கள். "தீன் தீன் அல்லாஹோ அக்பர்!" "ஹரஹர மகாதேவ்!" என்ற கோஷங்கள் வானத்தைப் பிளந்தன. முஸ்லிம்களுக்கு விரோதமாயிருந்த மகாராஷ்டிரர்கள்கூட இந்தப் புரட்சி இயக்கத்தில் கலந்து கொண்டார்கள். ஜான்ஸி ராணி செய்த போர்ச் செயல்கள் ஆங்கில சேனாதிபதிகளையும் கூடத் திகைக்கும்படி செய்தன.


ஆயினும் பல சுதேச அரசர்கள் துரோகம் செய்ததால், ஆங்கிலேயரே வெற்றி கண்டார்கள். இந்தப் புரட்சியை நாம் "இந்திய சுதந்திரப் போர்" என்று அழைக்கின்றோம். ஆங்கிலேயர் "சிப்பாய்க் கலகம்" என்று கூறுகிறார்கள்.

அந்தப் போரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் உண்மை இதுதான்: இந்திய சுதந்திரத்துக்கு 1600-ம் வருஷத்தில் ஏற்பட்ட கிரகணம், 1857-ம் வருஷத்தில்தான் விட்டு வெளியாக ஆரம்பித்தது. அன்று முதல் அது சிறிது சிறிதாக நீங்கிக் கொண்டே வந்தது.

ஆங்கிலேயர்கள் இந்த விதமான புரட்சி இனிமேல் நடவாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். இந்தியச் சிப்பாய்களுக்குச் சுதந்திர உணர்ச்சி ஏற்படாதபடி 'சுடு!' என்றால் உடனே சுடும்படிச் செய்து விடலாம். ஆனால், இந்தப் பெரிய தேசத்தில் ஆங்கில ஆட்சி ஸ்திரமாய் இருப்பதற்கு அது போதுமா, என்ன?

ஆகவே, ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் ஆங்கில நாட்டை ஆண்ட ரோம் தேசத்தாரைப் பின்பற்றுவதென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அந்த ரோம் தேசத்தார் ஆங்கில நாட்டைச் சில காலம் ஆண்ட பிறகு, அந்த நாடு வேண்டாம் என்று வெளியேறியவர்கள். அவர்கள் வெளியேறுவதைக் கண்டு, ஆங்கிலேயர் அடிமை யொழிந்தது என்று ஆனந்தப்படுவதற்குப் பதிலாக, "ஐயோ! எங்களை விட்டு விட்டுப் போகிறீர்களே!" என்று அழ ஆரம்பித்தார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு ரோம் நாகரிகத்தில் உண்டாய்விட்ட மோகமே யாகும்.

அதேமாதிரி இந்தியர்களுக்கும் ஆங்கில நாகரிகத்தில் மோகம் உண்டாகும்படி செய்துவிட்டால் அவர்களை என்றென்றும் அடிமைகளாக வைத்திருப்பதற்கு ஏற்ற சங்கிலி அதைவிட வேறு கிடையாது என்று ஆங்கிலேயர்கள் தீர்மானித்தனர்.



அப்படியே புரட்சி நடந்த மறு வருஷத்தில் சர்வகலாசாலைகளை நிறுவி ஆங்கில நாகரிகம், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை ஆகியவற்றை நாடெங்கும் பரப்ப ஆரம்பித்தார்கள். அத்துடன் ஆங்கிலம் கற்றவர்களுக்கு உத்தியோகம் கொடுத்தும், ஐசுவரியமுடையவர்களுக்குப் பட்டங்கள் கொடுத்தும் ராஜ விசுவாசிகளாகச் செய்தார்கள்.

இருந்தாலும், அநேக இடங்களில் இரகசியமாக மறுபடியும் புரட்சி செய்வதற்கான வேலைகள் நடைபெறலாயின. இவற்றை ஆங்கில உத்தியோகஸ்தரான ஏ. ஓ. ஹியூம் என்பவர் அறிந்ததும், இப்படி நாட்டில் ஏற்பட்டு வரும் இரகசிய இயக்கம் அபாயமான வழியில் போய் விடாதபடி தடுக்க வேண்டும் என்று எண்ணினார். இதைப் பற்றி வைஸ்ராய் டப்பரினிடம் யோசித்து தேச மகாசபை ஒன்று ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார். அதுதான் இப்பொழுது 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்று வழங்கி வரும் தனிப்பெரும் சுதந்திர ஸ்தாபனமாகும்.

வேண்டும், விடுதலை!

இந்தக் காங்கிரஸ் 1885-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ந் தேதி பம்பாயில் கோகுலதாஸ் தேஜ்பால் சமஸ்கிருத கலாசாலை மண்டபத்தில் உமேச சந்திர பானர்ஜியின் தலைமையில் கூடியது. அங்கு கூடியிருந்த தேசபக்தர்கள் அப்போது சுயராஜ்யத்தைப் பற்றிக் கனவுகூடக் காணவில்லை. அவர்கள் காங்கிரஸ் கூடும்பொழுதெல்லாம் ராஜ விசுவாசத் தீர்மானத்துடனேயே தங்கள் காரியங்களைச் செய்து வந்தார்கள். சர்க்காருக்கு ஜனங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லுவதும், சர்க்கார் உத்தியோகங்களை இந்திய மக்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுமாக அவர்களுடைய கிளர்ச்சி இருந்தது. இந்த விதமாகவே காங்கிரஸ் மகாசபை இருபது வருஷ காலம், அதாவது 1905-ம் வருஷம் வரை நடந்து வந்தது.

1906-ம் வருஷத்தில் கல்கத்தா காங்கிரஸில் தலைமைவகித்த தேசபக்தசிகாமணி தாதாபாய் நௌரோஜி, "இனி நமக்கு வேண்டியது சுயராஜ்யமே! அதைக் கிளர்ச்சி செய்து பெறுவோம்!" என்று கூறினார்.

திலகர், பிபின் சந்திரபாலர் போன்றவர்கள், "வெறுங் கிளர்ச்சி போதாது; சுதேசி, பகிஷ்காரம், தேசியக் கல்வி போன்ற ஆயுதங்களைக் கொண்டே சுயராஜ்யப் போர் நடத்த வேண்டும்" என்று கூறினார்கள்.

"தென்னாடு முழுவதிலும் ஒருவர்தான் வீரர்!" என்று யாரைத் திலகர் பெருமான் கருதியதாக ராஜாஜி கூறுகின்றாரோ, அந்த வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் அப்போதே தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் ஓட்டுவதற்காகப் பெரு முயற்சிகள் செய்தார்.

அப்பொழுது திருநெல்வேலியில் கலெக்டரா யிருந்த விஞ்ச், பிள்ளை அவர்களைப் பார்த்து,

"கப்ப லேறுவாயோ?—அடிமை
கடலைத் தாண்டுவாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை
கோற்றத் தவிசு முண்டோ?"

என்று கூறியதாகவும், அதற்குப் பிள்ளையவர்கள்,

"சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்; இனி அஞ்சிடோம்!
எந்த மாருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ, அவ மானமோ?"

என்று பதில் கூறியதாகவும் அவருடைய தோழர் கவிச் சக்கரவர்த்தி பாரதியார் பாடியிருக்கின்றார்.

இந்த மாதிரியாகப் பிள்ளை அவர்கள் எத்தனையோ தேச முன்னேற்றத்துக்கான காரியங்கள் செய்தார். அதன் பயனாக அவர் சிறை சென்றதையும்; சிறையிற் பட்ட வருத்தங்களையும் விவரித் துரைத்தால் நாமக்கல் கவிஞர்,

"கல்லான மனத்தவரும்
கண்ணீர் கொட்டி
கனல்பட்ட வெண்ணெயெனக்
கரைவார் நிற்க!"

என்று கூறுவதுபோல்தான் ஆகும்.

பஞ்சாப் படுகொலை!

தேசபக்தர்களிடையே மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று இரண்டு கட்சிகள் ஏற்படலாயின. சர்க்கார் தீவிரவாதிகளை அடக்கிவிட முயன்றார்கள். திலகரைப் பிடித்து ஆறு வருஷ காலம் பர்மாவிலுள்ள மாண்டலே நகரத்தில் சிறை வைத்தார்கள்.



ஆயினும் மிதவாதிகள் சர்க்காருடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கத்தார் மிண்டோ — மார்லி சீர்திருத்தம் என்று வழங்கும் அரசியல் சீர்திருத்தத்தை அளித்தார்கள். அது இந்திய அரசியலை எந்த விதத்திலும் சீர்திருத்தவில்லை. அதற்குப் பதிலாக அது சீர் குலைக்கவே செய்தது. அன்று ஏற்படுத்தப்பட்ட 'தனித் தொகுதி முறை'யே இன்றுவரை நம்முடைய சுதந்திர இலட்சியத்துக்கு முட்டுக் கட்டையாக இருந்து வருகிறது.

1914-ல் முதலாவது உலக மகா யுத்தம் தோன்றவே, நாட்டில் சுதந்திர உணர்ச்சி அதி உக்கிரமாக வளர ஆரம்பித்தது. அனி பெஸண்டு அம்மையாரும் லோகமான்ய திலகரும் ஹோம் ரூல் சங்கம் அமைத்துத் தீவிரமாகக் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனாக, தீவிரவாதிகளும் மிதவாதிகளும் ஒன்று சேர்ந்து, "சுயராஜ்யம் வேண்டும்" என்று கேட்டனர். ஆங்கில அரசாங்கத்தார் "படிப்படியாகப் பொறுப்பாட்சி" என்னும் மான்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தை வழங்கினர். ஆயினும், அதே சமயத்தில் அதிகாரிகள் சுதந்திர உணர்ச்சி வளர்வதை விரும்பாததால், 1918-ம் வருஷம் யுத்தம் முடிந்த சமயத்தில் ரௌலட் சட்டத்தை இயற்றினார்கள்.

இந்தக் கொடிய சட்டம் வேண்டாம் என்று எல்லோரும் ஒருமுகமாக எதிர்த்தார்கள். காந்தியடிகளின் யோசனையின் பேரில் லட்சக் கணக்கான ஜனங்கள் கையெழுத்திட்டு மகஜர் அனுப்பினார்கள். ஆனால் சர்க்கார் எதையும் லட்சியம் செய்யவில்லை.

ஜனங்களுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. அதை நல்வழியில் திருப்பும் பொருட்டுக் காந்தியடிகள் 1919-ம் ஆண்டு



ஏப்ரல் 6-ந் தேதி எல்லோரும் உண்ணாவிரதமிருந்து பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று யோசனை சொன்னார். ஜனங்கள் அவ்விதமே செய்தார்கள்.

இதைக் கண்டதும் பஞ்சாப் கவர்னர் ஓட்வியர், இது பிரிட்டிஷாருக்கு விரோதமான கிளர்ச்சி என்று எண்ணினார். ஆகவே அவர் பஞ்சாபுக்குச் சென்ற காந்தியடிகளைக் கைது செய்து பம்பாய்க்கு அனுப்பினார்; பஞ்சாப் தலைவர்கள் இருவரையும் நாடு கடத்தினார். இதன் காரணமாக அங்கே ஜனங்கள் கொதித்தெழுந்தார்கள்.

அவ்வளவுதான்; கவர்னர் இராணுவ ஆட்சி ஏற்படுத்தி விட்டார். அப்போது சர்க்கார் நடத்திய அட்டூழியங்கள் எட்டிலடங்கா. அமிருதசரஸில் ஜாலியன்வாலா பாக் தோட்டத்தில் சர்க்கார் செய்த படுகொலையை ஒரு நாளும் மறக்க முடியாது.

ஒத்துழையாமை!

இந்தச் சமயத்தில் துருக்கி நாட்டை ஆளுக்குக் கொஞ்சமாக யுத்தத்தில் வெற்றி பெற்ற ஐரோப்பிய தேசங்கள் பங்கு போட்டுக் கொண்டன. இதை ஆட்சேபித்தும், பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம் தேடவும், சுயராஜ்யம் பெறவும் வேண்டி காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று யோசனை கூறினார்.

அந்த யோசனையை 1920-ம் வருஷத்தில் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மகாசபை அங்கீகரித்தது. அதில் பட்டங்களைத் துறத்தல், சட்ட சபைகளையும் கலாசாலைகளையும் பகிஷ்கரித்தல், அன்னிய நாட்டுத் துணிகளை விலக்கிக் கதர் அணிதல், தீண்டாமை ஒழித்தல், இந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஸ்தாபித்தல் முதலியவை முக்கியமான அம்சங்களாக இருந்தன.

அதன் பயனாக இந்தியாவில் தலை சிறந்த வக்கீல்கள் என்று பெரும் புகழும் பெற்றிருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரும் தேசபந்து ஸி.ஆர். தாஸும் பண்டித மோதிலால் நேருவும் தங்கள் தொழிலைத் துறந்து, தங்கள் முழு நேரத்தையும் தேச சேவையில் ஈடுபடுத்தலானார்கள். இவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நூற்றுக் கணக்கான வக்கீல்கள் கோர்ட்டுகளுக்குப் போகாமல் நின்று விட்டார்கள். அநேகர் தாங்கள் கோர்ட்டுகளில் தொடர்ந்திருந்த வழக்குகளை நடத்தாமல் விட்டுவிட்டார்கள். இன்னும் பலர் வழக்குத் தொடராமல் பணங்களை இழக்கும் தியாகத்தைச் செய்தார்கள்.

அது போலவே நாடெங்கும் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வெளியேறினார்கள். குஜராத் வித்யாலயம் போன்ற தேசியக் கல்விச் சாலைகள் பல இடங்களில் தோன்றின. அவைகளில் முப்பத்தோராயிரம் இளைஞர்கள் சுதந்திரக் கல்வி பயின்றார்கள்.

காந்தியடிகளின் ஆணையைச் சிரமேல் தாங்கி ஐம்பதாயிரம் ஆண்களும் பெண்களும் சிறை புகுந்தார்கள். ஆயிரக் கணக்கான ராட்டினங்கள் சுழன்றன. தீண்டாமையும் மதுபானமும் குறைந்து வந்தன. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்தார்கள்.

உப்புச் சத்தியாக்கிரகம்

இதுவரை சுயராஜ்யமே இந்திய மக்களின் லட்சியமாக இருந்தபோதிலும், அதை அடைவதற்கான சாதனம் மட்டும் ஐயந்திரிபற விளங்காமல் இருந்து வந்தது. நம்மிடம் ஆயுத பலமோ அணுவளவு கூடக் கிடையாது. ஆங்கிலேயரிடம் மண்டியிட்டுக் கேட்டாலோ அவர்கள் அசைவதாயில்லை. இந்த நிலையில் என்ன செய்வது என்று தேசபக்தர்கள் எல்லோரும் திகைத்து நின்றார்கள்.

“நீங்கள் திகைக்க வேண்டாம்; இன்னுமோர் ஆயுதம் உள்ளது. அதற்குத் தோல்வி என்பதே கிடையாது. ஆயுத பலமும் தேவையில்லை. அதுதான் சத்தியாக்கிரகம் என்னும் ஆத்ம சக்தி!” என்று காந்தியடிகள் கூறினார்.

அதன் காரணமாக அரசாங்கத்தார் அவரை 1922-ல் சிறையில் இட்டார்கள். சர்க்கார் அடக்குமுறையைக் கண்ட தேசபக்தர்கள், மோதிலால் நேருவின் தலைமையில் 1928-ம் வருஷம் கூடி ஒரு திட்டம் வகுத்தார்கள். அவ்வருஷம் கூடிய காங்

ரஸ் மகாசபை, அந்தத் திட்டப்படி குடியேற்ற நாட்டு அந்தஸ்தை 1929-ம் ஆண்டு டிசம்பர் 31-க் தேதிக்குள் வழங்காவிடில் பரிபூரண சுயராஜ்யமே நாட்டின் லட்சியமாயிருக்கும் என்று அரசாங்கத்துக்கு அறிவித்தது.

அரசாங்கம் இசையவில்லை. அதனால் 1929-ம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபை ஜவாஹர்லால் நேரு தலைமையில் கூடி, "பரிபூரண சுயராஜ்யமே எங்கள் லட்சியம்" என்று முடிவு செய்தது.

இந்த லட்சியத்தை அடைவதற்காக 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் கூடிய காரியக் கமிட்டி சட்டமறுப்புப் போர் தொடங்க ஏற்பாடு செய்தது. காந்தியடிகள் வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதினர். எவ்விதப் பலனும் உண்டாகவில்லை.

அதன்மேல் காந்தியடிகள் மார்ச் 12-ந் தேதி தண்டியில் உப்புச் சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டார். ஏப்ரல் 5-ந் தேதி உப்பு எடுத்தார். மறுநாள் முதல் நாடெங்கும் ஐயாயிரம் இடங்களிலே ஐம்பது லட்சம் பேர் சத்தியாக்கிரகம் செய்தார்கள். நமது தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவர் ராஜாஜி அவர்கள் வேதாரண்யத்துக்கு ஏராளமான தொண்டர்களைக் கூட்டிச் சென்று உப்புச் சத்தியாக்கிரகம் செய்தார்கள். இவ்விதமாக எங்கு பார்த்தாலும் இங்கிலீஷ்காரர்கள் ஆட்சியை ஒழிப்பதற்காகக் 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வந்தது.' அதில் 'சத்தியத்தின் நித்தியத்தை நம்புவோர்' அனைவரும் சேர்ந்து கொண்டார்கள்.

இவ்விதம் கடற்கரைகளில் தானாக விளைந்து கிடக்கும் உப்பை சர்க்காரின் அநுமதியின்றி எடுத்தார்கள். அதன்பின் உப்பு ஜலத்தை எடுத்துக் காய்ச்சவும் செய்தார்கள். இதனால் சர்க்காருடைய சட்டத்தை மீறினும் சர்க்காருக்கு எவ்வித நஷ்டமுமில்லை. ஆதலால் காந்தியடிகள் தாரசனா என்னுமிடத்துக்குச் சென்று அங்குள்ள உப்பளங்களைக் கைப்பற்றப் போவதாக வைஸ்ராய்க்கு 'நோட்டீஸ்' கொடுத்தார். அதைக் கண்டதும் மே 5-ந் தேதி அரசாங்கம் காந்தியடிகளைக் கைது செய்தது. உடனே 80 வயதான அப்பாஸ் டயாப்ஜி சர்வாதிகாரி ஆகி சத்தியாக்கிரகத்தை நடத்தினர். அவரையும் கைது செய்தார்கள். அதன்பின் ஒருவர்பின் ஒருவராகப் பல தலைவர்கள் சிறையில் அடைக்கப் பட்டார்கள்.

தாரசனா உப்பளத்தருகில் வராதிருக்கும் பொருட்டு, சர்க்கார் முள்வேலி போட்டார்கள். துருப்புகளை நிறுத்தி வைத்தார்கள். தொண்டர்களைத் தடிகொண்டு தாக்கினார்கள். இது போலவே தேசமெங்கும் நடைபெற்றது.

இதே சமயத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அன்னியத் துணி பகிஷ்காரம், கள்ளுக் கடை மறியல், வரிகொடாமை, சர்க்கார் உத்தியோகஸ்தர் சமூக பகிஷ்காரம் முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

இவ்விதம் ஒத்துழையாமைப் போர் எங்கும் மும்முரமாகவே, சர்க்கார் ஊர்வலங்களைத் தடுத்தார்கள். காங்கிரஸ் சபைகளைச் சட்ட விரோதமானவை என்று கூறினார்கள். பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு இட்டார்கள்.

ஆனால் தொண்டர்கள் எதையும் பொருட்படுத்தாமல், முன் வைத்த காலைப் பின் வைக்காமல் இருந்தார்கள்.


வட்டமேஜை மகாநாடு

இப்படியாகச் சத்தியாக்கிரகப் போர் நடந்து கொண்டிருக்கும்போது, சீமையிலே வட்ட மேஜை மகாநாடு நடந்தது. ஆனால் ஆங்கில ராஜதந்திரிகள் காங்கிரஸ்காரர்கள் வராமல் எவ்விதப் பலனும் உண்டாகாது என்று கண்டார்கள்.

அதனால் 1931-ம் வருஷம் ஜனவரி 25-ல் இர்வின் பிரபு காந்தியடிகளையும் காரியக் கமிட்டியினரையும் விடுதலை செய்து, அவர்களுடன் சமரஸம் பேசினர். அதன் பயனாக காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது.



ஏழைகள் உப்பு எடுத்துக் கொள்ளலாம், அவசரச் சட்டங்கள் ரத்து செய்யப்படும், சட்டமறுப்புப் போரை நிறுத்திக் கொண்டு அன்னியத் துணி - மதுபான மறியல் செய்யலாம் என்பது அந்த ஒப்பந்தத்தின் சாரம்.



காங்கிரஸ் வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்ளச் சம்மதித்துக் காந்தியடிகளைத் தங்கள் ஏகப் பிரதிநிதியாக அனுப்பி வைத்தது. ஆனால், அங்கே ஆங்கிலேயருடைய பழைய பிரித்தாளும் முறையே தலைதூக்கி நின்றது. அத்துடன் இந்தியாவில் இர்வினுக்குப் பின் வந்த வில்லிங்டன் ஆட்சியில் ஒப்பந்தப்படி காரியங்கள் நடைபெறவில்லை. ஜவாஹர்லாலும் ஷேர்வானியும் கைது செய்யப்பட்டார்கள். காந்தியடிகள் பம்பாய் வந்து சேர்ந்ததும் வைஸ்ராயைப் பார்க்க விரும்பினார். ஆனால் வைஸ்ராய் சம்மதிக்காமல் அவரையும் பட்டேலையும் கைது செய்தார். மறுபடியும் போர் ஆரம்பமாயிற்று.

ஒன்றரை வருஷத்திற்குப் பிறகு விடுதலை அடைந்த காந்தியடிகள் தேசத்தின் நிலைமையை ஆராய்ந்து சட்ட மறுப்புப் போரை நிறுத்தினார். சர்க்கார் சட்டசபைக்குத் தேர்தல் நடத்தினார்கள். காங்கிரஸ் செத்துப் போய்விட்டது என்று எண்ணினார்கள். ஆனால் காங்கிரஸ்காரரே தேர்தலில் அபரிமிதமான வெற்றி யடைந்தார்கள். அதன் மூலம் காங்கிரஸ் ஒருநாளும் சாகாது என்று ஜனங்கள் சர்க்காருக்கு எடுத்துக் காட்டி விட்டார்கள்.

அரசியல் சீர்திருத்தம்

அதன்பின் 1935-ம் வருஷத்தில் சர்க்கார் அரசியல் சீர்திருத்தச் சட்டமொன்று இயற்றினார்கள். அதை ஏற்றுக் கொண்டு பதவி ஏற்க வேண்டுமா, வேண்டாமா என்று காரியக் கமிட்டியார் யோசித்தார்கள். மகாத்மா காந்தியடிகள், "சர்க்கார் இந்தச் சட்டத்தை நம்முடைய அடிமை விலங்கை இறுக்குவதற்காகச் செய்த சுதந்திரமாக இருந்த போதிலும், நாம் அதே சுதந்திரத்தைக் கொண்டு நம்முடைய அடிமைச் சங்கிலியை முறித்து விடுவோம்!" என்று கூறினார்.

அப்படியே காங்கிரஸ் சட்டசபைத் தேர்தலில் கலந்துகொண்டு எட்டு மாகாணங்களில் பெரும்பான்மையான வெற்றி யடைந்தது. ஆனால், கவர்னர்களுடைய விசேஷ அதிகாரம் மந்திரிகளை வேலை செய்யாமல் தடுக்கக் கூடியதாக இருந்தது. அந்த அதிகாரத்தை ரத்து செய்யும்படியாகக் காங்கிரஸ் கேட்டது. சர்க்கார் சம்மதிக்கவில்லை. என்ன செய்வது என்று தலைவர்கள் திகைத்தார்கள்.

அப்போது ராஜாஜி சென்னை கவர்னரிடம் சென்று, "விஷப் பல் இருக்கட்டும், பிடுங்க வேண்டாம். ஆனால் அதை உபயோகிப்பதில்லை என்று மட்டும் கூறுங்கள்!" என்று கூறினார். அதற்கு மேல் சர்க்கார் சம்மதித்தது. காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைந்தன.

அவைகளுள் நம்முடைய ராஜாஜியைப் பிரதம மந்திரியாகக் கொண்ட சென்னை மந்திரி சபை தேச முழுவதற்கும் வழிகாட்டியாக இருந்து, பல தீவிரமான சீர்திருத்தங்களைச் செய்தது. ராஜாஜி செய்த மூன்று பெரும் நன்மைகளை ஒருநாளும் மறக்க முடியாது. ஆயிரக் கணக்கான வருஷங்களாக ஆண்டவனைத் தரிசிக்க முடியாமல் தடுக்கப்பட்டிருந்த ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றார். நாட்டில் அட்டகாசம் செய்து கொண்டிருந்த கள் அரக்கனைத் துரத்தியடிக்க அடிகோலினார். தேசத்தின் உயிர் நாடியாக வுள்ள விவசாயிகளைக் கூன் விழும்படியாக அழுத்திக் கொண்டிருந்த கடன் பளுவை அகற்றி அவர்களை நிமிர்ந்து நிற்கும்படி செய்தார். இவை சாதாரணமான காரியங்கள் அல்ல. சரித்திரத்தில் பொன் எழுத்தில் பொறிக்கப்படப் போகும் அரிய சேவைகள்.

ஆனால், அவருடைய எண்ணப்படி ஜனங்களுக்கு அதிகமான நன்மைகள் செய்ய முடியாதபடி 1939-ம் வருஷத்தில் யுத்தம்

ர்து சேர்த்தது. “இந்த யுத்தம் நமக்குச் ம்பந்தமில்லாதது, இதில் இங்கிலாந்து ான் நம்மைக் கேளாமலே இறக்கி ிட்டது. அது போகட்டும்; யுத்தத்தின் ட்சியம் யாது, அதில் இந்தியாவுக்கு ன்ன பங்கு?” என்று காங்கிரஸ், பிரிட் ஷ் சர்க்காரைக் கேட்டது. அதற்குச் ரியான பதில் கிடைக்கவில்லை. ஆகவே, க்டோபரில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ல்லாம் ராஜீநாமாச் செய்தன. கவர்ன ுடைய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

ஆகஸ்டு புரட்சி

சர்க்கார் தேசத் தலைவர்களைக் கேளா ல் யுத்தத்தில் ஈடுபடுத்தியதைக் கண்டிக் ும் பொருட்டு, தனிப்பட்ட சட்ட மறுப்பு ரம்பிக்கப்பட்டது. இது ஒரு வருஷம் டந்தது. பிறகு சத்தியாக்கிரகிகள் அனை ரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

1942-ம் வருஷம் பிறந்தது. ஜப்பான் டை யெடுப்பு பயம் அதிகமாயிற்று. தனால் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவைச் மாதானப்படுத்த எண்ணி கிரிப்ஸ் ரையை அனுப்பி வைத்தார்கள். அவர் தலில் சுயராஜ்யம் கொடுக்கப் போவது பால் பேசிய போதிலும், இடைக் காலத் ல் ஏற்படுத்தும் மத்திய சர்க்காரில் இந்தி ர் ஒருவரைத் தேசப் பாதுகாப்பு மந்திரி ாக நியமித்தாலும் அவருக்குப் போது ான அதிகாரங்கள் கொடுப்பதாகக் கூறாத ால், காங்கிரஸ் அவருடைய திட்டத்தை ற்றுக்கொள்ள மறுத்து விட்டது.

அதனால் நாட்டில் அதிருப்தி அதிகப்பட்டு ிட்டது. “அரைக்கணமும் இனி காத் ிருக்க முடியாது. ஆங்கிலேயர் கயில் அதிகாரம் இருக்கும் ரை இந்த நாட்டிற்கு விமோ ணமில்லை. அதனால் அவர்கள் ந்த நாட்டை விட்டு வெளி யறட்டும்!” என்று காந்தி டிகள் கூறினார். ஆகஸ்டு 8உ ரவு அகில இந்திய காங்கிரஸ் மிட்டியில் “வெளியேறுக!” ன்னும் தீர்மானம் நிறை வறியது. வெளியேறாவிட் ால் சட்டமறுப்பு ஆரம்பிப்ப ற்குக் காந்தியடிகளுக்குச் ர்வாதிகாரம் கொடுக்கப் ட்டது. காந்தியடிகள் மறு ான் வைஸ்ராயிடம் சமரஸம் பேசவும், அது முறிந்தால் சத்தியப் போர் துவக்கவும் எண்ணினார்.



ஆனால், சர்க்கார் அதுவரை காத்திராமல் மறு நாள் 9உ அதிகாலையிலேயே அவரையும் காரியக் கமிட்டியாரையும் கைது செய்து விட்டது. அத்துடன் தேசத்தின் பல பாகங்களிலுமிருந்த காங்கிரஸ் தலைவர்களையும் சிறையில் போட்டு விட்டார்கள்.

இதை அறிந்ததும் எங்கும் ஜனங்களுக்கு ஆவேசம் பொங்கி விட்டது. சர்க்கார் மிருகத்தனமாகப் பலாத்காரத்தில் இறங்கிற்று. அதன் காரணமாக ஜனங்களுடைய உணர்ச்சி உச்சநிலை அடைந்தது. அவர்களும் சர்க்காருக்கு எதிராகப் பலாத்காரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இதை யெல்லாம் கேட்டதும் காந்தியடிகள் தம்முடைய மனோ வேதனையைத் தாங்க முடியாமல் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10-ந் தேதி இருபத்தோரு நாள் உபவாசம் இருக்க ஆரம்பித்தார். அவரை விடுதலை செய்யுமாறு நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டும் அரசாங்கம் அசையாமல் இருந்து விட்டது. ஆயினும் ஆண்டவன் அருளால் அவர் இனிதே உபவாசத்தை முடித்துக் கொண்டார். அதன் பின் 1944ஆ மே மாதத்தில் காந்தியடிகள் நோயுற்றார். அதனால் அவரை சர்க்கார் விடுதலை செய்தார்கள். நாட்டிலுள்ள நிலைமையை ஆராய்ந்து அவர் வைஸ்ராய்க்கு சமரஸத் திட்ட மொன்று அனுப்பி வைத்தார். ஆனால் லின்லித்கோவும் அவருக்குப் பின் வந்த வேவலும் அதற்கு இணங்க மறுத்து விட்டார்கள்.

சகோதரர்கள் அல்ல!

அதன்பின் காந்தியடிகள் ராஜாஜி வகுத்த பாகிஸ்தான் திட்டத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, சமரஸம் பேசுவதற்காக ஜின்னாவிடம் சென்றார். இந்துக்களும் முஸ்லிம்களும் இரண்டு சகோதரர்கள் போல் இந்த நாட்டைப் பிரித்துக் கொண்டு அநுபவிக்கலாம் என்று கூறினார். ஆனால் ஜின்னாவோ, “இருவரும் சகோ

தார்கள் அல்லர், அன்னியர்களே !'' என்று கூறினார். அதனால் சமரஸம் ஏற்படவில்லை.

காங்கிரஸ் சமரஸமாகப் போக விரும்பினாலும், ஜின்னா அவ்விதம் செய்ய விரும்பாததால் சிம்லாவில் நடந்த மகாநாடும் முறிந்தது.

இது இப்படி யிருக்க, இங்கிலாந்தில் 1945-ம் வருஷம் ஜூலை 5-ந் தேதி பொதுத் தேர்தல் நடை பெற்றது. அதில் சர்ச்சில் கட்சியார் ஆதிக்கம் மறைந்தது. தொழிற் கட்சியாரே பெருமிதமாக வெற்றி பெற்றார்கள். ஜூலை 27உ தொழிற் கட்சி மந்திரிசபை அமைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பர்மாவிலும் மலேயாவிலும் நிறுவிய இந்திய தேசிய இராணுவத்தார் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். நேதாஜியும் அவருடைய அஸாத் ஹிந்த் சர்க்காரும் தேசிய ராணுவமும் செய்த அரும் பெருஞ் செயல்கள் வெளியாயின. அதன் மூலம் நாட்டின் அந்தஸ்து உயர்ந்து விட்டது.

இதை யெல்லாம் கண்டதும் பிரிட்டிஷ் தொழிற் கட்சி சர்க்கார் இந்தியாவுக்குத் தூது கோஷ்டி ஒன்றை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் விடுத்த அறிக்கையில், அரசியல் நிர்ணய சபை அமைத்து, சுயராஜ்ய அரசியல் வகுக்க ஏற்பாடு செய்வதாகவும், அதுவரை நாட்டிலுள்ள பஞ்சத்தைப் போக்க இடைக்கால சர்க்கார் ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்கள்.

அப்படியே வைஸராய் வேவல், இடைக்கால சர்க்கார் அமைக்குமாறு காங்கிரஸ் சபையையும் முஸ்லிம் லீகையும் அழைத்தார். ஆனால் இடைக்கால சர்க்காரில் தேசிய முஸ்லிம் இருக்கக் கூடாது என்று சொல்லி ஜின்னா சாகேப் இடைக்கால சர்க்காரில் சேர்ந்துகொள்ள மறுத்தார். அதன் மேல் வேவல் இடைக்கால சர்க்காரை அமைக்குமாறு பண்டித நேருவைக் கேட்டுக் கொண்டார்.

இடைக்கால சர்க்கார்

காங்கிரஸ் காரியக் கமிட்டியாருடனும் காந்தியடிகளுடனும் கலந்து கொண்டு ஜவாஹர்லால் நேரு இடைக்கால மந்திரி சபையை அமைத்தார். முஸ்லிம் லீக் சேராவிட்டால் சர்க்கார் நிர்வாகம் முழுவதும் ஸ்தம்பித்து நின்றுவிடும் என்று ஜின்னா சாகேப் குடித்த மனப்பால் கொட்டிக் கவிழ்ந்து போயிற்று. காங்கிரஸ் அமைத்த மந்திரிசபை எங்கும் புகழ்பெற்று வருவதைக் கண்டு அவர் திகைத்துப் போனார்.

அதன்மேல் போபால் நவாப் சமரஸம் செய்ய ஆரம்பித்தார். அதன் பயனாகக் கடைசியில் முஸ்லிம் லீகினர் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதை போல் சமாதானம் கூறிக்கொண்டு இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொண்டார்கள்.

ஆயினும், அவர்களுடைய நோக்கமெல்லாம் நாட்டை இரண்டாகப் பிளந்து விடுவதிலேயே யிருந்தது. அதற்கேற்ப நவகாளி போன்ற பல இடங்களில் கனவில் நினைக்கக் கூடக் கூசும்படியான அட்டூழியங்கள் நடந்தன.

விலங்கு அறுந்தது !


காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தார்கள். "பாகிஸ்தான் கொடுத்துவிடுவோம், அப்படியாவது இந்தப் பாதகச் செயல்களை நிறுத்துவோம்'' என்ற முடிவுக்கு வந்தார்கள். அப்படியே வங்காளத்தை இப்போது இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அதேமாதிரி பஞ்சாப்பையும் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அதன்படி கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப், சிந்து, எல்லைப்புறம், பலுச்சிஸ்தான் ஆகியவை பாக்கிஸ்தானைச் சேர்ந்தவை யாகும். இதர பாகங்கள் முழுவதும் இந்திய யூனியனை—அதாவது ஐக்கிய இந்தியாவைச் சேர்ந்தவையாகும்.

இன்று ஆகஸ்டு 15உ ஆங்கில அரசாங்கமானது அதிகாரத்தை அரசியல் நிர்ணய சபையிடம் மாற்றிக் கொடுக்கின்றது. ஆகவே இன்று பாரத நாட்டு மக்களின் சுதந்திரதினம். இன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூவர்ணத் தேசியக் கொடி மட்டுமே இந்திய பூமியில் பறக்கும். இன்று காலை விக்டோரியா மகாராணியின் பௌத்திரரான மௌண்ட் பாட்டன் பிரபு நம் கொடிக்குத் தலை வணங்கி மரியாதை செய்து கவர்னர் ஜெனரல் பதவி ஏற்பார். நம் நாடு இனி சுகவாழ்வு பெறும். இன்றைய தினம் நாம் அனைவரும்,

"பாரத சமுதாயம் வாழ்கவே !
வாழ்க, வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே !
ஜய ஜய ஜய
பாரத சமுதாயம் வாழ்கவே !''

என்று வாயார வாழ்த்தி வணங்குவோமாக !

வந்தே மாதரம்



'ஜெய் ஹிந்த்' என்ற தாரக மந்திரத்தைக் கண்டுபிடித்தவரும், இணையற்ற கர்ம வீரரும், டில்லி செங்கோட்டையில் இந்திய தேசியக் கொடி பறந்து இந்திய தேசிய ராணுவமும் அணி வகுத்து நிற்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை யென்பதை ஞான திருஷ்டியால் கண்டவருமான நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ்,






தேசிய ஸ்தாபனத்துக்காகத் தமது மாளிகையையும், தேச கைங்கர்யத்துக்காகத் தமது தவப் புதல்வர், புதல்வியையும் தந்தருளிய தனிப் பெரும் தலைவர் பண்டித மோதிலால் நேரு.

தமிழ்நாட்டில் தேசிய காங்கிரஸின் கௌரவத்தை நிலை நாட்டிய ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார்.





தமது வாழ்நாள் முழுவதும் ஹிந்து — முஸ்லீம் ஒற்றுமைக்காக மகத்தான தொண்டு புரிந்த அரும் தியாகி ஹகீம் அஜ்மல்கான்.


தேசியப் போராட்டத்தில் பாஞ்சால சிங்கம்' என்று பிரசித்தி பெற்றவரும், போலீஸ் தடியடிக்கு இலக்காகித் தேசத்துக்காகத் தமது உயிரையும் அர்ப்பணம் செய்தவருமான லாலா லஜபதி ராய்.





தேச விரோதிகளுக்குச் சரியான சூடு கொடுத்து, தமது பிரசங்கமாரியால் ஜனங்களின் மனதைக் கொள்ளை கொண்ட, தேசபக்தர் ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி.

சிறந்த கவியும், அபாரமான தமது வாசாலக சக்தியால் ஜனங்களின் மனத்தில் தேச பக்திக் கனலைத் தூண்டியவருமான சித்த ரஞ்சன் தேசபந்து தாஸ்.





தமிழ் நாட்டின் தவப் பயனாகக் கிடைத்த தேசபக்த சிகாமணியும், கலை மகளின் கடாட்சம் பூரணமாக வாய்க்கப் பெற்றவருமான அமரகவி சுப்பிரமணிய பாரதியார்.

திலகர் பெருமானால் புகழப்பட்டவரும், கப்பலோட்டிய தமிழரும், செக்கிழுத்த தியாகியுமான ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை.



இந்தியா சட்டசபை அக்கிராசனர் பீடத்தில் சிம்மம்போல் வீற்றிருந்து, ஆங்கிலேயர்களுக்கும் பார்லிமெண்டு விதிகளைக் கற்றுக் கொடுத்து, இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் ஆணவத்தைக் குலைத்த ஸ்ரீ வித்தல்பாய் பட்டேல்.



ஹிந்து முஸ்லிம்களின் ஏகோபித்த அபிமானத்துக்கும் பாத்திரராகத் திகழ்ந்தவரும், தேசியப் போராட்டத்தில் மகாத்மா காந்தியின் அந்தியந்த நண்பருமான டாக்டர் அன்சாரி.



அரை நூற்றாண்டுக்கு மேலாக அருந் தேசப்பணி புரிந்த மகானும், காசி ஹிந்து சர்வ கலாசாலையை ஸ்தாபித்தவருமான பண்டித மதன் மோஹன் மாளவியா. ''கீதா ரகஸ்யம்'' போன்ற அறநூல் பொக்கிஷங்களின் ஆசிரியரும், 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை' என்ற அரசியல் வேத வாக்கியத்தின் கர்த்தாவுமான லோக மான்ய பால கங்காதர திலகர்.





அக்காலத்திலேயே 'ஸர்' பட்டத்தை வெறுத்துத் தள்ளியவரும், 'எனது அரசியல் குரு' என்று மகாத்மா காந்தியால் போற்றப்படும் அபூர்வ பாக்கியத்தைப் பெற்றவருமான ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே.

இந்திய தேசீய காங்கிரஸை நிறுவிய ஆதிகர்த்தாக்களில் ஒருவரும், மும்முறை அச் சபையின் தலைவர் பீடத்தில் வீற்றிருந்தவரும், பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஸ்தானம் பெற்று பாரதநாட்டுக்குத் தொண்டு புரிந்த முதலாவது இந்தியருமான தாதாபாய் நௌரோஜி.



சிக்கல் மயமான உலகில் உண்மை வாய்ந்தவை எளிதான விஷயங்களே
ஒரு சிறு வில்லை உங்களுக்கு ஆரோக்கியம் அளிக்கமுடியும்
அது இயற்கைக்கு மாறாக அன்றி அதனுடன் ஒத்துவேலை செய்கிறது
ஆஸ்ப்ரோவால் இருதயத்துக்கு ஒரு கெடுதியுமில்லை
'ஆஸ்ப்ரோ'
வலியையும் ஜுரத்தையும் போக்கடிக்கிறது
ஆடவர், ஸ்திரீகள், குழந்தைகள் அனைவருக்கும் ஆஸ்ப்ரோ செய்யக்கூடியதென்ன
ASPRO
MADE IN ENGLAND
ஜே. எல். மாரிஸன், ஸன் & ஜோன்ஸ்
(இந்தியா) லிமிடெட்
எங்கும் கிடைக்கும்



கம்பர் தரும் காட்சி

கிஷ்கிந்தா காண்டம்

185. தர்மதேவதைகள் இவர்கள்தானே!

எத்தனையோ சக்திகளை இந்த உலகத்திலே கண்கூடாகப் பார்க்கிறோம்.

தும்பைச் செடியைப் பார்ப்போம்.

(1) கடுகிலும் சிறிய வித்திலிருந்து பூண்டு உண்டாகி விடுகிறது. வித்து, பூண்டை உண்டாக்கியது என்பது நம் அறிவுக்கு எட்டாத ஒரு அற்புதந்தான்.

(2) அப்படி உண்டான பூண்டு சிலகாலம் தனக்கான உணவுப் பொருள்களை ஆக்கிக் கொண்டு குறிப்பிடத் தக்க ஒரு காலத்துக்கு நிலைத்து நிற்பதும் அதிசயந்தான்.

(3) கால வரையறை தீர்ந்தவுடன் அந்த வர்க்கத்துப் பூண்டுகள் எல்லாமே மடிந்து போகிறதைப் பார்க்கிறோம். எல்லாம் ஒத்துப் பேசி மடிந்ததாகத் தோன்றும். இதுவும் நம் அறிவுக்கு எட்டாத அற்புதந்தான்.

ஆகவே உண்டாவது என்றும், நிலைத்திருப்பது என்றும், மடிந்து போவது என்றும் மூன்று தத்துவங்கள் நிகழ்கின்றன. இந்த நிகழ்ச்சிகளை உயிர் வர்க்கம் என்று சொல்லப்படும் எல்லா வஸ்துக்களிலுமே காண்கிறோம். அவைகளை முத்தொழில்கள் என்று சொல்லலாம்.

ஒவ்வொரு தொழிலுக்கும் கர்த்தாவாக உருவத்தோடு ஒரு அதி தேவதை தங்கி நிற்கிறது என்றும் சொல்லத் தோன்றும். எப்பேர்ப்பட்ட அற்புதம் இதெல்லாம்! கடவுள் ஒருவன் இருக்கிறான் என்று எடுத்துச் சொல்ல வேறு சாட்சியமும் வேண்டுமா?

இன்னொரு விஷயத்தைப் பார்க்கலாம்: கண்ணுக்குத் தோன்றுவது மேகம். மேகமாகத் தோன்றுவதற்கு முன் கண்ணுக்குத் தோன்றாத வாயு ரூபமாக இருக்கிறது அது. இன்னும் எட்டி யோசிப்போமானால், வானத்தில் தோன்றுகிற நக்ஷத்திரக் கூட்டங்கள் என்ன, சூரியன் சந்திரன் என்ன, பூமியிலேயே தோன்றுகிற எண்ணிறந்த வஸ்துக்கள்தான் என்ன, எல்லாம் ஆதியில் கண்ணுக்குத் தோன்றாத அதி நுட்பமான ஒரு வஸ்துவிலிருந்தே உண்டாயின என்று சொல்ல வேண்டியிருக்கும். ஏனெனில், சூன்யத்திலிருந்து ஒன்றும் உண்டாவதில்லை.

ஆகவே கண்ணுக்குத் தோன்றும் சகல வஸ்துக்களுமே எப்படியோ ஒரு அற்புதமான முறையில் கண்ணுக்குத் தோன்றாத மூலப் பொருளாகிய ‘முத’லில் இருந்தே தோன்றியவை. கடவுள் தத்துவத்துக்கு இதுவும் ஒரு சாட்சியந்தான்.

மூன்றுரு எனத்தொழில்
மும்மை ஆனவும்,
தோன்றுரு எவைக்குமாம்
முதலும்,

மூன்று தொழில்களும் கடவுளை நிரூபிக்கின்றன. அப்படியே ஆதியாகிய மூலப் பொருளும் நிரூபிக்கிறது. இவை இரண்டும் கண்ணுக்குத் தோன்றாதபடி தொழில் செய்வன.

கண்ணுக்குத் தோன்றாத இவைகளை எண்ணினாலே சாட்சியம் சொல்லுவதுபோல் இருக்கின்றன. அப்படியானால் கண்கூடாகப் பார்க்கும் புல்ப் பூண்டுகளைப் பற்றியும், ஓடி யாடித் திரியும் பிராணிகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லவா வேண்டும்? எல்லாம் ஒரே அற்புதந்தான்! கடவுளுடைய எண்ணிறந்த அற்புத சக்திகளை நமக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருக்கின்றன அவை.

இத்தனை சாட்சியங்கள் இருந்தாலும் கடவுள் நம்முடைய உணர்வுக்கு அப்பால் தாவி விடுகிறான். அதாவது, நம்முடைய ஆணவ அறிவுக்கு எட்டாத பொருள் அந்தக் கடவுள்.

தானன தானன
தான தன்னன

மூன்றுரு எனத்தொழில்
மும்மை ஆனவும்,
தோன்றுரு எவைக்குமாம்
முதலும், சொல்லுதற்(கு)
என்றுரு அமைந்தவும்
இயங்க நின்றவும்,
சான்றுரு வாயுளான்,—
உணர்வு தாயினான்!

[மூன்று உரு என: உருவங்கள் மூன்று என்று சொல்லும்படியான; தொழில் மும்மை ஆனவும்: ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில் விசேஷங்களும்; தோன்றுரு எவைக்குமாம் முதலும்: கண்ணுக்குத் தோன்றும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையா யுள்ள — கண்ணுக்குத் தோன்றாத மூலப் பொருளும்; சொல்லுதற்கு என்று உரு அமைந்தவும்; பெயரிட்டுச் சொல்லுவதற்கான உருவம் அமைந்து நிற்கும் தாவர வர்க்கங்களும்; இயங்க நின்றவும்: இடம் பெயர்ந்து செல்லக் கூடிய பிராணி வர்க்கங்களும் — எல்லாம் சேர்ந்து; சான்று உருவாய் உளான்: சாட்சியத்துக்கு ஏற்ற உருவம் படைத்தவன் தான் கடவுள்; ஆனாலும், உணர்வு தாயினான்: உணர்ச்சியைத் தாண்டி விடுகிறான். அதாவது, நம்முடைய ஆணவ அறிவுக்கு எட்டாதவனாய் இருக்கிறான்.]

பூர்வ கதை

பஞ்சவடியில் ராமன் சீதை லக்ஷ்மணன் ஆகிய மூவரும் ஆனந்தமாய் வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் பொன் மான் ஒன்று அங்கு வந்தது. அதன் மேல் சீதைக்கு ஆசை உண்டாய்விட்டது. அதைப் பிடித்துத் தந்துவிட வேண்டும் என்று ராமனை வேண்டிக் கொண்டாள். 'உண்மை மான் அல்ல; மாய மான்' என்று லக்ஷ்மணன் சொன்னான். சீதைக்கு அதனால் மிக்க மன வருத்தம் உண்டாய்விட்டது.

அந்த வருத்தத்தைத் தணிப்பதற்காக ராமன் மானைப் பிடிக்கப் போனான். மானையும் அம்பு எய்து கொன்றான். மான் வேஷம் போட்டிருந்த மாரீசன் உயிர் போகும் தறுவாயில் ராமனது குரலில் ஏதோ ஆபத்தில் இருப்பதுபோல் கூக்குரலிட்டான்.

பர்ணசாலையி லிருந்த சீதையின் காதில் அந்த சத்தம் விழவும், அவளுக்குத் தாங்க முடியாத பயம் ஏற்பட்டுவிட்டது.

லக்ஷ்மணனை ராமன் இருந்த இடத்துக்குப் போகும்படியாகச் சொன்னாள். "அந்தச் சத்தம் மாயச் சத்தம், யாதொரு ஆபத்தும் ராமனுக்கு இல்லை" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் லக்ஷ்மணன்.

சீதை கேட்பதாக இல்லை. வேண்டாத கடுஞ்சொல் அவள் சொல்ல, அதன் காரணமாக லக்ஷ்மணனும் பர்ணசாலையை விட்டுப் போய்விட்டான்.

இப்படி ராமனும் லக்ஷ்மணனும் அகன்று இருந்த சமயம் பார்த்து, ராவணனும் சந்நியாசி வேஷம் பூண்டவனாய் வந்து, சீதையை அவளிருந்த தளத்தோடு தூக்கிக் கொண்டு போய்விட்டான்.

போகிற வழியில் கழுகரசனாகிய ஜடாயு ராவணனை எதிர்த்துப் போர் செய்தான். ராவணனைச் சமாளிக்க முடியவில்லை ஜடாயுவுக்கு. அவனது இறக்கைகளை வாளால் அறுத்து வீழ்த்திவிட்டு, ஆகாய விமானத்தில் சீதையை வைத்துக்கொண்டு போய்விட்டான் அரக்கன்.

பர்ணசாலைக்கு ராமனும் லக்ஷ்மணனும் வந்தபோது சீதை இல்லை! நாலா பக்கமும்



தடினார்கள் ; காணவில்லை. அப்படியே றிவு மயங்கினவர்களாய் மெள்ள நடந்து சென்றார்கள்.

போகும் வழியில் ஜடாயு உயிர் துறக்கும் லையில் கிடப்பதைக் கண்டார்கள். ற்றமுடியாத துயரத்தினால் ராமன் ஜடாயு ின்மேல் ஓடிப் போய் விழுந்தான். விழுந்த ின் காரணமாக ஜடாயுவுக்குக் கொஞ்சம் ணர்ச்சி வந்தது. ராம லக்ஷ்மணர்களைப் ார்த்தான். பார்த்ததும் ரொம்பவும் ிருப்தி உண்டாயிற்று. "சீதையை விட்டுப் ிரிந்து போனீர்களோ?" என்று கேட் ான். நடந்த விருத்தாந்தத்தை லக்ஷ்மண னும் சொன்னான்.

ஜடாயு ஏதோ ஆறுதல் வார்த்தைகளைச் சொன்னான். செய்தியை முழுதும் சொல்லு ன் உயிர் போய்விட்டது. சீதையைப் ற்றிய விவரமும் ஜடாயுவின் உயிரோடு பாய் விட்டது.

இவ்வளவும் ஆரணிய காண்டத்தில்ப் ார்த்தோம். இனி :

என்ன செய்வார்கள், அப்பாவி ராம லக்ஷ்மணர்கள்? துயரத்தில் மூழ்கினவர்களாய் நடந்து செல்லுகிறார்கள். ராமன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான். போகிற வழியெல்லாம் ஓரே புலம்பல். மரத்தைப் பார்த்தாலும் மலையைப் பார்த்தாலும் 'சீதையைக் கண்டீர்களா?' என்று கேட்கிறான். கடைசியில் பம்பை என்னும் தெளிந்த நீருள்ள தடாகத்தைக் கண்டார்கள். தடாகத்தின் பக்கம் சில நாள் தங்கிவிட்டு மறுபடியும் புறப்பட்டார்கள்.

கிஷ்கிந்தைக்குப் பக்கமான மலைச் சாரலில் நடந்து வருகிறார்கள். அப்படி வந்து கொண்டிருப்பதைக் கேட்டு அனுமான் எதிர் கொண்டு செல்லுகிறான். உலகத்திலேயே காணாத ராம லக்ஷ்மணர்களுடைய உருவத்தையும் அழகையும் கண்ட மாத்திரத்தில், அவர்கள் ஏதோ தேவலோகத்திலிருந்து வந்தவர்களோ என்று வியக்கும்படியாக இருந்தது அனுமனுக்கு.

இவ்விதம் அதிசயத்தில் மூழ்கிய அனுமனது கண்களுக்குக் கண்ட பொருள் எல்லாம் மாறுபட்டுத் தோன்றுகின்றன. ராம லக்ஷ்மணர்கள்

பாதம் பட்ட காரணமாக வெம்மையாய் இருந்த கற்கள் எல்லாம் புஷ்பங்களாக மாறி இதஞ் செய்கின்றன என்று தோன்றுகின்றன.

தானன தானன தன்
தானன தானன தன்

காய்எரி கனலுங்கற் கள்
கன்றுடை மலர்களே போலத்,
தூயசெங் கமலபா தம்
தோய்தொறும், குழைந்துதோன்
றும்;
போயின திசைகள்தோ றும்
மரனொடு புல்லும்எல் லாம்
சாய்வுறுந் தாழ்வபோல் இங்(கு):
இவர்களோ தருமமா வார்!

[காய் எரி கனலும் கற்கள்: ஏதோ அக்கினியைக் கொப்புளிப்பது போலத் தோன்றும் கூழாங் கற்கள்; கன்றுடை மலர்களே போலத் தூய செங்கமல பாதம் தோய்தொறும்: ராம லக்ஷ்மணர்களுடைய செந்தாமரை போன்ற பாதங்கள் பதியுந்தோறும்; குழைந்து தோன்றும்: ஏதோ அந்தக் கற்கள் குழைந்து மலர்கள் ஆயின என்று தோன்றும்; போயின திசைகள் தோறும்: வளைந்து வளைந்து போன பாதைகளில் எல்லாம்; மண்ணோடு புல்லும் எல்லாம்: மரம் புல் செடிகள் எல்லாம்; சாய்வுறும் தாழ்வபோல்: பாதங்களை வணங்குவது போல் மெள்ளச் சாய்கின்றன; இவர்களோ தருமம் ஆவார்: தருமதேவதை என்று சொல்லுகிறார்களே அவர்கள்தான் இவர்களோ!]

ஒரு மகான் ஓர் இடத்தில் தங்கியிருக்க நேர்ந்தால், அந்த இடமும் சுற்றியுள்ள இடமுமே புனிதமான தனித்த பண்புடையதாக பக்தர்களுக்குத் தோன்றுவது இயல்பு. இன்றைக்கும் இது உண்மை.

கம்பர் அத்தகைய பக்தர்களது நிலையிலிருந்து சாமானியக் கல்லையும் மண்ணையும் பார்த்து அனுபவித்தவர். தாம் அனுபவித்ததை அனுமனது வார்த்தைகளாகச் சொல்லுகிறார்.

அனுமனது அபூர்வமான உள்ளத்தைப் பார்த்தால் செய்யுளில் சொல்லிய விஷயங்கள் எல்லாம் உண்மைகளே — அதாவது உண்மையான உணர்ச்சிகளே என்பது தெரியவரும்.

காலக்ஷேபம்

டிக்கெட் கலெக்டர்:—இவர்களுக்கெல்லாம் அரை டிக்கெட்டுக் கிடையாது, அம்மா!

ஸ்திரீ:—ஏன் கிடையாது?

டிக்கெட் கலெக்டர்:—இதோ ரயில்வே கட்டணப் புத்தகத்தில் என்ன போட்டிருக்கிறது, தெரியுமா? 'பன்னிரண்டுக்கு உட்பட்டவர்களுக்கு அரை சார்ஜ் வசூலிக்கப்படும்' என்று போட்டிருக்கிறது.

ஸ்திரீ:—இங்கே என் குழந்தைகள் பதினொரு பேர்தானே இருக்கின்றனர்?

○

மாஜிஸ்ட்ரேட்:—நீர் நாய் வைத்துக்கொள்ள 'லைசென்ஸ்' வாங்க விருப்பமில்லை என்று சொல்லுகிறீர்? உமக்கு அபராதம்......!

பிரதிவாதி:—இல்லை, இல்லை. ஆனால்......!

மாஜிஸ்ட்ரேட்:—ஆனால்......என்ற பேச்சே வேண்டாம்.

பிரதிவாதி:—நாய் செத்துப் போய்விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

○

சிறுவன்:—அப்பா, நான் அடுத்த வீட்டுப் பையனுடன் போய் விளையாடிக் கொண்டிருக்கட்டுமா?

தந்தை:—கூடாது; அவன் அயோக்கியன்!

சிறுவன்:—அப்படியானால் போய் அவனோடு சண்டை போடுகிறேனே!

எஜமான் (வேலைக்காரனைப் பார்த்து):—நீ இப்படி வேலை செய்து கொண்டு வந்தால் நான் இன்னொரு ஆள் பார்க்க வேண்டியது தான்!

வேலைக்காரன்:—ஆமாங்க எஜமான்! அது உண்மைதான்! இந்த வீட்டில் இரண்டு பேர் செய்யக்கூடிய வேலை இருக்கிறதுங்க!

○

கணவன்:—எனக்கு ஐம்பது ரூபாய்ப் புடவைதான் பிடிக்கிறது என்று நான் சொல்லியும், நீ நூறு ரூபாய்ப் புடவையை வாங்கிக் கொண்டு விட்டாய்!

மனைவி:—உங்களுக்கு மனவருத்தம் எதற்கு? அந்த ஐம்பது ரூபாய்ப் புடவையையும் எடுத்துக் கொண்டு விடுகிறேன்!

○

மாமா:—ராமு, நான் உனக்குப் பத்துப் பழங்கள் கொடுத்து உன்னையும் உன் தம்பியையும் சமமாகப் பங்கு போட்டுக் கொள்ளச் சொன்னால் உனக்கு எத்தனை பழம் கிடைக்கும்?

ராமு:—ஏழு பழம், மாமா!

மாமா:—தப்பு; உனக்குக் கணக்குத் தெரியவில்லை.

ராமு:—இல்லை, மாமா எனக்குக் கணக்குத் தெரியும்; என் தம்பிக்குத்தான் தெரியாது!



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த்

மொழி பெயர்ப்பு: ரா. வீழிநாதன்

பத்தொன்பதாம் அத்தியாயம்

என்ன ஆகுமோ!

மறுநாள் காலையில் ரமாநாத் ரத்தனிடம் ஓர் ஆளை அனுப்பினான். அவனிடம் கொடுத்த அந்தக் கடிதத்தில், 'நேற்று பத்மா உங்களிடம் நடந்து கொள்ளத் தெரியாமல் நடந்துகொண்டு விட்டாள் என்பதை யறிந்து நான் மிகவும் வருத்தமுற்றேன். உங்களிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற நோக்கமே எனக்கு இல்லை. பணத்தைத் திருப்பி வாங்கி வந்து விடுவதனால், கடைக்காரன் சற்றுச் சீக்கிரமாகச் செய்து தந்துவிட மாட்டானா என்ற நோக்கத்துடன் நான் வாங்கிக் கொண்டு வந்து வைத்திருந்தேன். பத்மா அதைத் தவறி எடுத்துக் கொடுத்து விட்டாள். உங்களுக்கு இன்னும் நான்கைந்து தினங்களுக்குள் கங்கணம் கிடைத்து விடும். ஆகையால் பணத்தைத் திருப்பி அனுப்பி வையுங்கள். அந்தப் பையில் என்னுடைய பணம் வேறு இருநூறு ரூபாய் இருந்தது. தயவு செய்து அதையும் அனுப்பி வையுங்கள்' என்று தன் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாத முறையில் மிகவும் கண்ணியமாகவும், பணிவாகவும் அவன் எழுதியிருந்தான்.

போன ஆள் திரும்பி வரும் வரையில் அவனுடைய மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஊசலாடிற்று. 'ரத்தன் ஏதாவது சால்சாப்புச் சொல்லி யனுப்பி விட்டால்...? அவள் வீட்டில் இல்லாமல் எங்கேயாவது வெளியே போயிருந்தால்...? அல்லது நாலைந்து நாட்கள் கழித்துத் தருகிறேன் என்று சொல்லி யனுப்பி விட்டால்...?' — இப்படி யெல்லாம் அவன் மனம் அலை பாயத் தொடங்கி விட்டது. கடைசியில் ஒன்பது மணிக்குப் போன ஆள் திரும்பி வந்தான். ரத்தன் அவனிடம் இருநூறு ரூபாயை மட்டும் கொடுத்தனுப்பியிருந்தாளே தவிர, அவன் கொடுத்தனுப்பியிருந்த கடிதத்துக்குப் பதில் எழுதியனுப்பவே யில்லை.

ரமாநாத் நம்பிக்கை யிழந்த விழிகளுடன் ஆகாயத்தை அண்ணாந்து பார்க்க

வானான். 'இந்த ரத்தன் நம் கடிதத்துக்குக் கூடப் பதில் அனுப்பவில்லையே! அவனுக்கு இந்தச் சாதாரண மரியாதை கூடத் தெரியாமலிருக்குமா? ... அப்படி இருப்பதற்கு நியாயம் இல்லை. அவன் ஒரு பெரிய மாய்மாலக்காரியாகத்தான் இருக்க வேண்டும். நேற்று ராத்திரி நாம் போயிருந்த பொழுது, கண்ணியமாகவும் பெருந்தன்மையுடனும் நடந்து கொண்டவன், பொழுது விடிவதற்கு முன் இப்படித் 'திடுதிப்' பென்று மாறிவிட்டானே!' என்றெல்லாம் அவன் மனத்துள் யோசிக்கலானான்.

உள்ளே சென்ற வேலைக்காரனைப் பார்த்ததும் பத்மா, "ஏன் அப்பா, வீட்டு வேலை செய்ய வந்திருக்கிறாயா, இல்லை, இப்படியே ஊர் சுற்றிக் கொண்டிருக்க வந்திருக்கிறாயா? மணி பத்து அடித்து விட்டது. இன்னும் கறி காய் வாங்கி வரக் காணோமே!" என்றாள்.

"ஐயாதான் பணம் வாங்கியாறத்துக்காக அந்த அம்மா வீட்டுக்கு அனுப்பினாங்க!" என்றான் அவன்.

"எந்த அம்மா வீட்டுக்கு?"

"அடிக்கடி காரிலேகூட நம் வீட்டுக்கு ஒரு அம்மா வருவாங்களே, அந்த அம்மா வீட்டுக்குத்தான்!"

"பணம் கொடுத்தாளா?"

"நான் போனால் வாங்கி வராமல் இருப்பேனா?"

"சரி, சரி, சீக்கிரம் போய்க் கறிகாய் வாங்கிக்கொண்டு ஓடி வா!" என்றாள் பத்மா.

வேலைக்காரன் அந்தண்டை போனதும், ரமாகாந்த் கையில் பணத்துடன் உள்ளே நுழைந்தான். அவனைப் பார்த்ததும் பத்மா, "ரத்தனிடமிருந்துதான் உங்கள் பணத்தை வாங்கிக்கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறதே! இனிமேல் என் பணம் உங்களுக்கு வேண்டாமோ, இல்லையோ?" என்று கேட்டாள்.

ரமாகாந்த் வெகு அலட்சியமாக, "கொடுக்கா விட்டால் வேண்டாமே!" என்றான்.

"நான்தான் பணம் தருவதாகச் சொல்லி விட்டேனே! அப்புறம் அவனிடம் போய் இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு பணத்தைக் கேட்டு வாங்குவானேன்?"

"நான் அவனிடம் பணம் எங்கே கேட்டேன், அதற்கு? 'பையில் என்னுடைய இருநூறு ரூபாயும் இருக்கிறது' என்று ஞாபகப்படுத்தி எழுதினேன்; அவ்வளவுதான். அவள் திருப்பி யனுப்பி விட்டாள். அதற்கு நான் என்ன செய்வது?" என்று அசடு வழியப் பதில் சொன்னான் ரமாகாந்த்.

பத்மா புன்முறுவலுடன், "என் காசு நல்ல காசு! அதனால்தான் தப்பிற்று! எல்லாம் புத்தம் புது ரூபாயாக்கும்! இந்த வருஷத்துக் காசாகப் பொறுக்கி எடுத்து வைத்திருக்கிறேன். 'பள பள' வென்று கண்ணைப் பறிக்கும். எடுத்துக் காட்டட்டுமா?" என்றாள்.

இதற்குள் யாரோ கீழே யிருந்து, "ஐயா, சேட்டு ரூபாய் வாங்கிக் கொண்டு வரச் சொன்னாருங்க!" என்று குரல் கொடுத்தான்.

தயாநாதபாபு ஸ்நானம் செய்வதற்காக எழுந்து உள்ளே வந்தவர், சேட்டின் ஆளைப் பார்த்ததும், "எந்த சேட், அப்பா? ரூபாயா! நான் யாருக்கும் கொடுக்க வேண்டியதில்லையே!" என்றார்.

"சின்ன ஐயா நகை வாங்கி வந்தாருங்க. ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் ஒரு தம்பிடிகூடக் கொடுக்க வில்லிங்க. சேட்டு என்னைப் பணத்துக்காக அனுப்பினாருங்க!" என்றான் கடை ஆள்.

தயாநாதபாபு ரமாகாந்தைக் கூப்பிட்டு, "இதோ பார், உன்னை யாரோ கடைக்காரன் தேடிக் கொண்டு வந்திருக்கிறான். ஏதாவது கணக்குப் பாக்கி யிருந்தால் தீர்த்து விடுவதற் கென்ன? எவ்வளவு பாக்கி இருக்கிறது?" என்று கேட்டார்.

ரமாகாந்த் பதில் சொல்ல வாய் திறக்கு முன்பே, கடைக்கார ஆள், "எழுநூறு ரூபாய் இருக்கும், எசமான்!" என்றான்.

தயாநாதபாபு வியப்புத் தாங்காமல் கண்களை அகல விழித்துக் கொண்டு, "எழுநூறு! ஏன் ரமா, இவன் எழுநூறு என்கிறானே?" என்றார்.

ரமாகாந்த் ஆளை விட்டால் போதும் என்ற எண்ணத்தில், "எனக்குச் சரியாகத் தெரியாது!" என்றான்.

"தெரியாதா! இதோ கணக்கு என்னிடம் இருக்கிறது. நகை வாங்கின பிறகு ஏதாவது கொடுத்திருந்தால்தானே, குறைவதற்கு?" என்றான் கடைக்கார ஆள்.

ரமாகாந்த் அவனைக் கடிந்து கொண்டு, "நீ கடைக்குப் போ! நானே நேரில் வருகிறேன்" என்றான்.

"இன்றைக்குக் கொஞ்சமாவது பணம் வாங்காமல் நான் இங்கிருந்து நகரப் போவ



ல்லை. நீங்கள் 'இன்றைக்கு, நாளைக்கு'
ன்று தட்டிக் கழித்து விடுகிறீர்கள்.
ங்கள் அல்லவா வசவு வாங்கிக் கட்டிக்
ாள்ள வேண்டியிருக்கிறது!" என்
ன் அந்த ஆள்.

ரமாகாந் உலகத்தின் கண்களில் தன்
ாத் தாழ்ந்தவனாக ஆக்கிக் கொள்ளச்
றிதும் தயங்கவில்லை. ஆனால் தன்
றைக் கெதிரே, தன்னைத் தாழ்ந்தவ
கக் காட்டிக் கொள்ளுவதைக் காட்டி
ம், உயிரை விட்டுவிடுவது மேல் என்று
வனுக்குப் பட்டது. அவனுடைய தந்
தையோ கெட்ட வழியில் சம்பாதிப்பது
ன்பதையே அறவே வெறுப்பவர். அப்
படிப்பட்ட காசைக் கையால்கூடத் தொட
ட்டார். அது மட்டும் அல்ல; கடன்
ங்கி வயிற்றை நிரப்புவதைக் காட்டிலும்,
டினி கிடந்து உயிரை விட்டுவிடுவது
வ்வளவோ மேல் என்று எண்ணுபவர்.
ப்படிப்பட்ட தந்தைக்குப் பிள்ளையாகப்
றந்துவிட்டு, மானம் கெட்ட செய்கை
ளைச் செய்வதென்றால் யாருக்குத்தான்
மனம் வரும்? ஆகையால், தந்தையின்
ஆத்மாவுக்குத் துயரத்தைக் கொடுக்கவோ,
அவரை அகௌரவிக்கவோ, அவனுடைய
மனம் சிறிதும் இடம் கொடுக்கவில்லை.
ஆகவே கடைக்கார ஆளிடம், மிகவும்
வெடிப்பாக, "நீ இன்னும் இங்கேயா
நின்று கொண்டிருக்கிறாய்? இந்த
இடத்தை விட்டுப் போகிறாயா, இல்லை,
'கல்தா' கொடுத்துத் தள்ளச் சொல்
லட்டுமா?" என்று கேட்டான்.

"நமக்குப் பணத்தைக் கொடுங்கள்;
நான் போயே போய் விடுகிறேன். உங்கள்
வீட்டு வாசலில் நிற்க, எனக்கு என்ன,
தலை விதியா!" என்றான் அந்த ஆள்.

"நீ போகப் போவதில்லையே! அப்படி
யானால் உன் முதலாளியிடம் போய்ப்
பிராது செய்து பணம் வாங்கிக்கொள்ளச்
சொல்லு!" என்றான் ரமாகாந்.

இதைக் கேட்டதும் தயாகாந்தபாபு,
"எதற்காக இந்த மானம் கெட்ட பேச்
செல்லாம் பேசுகிறாய்? கையில் காசு இல்
லாதபொழுது, இந்த ஜைகளை வெல்

லாம் வாங்குவானேன்? வாங்கிக் கொண்டு வந்ததுதான் வந்தாயே, வாங்கி வந்த சமர்த்தைப் போலக் கடனையும் தீர்ப்பது தானே! 'பிராது செய்து கொள்ளு' என்று சொல்லி விட்டாயே! அவன் பிராதுசெய்து விட்டால் உன் மானம் கப்பல் ஏறிவிடுமே! ஊர் சிரிக்குமே! அதையெல்லாம் யோசித்தாயா? ஏதோ கல்யாண காலத்தில் வாங்கி யிருந்தாலும், போனால் போகிறது என்று சொல்லலாம்! இப்பொழுது கல்யாணமா, கார்த்திகையா? எதற்கு இவ்வளவு வாங்கினாய்? அவளும் ஒரு பொம்மனாட்டி மாதிரி! நீ செய்யும் ஊதாரிச் செலவை யெல்லாம் பார்த்துக் கொண்டு, தடுக்காமல் பேசாமல் இருக்கிறாளே! அவளை என்ன செய்தால் தேவலை? ஆமாம், இதெல்லாம் வாங்கத்தான் வாங்கினாயே, என்ன எண்ணத்தில் வாங்கினாய்? உனக்கு என்ன அப்படித் தொலையாத வரும்படி வருகிறது?" என்று கடிந்து கொண்டார்.

ராமநாத்துக்குத் தகப்பனார் இப்படிக் கடிந்து கொள்ளுவது சிறிதும் பிடிக்கவில்லை. அவருக்கு இதையெல்லாம் பற்றிக் கேட்பதற்கு உரிமையே கிடையாது என்பது அவனுடைய அபிப்பிராயம். ஆகையால் சிறிதும் சங்கோசப்படாமல், "எதற்காக இப்படியெல்லாம் வீணாகக் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்? உங்களிடம் பணம் கேட்க வந்தால் சொல்லுங்கள். நான் என் சம்பளத்தைக் கொண்டு, எப்படியாவது கடனை அடைத்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம்!" என்றான்.

பிறகு தன் மனதுக்குள்ளேயே "இதெல்லாம் உங்களால் வந்த வினை தானே! நீங்கள் செய்த பாவத்துக்கு நான் அல்லவா பிராயச் சித்தம் செய்து கொள்ள வேண்டி யிருக்கிறது!" என்று முணு முணுத்துக் கொண்டான்.

தந்தைக்கும் தனயனுக்கும் நடக்கும் இந்த விவாதத்தைக் கண்டதும், கடைக்கார ஆள் பேசாமல் அங்கிருந்து நகர்ந்து விட்டான். தயாநாதபாபுவும் ஏதோ முணு முணுத்துக் கொண்டே ஸ்நானத்துக்குச் சென்று விட்டார். ராமநாத்தும் மேலே போனான். அவன் முகத்தில் வெட்கமும், வருத்தமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. அவன் எந்த அவமானத்திலிருந்து தப்ப விரும்பிப் படாத பாடெல்லாம் பட்டானோ, அதே அவமானத்துக்கு இப்பொழுது ஆளாகும்படியாகிவிட்டது!

அந்த அவமானத்தை எண்ணும்பொழுத 'கஜானாவில் பணம் கட்டியாக வேண் டுமே!' என்ற கவலைகூட அவனை விட் அகன்று விட்டது.

பொதுவாகக் கடன் வாங்கும் பே வழிகள் எல்லாருமே ஏமகாதகர்கள யிருப்பார்கள். அனுபவமற்ற சாதாரண புத்தியுள்ள மக்கள், இம்மாதிரி சந்தர் பங்களைக் கண்டாலே நடுநடுங்கிப் போ விடுவார்கள். ஆனால் அனுபவசாலிகளு கெல்லாம் இது தண்ணீர் பட்ட பாடு அவர்கள் எதற்குமே அஞ்சமாட்டார்கள் இந்தக் கலையில் ராமநாத்துக்கோ அ வளவு அனுபவம் இல்லை. ஆகவே, 'என்ன ஆகுமோ?' என்ற கவலை அவனைச் சூழ்ந் கொண்டது. இந்தப் பிரச்னையைத் தீர்க் அவன் எவ்வளவோ முயன்றான். ஆனா அவனுடைய மனம் திரும்பத் திரும் 'என்ன ஆகுமோ?' என்ற அந்த ஒ கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்டு கொண்டிருந்தது. கடைசியில் அவனுக் யோசனை ஒன்றும் ஓடவே யில்லை. மூ குழம்பி விட்டது. கண்களை மூடிக் கொண் டான். இந்த மூடிய இமைகளின் இ ஓரத்திலும் கண்ணீர் முட்டி நின்றது.

"ஆமாம், நீங்கள் இன்னும் கொஞ்ச தான் பாக்கி இருக்கிறது என்று சொ னீர்களே, அவன்......" என்று பத்ம ஆரம்பித்தாள்.

ராமநாத் தலை குனிந்தவாறே, "அந்த பயல் பொய் சொல்லுகிறான். நா பணம் கொடுத்திருக்கிறேன்!" என்றான்.

"கொடுத்திருந்தால் இவ்வளவு தைரி மாகப் பணம் கேட்க வருவானா? உங் ளுக்கு வரும்படி இவ்வளவு குறைவ யிருக்கும்பொழுது, நகைகள் எதற்கா வாங்கினீர்கள்? நான் நகைக்காக உங்க என்றைக்காவது கஷ்டப்படுத்தினேனா அப்படிக் கஷ்டப்படுத்தினேன் என்றே வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அல்லவ முன் யோசனையோடு நடந்து கொ டிருக்க வேண்டும்? எனக்கும் அல்லவ வசவு வாங்கி வைக்கிறீர்கள்? மனிதர எத்தனையோ விஷயங்களை ரகசியமா வைத்துக் கொள்ளுவது உண்டுதான் ஆனால் கட்டின பெண்டாட்டியிடம்கூ மறைக்கிறான் என்று நான் கேள்வி பட்டதே யில்லை. உங்களுக்கு வரும்ப இவ்வளவு குறைவு என்று தெரிந்திருந்தா நான் என் கையை அடக்கிச் செலவு செ திருப்பேனே, இல்லையோ? இப்படி வெ

வெகு விரைவில் வலி நிவாரணமடைய

டாக்டர்கள் இப்புதிய சீர்திருத்தமடைந்த ஆஸ்பிரின் மருந்தை சிபார்சு செய்கின்றனர்




விரைவில் நிச்சயமாகவும் வலியைப் போக்குவதில் ஆஸ்பிரின் மிகச் சிறந்தது என்பது ஸ்தாபிக்கப்பட்டு விட்ட உண்மை. டாக்டர்களும் நிபுணர்களும் அனுபவத்தின்மூலம் இம்மருந்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். ஆகவே ஆஸ்பிரின் தேவையுள்ளோர் இப்புதிய சீர்திருத்தமடைந்த முறையான "அலாஸில்" கேளுங்கள்.

அலாஸில் நொடியில் வேலைசெய்கிறது. காரணம் அதிலுள்ள உயர்ந்தரக ஆஸ்பிரின் மட்டுமின்றி, அலாஸில் வெகு சுலபமாக ஜலத்திலோ வாயிலோ கரைந்து உட்செல்லுகிறது. உடனேயே அலாஸில் உட்கொண்டால் தலைவலி, ரவிப்பு, இன்ப்ளுயன்ஸா, பல்வலி, நரம்புக்கோளாறு, கீல்வாதம், கீல்பிடிப்பு, முடக்குவாயு, [illegible], அடிக்கடி வலி முதலியன குணமாகும்.

வலியை நிவர்த்திக்கும் வேலையைத் தொடங்குகின்றது. வயிற்றுப்புளிப்பை நீக்கும் மருந்துகளை அளவோடு சேர்த்திருப்பது அலாஸிலின் மற்றொரு முக்கிய அம்சம். இதனால் பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங்களும் விலக்கப்படுகின்றன. ஆகையால் ஜீரணசக்தி குறைவாயிருப்பவர்களுக்கூட வலி நிவாரணத்திற்கு அலாஸிலை தடையின்றி உபயோகிக்கலாம்.

ஒரு வில்லை அலாஸில் போதுமானது. ருசி ஏதும் கிடையாது. ஆகையால் குழந்தைகள் முதல் பெரியோர்வரை யாரும் உபயோகிக்கலாம். தவிர இருதயத்திற்கு எவ்வித ஹானியும் தராது. ஒரு பழக்கத்தையும் உண்டுபண்ணாது.



Alasil

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

டிஸ்டிரிபியூட்டர்கள்: ஜெர்மன் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிட., த. பெ. நெ. 1205, மதராஸ், மற்றும் பம்பாய், கராச்சி & கல்கத்தா தவிர (மலையாளக்கரைக்கு) இங்கிலீஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாப்பரேடிவ் ஹோல்சேல் சொஸைடி லிட., கள்ளிக்கோட்டை.

(7)

லாம் வீணாக அடாபிடிச் செலவெல்லாம் செய்திருப்பேனா? அவன் எங்கேயாவது பிராது செய்து வைத்தால் என்ன செய்வது? எழுநூறுக்குப் பதிலாக ஆயிரம் அல்லவா தண்டம் அழவேண்டி வரும்! நீங்கள் என்னிடமே இப்படியெல்லாம் மறைப்பீர்கள் என்று எனக்குத் தெரியாமல் போயிற்று! நான் என்ன வேசியா? 'அகப்பட்டது ஆதாயம்' என்று கட்டிச் சுருட்டிக் கொள்ளுவதற்கு? நல்லதோ, கெட்டதோ, உங்களுடன் சேர்ந்து அனுபவிக்க வேண்டியவள் தானே! சுகப்படும் பொழுது நீங்கள் என்னை லட்சியம் செய்யா விட்டாலும் பாதகமில்லை; கஷ்டப்படும் பொழுது என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டாமா?" என்று கேட்டாள் பத்மா.

ரமாநாத் பதில் ஒன்றும் சொல்லாமல் ஆபீசுக்குப் புறப்பட்டான். அதைக் கண்ட பத்மா ஓடிப்போய் அவனைக் கூப்பிட்டு, "என்னிடமிருக்கும் இருநூறு ரூபாயையும் கடைக்காரனுக்குக் கொடுத்து விடுவதுதானே!" என்றாள்.

ரமாநாத் புறப்படும்பொழுது வேண்டுமென்றே பத்மாவிடம் பணம் கேட்கவில்லை. பத்மா கேட்டதும் கொடுத்து விடுவாள் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு வார்த்தைகள் கேட்ட பின்பு, அவளிடம் ரூபாய் கேட்பதற்கே அவனுக்குச் சங்கோசமாகவும் பயமாகவும் இருந்தது. 'இன்னும் அவள் ஏதாவது உபதேசம் செய்ய ஆரம்பித்து விட்டால்?' என்ற பயம் வேறு அவனுக்கு. ஆகவே தான் அவன் பேசாமல் ஆபீஸுக்குப் புறப்பட்டான். ஆனால் பத்மாவே அவனைக் கூப்பிட்டுக் கேட்ட பொழுது அவனுக்குச் சற்றுத் தைரியம் பிறந்தது. "சரி, அப்படியானால் கொண்டு வாயேன்!" என்றான்.


பத்மா மாடிக்குப் போய்ப் பணத்தை எடுத்து வர ஓடினாள். அவன் வாசற் பக்கத்து அறையிலேயே உட்கார்ந்து கொண்டான். பணத்துடன் திரும்பி வந்த பத்மா, அவன் கையில் பணத்தை எண்ணிப் போட்டாள். 'ரமாநாத் பணத்தைக் கண்டதும் மனம் பூரித்துப் போவான்' என்று அவள் எண்ணியிருந்தாள். ஆனால் அவள் எண்ணம் பூர்த்தியுறவில்லை. அவனைத்தான் 'இன்னும் மூந்நூறு ரூபாய்க்கு என்ன வழி செய்வது?' என்ற கவலை வாட்டிக் கொண்டிருந்ததே!

ரமாநாத் தெருவுக்கு வந்ததும் ஒரு வண்டியை அமர்த்திக் கொண்டான்.

ரத்தனைப் பார்க்க முடிந்தால் பாக்கி மு
நூறு ரூபாய்க்கும் ஏதாவது ஏற்பா
செய்து விடலாம் என்ற சபல
அவனுக்கு. ஆகவே வண்டியை ஜார்
டவுனுக்கு ஓட்டுமாறு சொன்னான். வ
நெடுக, 'ரத்தனைக் கண்டால் சங்கோ
சத்தை விட்டுக் கேட்டே விடுவது!' என்
அவன் மனக்கோட்டை கட்டிக் கொண்டே
போனான். சிறிது நேரத்துக் கெல்லா
ஜார்ஜ் டவுன் வந்து விட்டது. ரத்
னுடைய பங்களாவும் வந்தது. அவ
வராந்தாவில் உட்கார்ந்திருந்தாள். ரமாநா
அவளைக் கண்டதும் கை கூப்பினான்
அவளும் அதற்குப் பிரதி வணக்கம் தெ
வித்தாள்; ஆனால் கூப்பிடவில்லை
அத்துடன் அவள் நிறுத்திக் கொண்
விடவே, அவன் கட்டி வைத்திருந்த மன
கோட்டை சுக்கு நூறாகத் தகர்ந்து வி
டது. அவனுக்குப் பங்களாவில், 'அழைய
விட்டுச் சம்பந்தியாக' நுழையத் தைரிய
ஏற்படவில்லை. வண்டியும் அவள் வீ
டைத் தாண்டி விட்டது. ரத்தன் கூப்பி
டிருந்தால் போயிருக்கலாம்; இல்லை
அவள் வராந்தாவில் இல்லாமலிருந்தாலு
உள்ளே நுழைந்திருக்கலாம். ஆனால் வரா
தாவில் உட்கார்ந்திருப்பவள் கூப்பிடாம
இருக்கும் பொழுது, உள்ளே எப்ப
நுழைவது?

வண்டி 'கவர்ன்மெண்ட் ஹவுஸ்' பக்க
வந்து விடவே, ரமாநாத் திடுக்கிட்
"முனிஸிபல் ஆபீசுக்குப் போ, அப்பா!
என்றான். வண்டிக்காரன் வண்டியை
திருப்பி ஓட்டினான்.

மணி பதினொன்று அடிக்கும்பொழு
ரமாநாத் ஆபீசை அடைந்தான்
அவன் முகம் வாட்டமுற்றிருந்தது. இதய
'பட பட'வென்று அடித்துக் கொண்டி
'ஹெட் கிளார்க்கு நம்மைப் பற்றிக் கே
டிருப்பார். போனதும் நம்மைக் கூப்பி
டாலும் கூப்பிடுவார். அவர் ஆபீஸ் விஷய
தில் கொஞ்சம்கூடத் தயை தாட்சண்ய
வைத்துக் கொள்ளுவதில்லை. யாராயிரு
தாலும் ஒரே விதமாகத்தான் நடந்து கொ
ளுவார்!' என்ற பயம் வேறு அவனை உ
ளுற வாட்டிற்று. வண்டியிலிருந்து இற
கியதும், ரமாநாத் தன் அறையை ஒ
முறை பார்த்தான். அவனை எதிர்பார்த்து
கொண்டு எத்தனையோ ஜனங்கள் நின்
கொண்டிருந்தனர். அவன் தன் அறை
பக்கம் போகாமல், நேரே ரமேஷ்பாபுவி
அறையை அடைந்தான். (தொடரும்



போட்டிக்கதை 7

கோழிப்

அந்தி மயங்கும் நேரம். சிறு
குழந்தைகள் தேம்பித் தேம்
அழுவது போல் வானம் பொரும்
இலேசாகத் தூற்றல் போட்டது
பற்றைக் காட்டில் சுள்ளி பொறுக்
கிக் கொண்டிருந்த மருதாயி, "பூ
இதென்னடி ஆத்தா, பிசுபிசுத்த
மழை!" என்று உதட்டைப் பிதுக்
கினள்.

அவளுடைய ஏளனத்தைக்
கண்டு வெகுண்ட வானம், ஆக்
ரோஷத்துடன் குமுறி, சடசட
வென்று பெரு மழையாகக்
கொட்டியது. "இப்பத்தான்
மானத்துக்கு ரோசம்
வந்து பொத்துக்கிட்டு
ஊத்துது. அந்த ஐயனார்
புண்ணியத்தாலே, பஞ்
சம் தொலைய நல்லா
மழை அடிக்க ஊத்தட்
டும்" என்று குதூகலத்
துடன் கூவியவண்ணம்,
மருதாயி விர்ரென்று
பாய்ந்து சாலையோர



பந்தயம்

ுள்ள ஒரு சாவடியில் மழைக்காக ஓடி ஒண்டினுள். அந்த
ழியே போய்க் கொண்டிருந்த ஒருவன் மழைக்கு ஒதுங்கு
தற்காக அந்தச் சாவடியை நோக்கி ஓடி வந்தான். உள்ளே
ரு பெண்ணின் நிழல் தெரிவது கண்டு, தயங்கி வெளியி
லேயே நின்று விட்டான்.

"அது யாரையா, கொட்டுற மழையிலே நிக்கிறது? சளி
டிச்சுக்காது?......சும்மா உள்ளே வந்து நில்லுங்கையா!"
ன்று கிராமப் பெண்களுக்கே உரிய அனுதாபத்துடனும்,
ச்சமற்ற தன்னம்பிக்கை யுடனும் அவனை அந்தச் சிறு
கொட்டகையினுள் அழைத்தாள்.

அந்தக் குரல் அவனுக்குச் சட்டென்று தெரிந்துவிட்டது.
யாரது, மருதியா?" என்று ஆசை பொங்கக் கேட்டுக்
காண்டே, உரிமையுடன் உள்ளே ஓடிவந்து அவள் பக்கத்
தில் நின்றான்.

"வேலமுத்து மச்சானு? எங்கிட்டிருந்து ஓடி வாரே, இந்த
ானம் மறுக் கொண்டிருக்கிற சமயத்திலே? காங்கிரசுக்காரங்க
ட்டங்கியா?"

"ஆமா, மருதி! சோளம்பட்டி
லே காங்கிரசுக் கூட்டம். பெரிய
பரிய ஆளுங்களெல்லாம் பேசினுங்க,
துவிலக்கைப்பத்தி. நம்ம கிராம
னங்களுக்குக் கள்ளுதான் எமன்.
தை அடியோடெ ஒழிக்க சர்க்காரு
ழி தேடணும். கிராமத்திலே உள்ள
யசுப் பிள்ளைகளும் மூளைங்க நின்னு



அரு. இராமநாதன்

கள்ளுக்கடைகளை மூட வழி பாக்கணும். அது அவுங்க கடமை யின்னு சொன்னாங்க !......இந்தா மருதி, உனக்குத் தெரியுமா, வர்ற வெள்ளிக் கிழமை பொழுதிலே, ஈசன், செல்லையா, ராக்காயி புருசன் பணத்தன், பெரிய வீட்டுப் பிள்ளை மருதநாயகம், இன்னும் நாலஞ்சு பேராச் சேர்ந்து நம்ப ஆட்டுமுழி ஐயாக்கண்ணு தெக்கித் தெருவிலே வைச்சிருக்கான் பாரு கள்ளுக்கடை, அதை மறியல் செய்யப் போறோம்.”

“உனக்கேன் இந்த ஊர் வம்பெல்லாம்? பேசாமெ ராசாவாட்டம் குந்தியிருக்கப் படாது?” என்றாள் வாஞ்சையுடன் மருதாயி.

“என் மருதி, ஒங்க அப்பன் இன்னும் அடிக்கடி கள்ளுக்கடைப் பக்கம் போறானா?”

“அதையேக் கேக்கிறே? ஒரு நாளைக்குச் சொய புத்தி யிருந்தா நான் சொல்றதைக் கேட்டுக் கஞ்சித் தண்ணி குடிச்சுக்கிட்டு வீட்டிலேயே இருக்கும். ஒரு நாளைக்கு அந்தக் கிறுக்குப் புத்தி வந்திட்டா கள்ளுக் கடைப் பக்கம் பறிஞ்சிடும்.”

“உம், வரட்டும்; வர்ற வெள்ளிக்கிழமை வந்து பாரு. ஒங்க அப்பாரு மனசு, இன்னும் குடிக்கிறவுங்க மனசை யெல்லாம் எப்படி உருக்கமாப் பேசி மாத்திப்பிடறேன்னு!” என்று ஆரம்பித்து, குடியின் தீமைகளைப் பற்றிப் பிரசங்கமாரி பொழியத் தொடங்கினான். நல்ல வேளையாக வானத்தில் அப்போது சடசட வென்று முறிந்த ஒரு இடி மருதாயியின் காதைக் காப்பாற்றியது!

சுற்றிலும் மையிருட்டு. முன்னால் ஜிலு ஜிலுவென்ற காற்று. உணர்ச்சிகளைக் கிளப்பும் தனிமை. பிரேமையில் ஒன்று கலந்து நிற்கும் இரண்டு யௌவன உள்ளங்கள். மருதாயியின் மனம் கவரும் பேச்சிலே வேலமுத்துவிற்கு ஒரு வித மயக்கம் ஏற்பட்டுவிட்டது. “மருது!” என்று உணர்ச்சி பொங்கக் கூவிக்கொண்டே, வெடவெட வென்று நடுங்கும் அவள் கையைப் பற்றினான். ஜில்லென்ற ஒரு அனல் வேகம், அவன் தொட்ட இடத்திலிருந்து கிளம்பி அவள் உச்சி முதல் உள்ளங்கால் வரை பரவியது. அப்பொழுது தான் அவள் வெகுளித்தனம் மெல்ல மெல்ல மாய்ந்து பயம் தோன்ற ஆரம்பித்தது. “ஊஹூம்! இப்பத் தொடப்படாது; எல்லாம் கழுத்திலே மஞ்சக் கயிறு ஏறினப் புறந்தான்!” என்று நாணத்தோடு கூறி, வெடுக் கென்று கையைப் பறித்து கொண்டு, கொட்டுகிற மழையிலே வீட்டை நோக்கி வேகமாக ஓடலானாள்.

2

மருதாயி 'தாயில்லாத பெண். அவ அப்பன் தொப்பை, விவரம் தெரிந்த கா முதல் கள்ளையே முன்னறி தெய்வமாக கருதி, அதைத் தன் வயிற்றில் கோயி கொள்ளச் செய்து வழிபடுபவன். கலய கலயமாகக் கள் உள்ளே விழ விழ, அவ வயிறும் நாளொரு மேனியும் பொழுதொ வண்ணமுமாக வளர்ந்து, 'தொப்பை' எ னும் சிறப்புப் பெயரையும் தேடித் தந்த

மருதாயி துடுக்குக்காரி, மகா ரோச காரி, எதற்கும் விட்டுக் கொடுக்க மா டாள். தன் தாயின் துன்பங்களுக்கு காரணமான தன் தகப்பன் மீது எத கெடுத்தாலும் அவளுக்குச் சடக் சட கென்று கோபம் வந்துவிடும். ஆன அவளையும் மீறி தொப்பைமீது ஒரு பா மிருந்தது. அவனும் அந்தப் பாசத்தளையி கட்டுண்டு அவள் பேச்சுக்கு மறு பேச்சி லாமல் நடப்பான்.

மருதாயிக்குப் பயந்து முன்போல் இ பொழுது தொப்பை மிதமிஞ்சிக் குடிப் தில்லை. தப்பித் தவறிக் குடித்து விட் வந்தால், அதையும் அவளிடம் சொல் விடுவான். “இந்தா ஆயி, கோவிச்ச காதே!......ஆட்டு முழி ஐயாக் கண் இல்லே, அவன் சும்மா வான்னு என்னை கள்ளுக் கடைக்கு இழுத்தான். நானு புத்தி யில்லாமெப் போயிட்டேன்!” எ பான். அவளும், “சரி, போவுது! இனி அந்தப் பய கூப்பிட்டா, 'போடா, போ கிரிப் பயலே!'ன்னு வந்துடு!” என்று அ பும் அதிகாரமும் தொனிக்கக் கூறுவாள்.

கள்ளுக் கடையின் சொந்தக்காரனு ஆட்டுமுழி ஐயாக்கண்ணுவுக்கு மருதா யின்மேல் ஒரு கண்! இளமையின் முறுக் அவனிடம் ஏற ஏற, தொப்பையுடன் அவ அதிகமாக உறவாட ஆரம்பித்தான். கட கவும், சில சமயங்களில் காசில்லாமலு தொப்பைக்குக் கள்ளுத் தண்ணி ஊத் தான். தொப்பைக்குக் கலயம் ததும்ப ததும்பக் கள்ளு கிடைப்பதைக் கண்ட மற் குடிகாரர்கள், தங்களுக்கும் மருதாயியை போல் ஒரு மகள் இல்லையே என்று வரு தப் பட்டார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை. ஆட்டுமு ஐயாக்கண்ணுவின் கள்ளுக்கடை மு

னால் பெருத்த கூச்சலும் கலவரமும் ஏற்பட்டன. அன்றுதான் வேலமுத்து தன் தோழர்களோடு கள்ளுக்கடையை மறியல் செய்தான். குடிக்க வந்தவர்களிடையே மூர்க்கமான கோபம் மூண்டது.

“நாம் நாலு காசு சம்பாதிக்கிறோம். நம்ம இஷ்டம்போல அந்தக் காசுக்குக் கள்ளுத் தண்ணியைத்தான் குடிப்போம், இல்லே சாக்கடையிலே விட்டெறிவோம். அதுக்கு எந்தப் பய அண்ணே, நம்மைக் கேக்க வர்றானுங்கறேன்?” என்று குரலிட்டான் சோணி சுப்பன்.

“நாங்க நாலுங் கண்ட பெரிய மனுசனுங்க. நேத்து மொளேச்ச ஒரு சுன்னிப் பயலா நமக்குப் புத்தி சொல்ல வர்றது? கலிகாலமில்லே! டேய் வேலமுத்து, மரியாதையா இந்த இடத்தை விட்டுப் பறிஞ்சிடு. இல்லே, ஒங் கழுத்தைச் சீவிப்புடுவேன், சீவி!” என்று கையிலுள்ள கூர்மையான அரிவாளைச் சுழற்றிக்கொண்டே உறுமினான் தலைவிக் கறுப்பன்.

சுற்றி நின்று வேடிக்கை பார்த்த கும்பலில் கலங்கிய கண்களுடன் நின்று கொண்டிருந்தாள் மருதாயி. வேலமுத்து கள்ளுக் கடையின் வாசலைத் தடுத்துக் கொண்டு நின்றான். குடிகார முரடர்கள் அவனையும் அவன் சகாக்களையும் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைய முற்பட்டார்கள். வேலமுத்து குபீரென்று கடை வாசலில் குப்புறப் படுத்துக்கொண்டான். அவன் தோழர்களும் கீழே படுத்தார்கள். உள்ளே போக வேண்டுமானால் அவர்களை மிதித்துக் கொண்டு சென்றால்தான் முடியும்.

“உங்களை உள்ளே விடமாட்டோம்; மு டி ஞ் சா எங்களை மிதிச்சுக்கிட்டுப் போங்க!” என்று கூவினான் வேலமுத்து.

உள்ளே நுழைய எத்தனித்த அத்தனை பேரும் வாயடைத்துப்போய் இன்னது செய்வதென்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு நின்றார்கள்.

“என்ன அண்ணே, எல்லாரும் கல்லுப் புள்ளையாரு மாதிரி நிக்கிறீங்க! இந்த வலுச் செத்த பயல்களை ஏறி மிதிச்சுக்கிட்டு வர ஒருத்தருக்காச்சும் திராணி யில்லே? ஏன் தொப்பை! ஒனக்குமா வலிவு இல்லே?” என்று ஒரு கள்ளுக் கலயத்தைத் தூக்கிக் காட்டிக் கொண்டே, கடையிலிருந்து அறைகூவி அழைத்தான் ஐயாக்கண்ணு.

தொப்பை ஏதோ ஒரு வெறியில், பாய்ச்சல் கிடாப்போல் துள்ளிக் குதித்து வேலமுத்துவின் முதுகின்மேல் தாவி யேறினான். “சபாசு தொப்பை!” என்று இரைந்து கொண்டே மற்ற குடிகாரர்களும் புற்றீசல்போல் கிளம்பி, படுத்திருந்தவர்களை மிதித்துக் கொண்டு கடைக்குள் பாய்ந்தார்கள். தொப்பை இன்னது செய்கிறோமென்ற நினைவே யில்லாமல், வேலமுத்துவின் முதுகின்மேல் ஒரு காலும், தலையில் ஒரு காலும் வைத்துக்கொண்டு மதயானைபோல் நின்றான். மகத்தான ஒரு காரியத்தைச் சாதித்தவன்போல் செருக்குடன் தலை நிமிர்ந்து சுற்றி நின்ற கும்பலை ஒரு தரம் உற்றுப் பார்த்துக் கொண்டு வந்தான். ஒரு மூலையில், ஆத்திரமும் அருவெறுப்பும் கலந்த விழிகளுடன் மருதாயி அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்ததும் தொப்பை அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டான். மருதாயியின் கண்ணை ஏறிட்டுப் பார்க்கவே அவனுக்குக் கூசியது. அவள் பார்வை, ‘சீச்சீ, நீயும் ஒரு மனுசனா!” என்று கேட்பது போலிருந்தது.

3

அந்தச் சம்பவம் மருதாயியின் மனதில் நன்றாக வேரூன்றிக் கொண்டது. தொப்பையைப் பார்க்கும்போதெல்லாம் அவள் முகத்தைச் சுளித்துக் கொள்வாள். சொல்ல முடியாத அருவருப்பும் அலட்சியமும் அவள் கண்களில் புலப்படும். முன்போல் அவன் பக்கத்தில் குந்தியிருந்து, ‘இன்னுங் கொஞ்சம் தின்னு; இந்த மணத்தக்காளி தொவையலுக்கும் கஞ்சிக்கும் நல்லாயிருக்கும்’ என்று அவள் ஆசையோடு தன் கையால் அவனுக்குக் கஞ்சி ஊத்துவதில்லை. கஞ்சி காய்ச்சி ஒரு கலயத்தில் எடுத்து வைத்து விடுவாள். அவனாக வந்து குடித்தாலுண்டு. குடிசை முன்னால் தினம் வந்து படுக்கும் அந்தச் சொறி நாய் வெள்ளைக்கு, ‘தோ தோ’ என்று பரிவோடு தன் கையால் கஞ்சி வைப்பாள் மருதாயி. ஆனால் தொப்பைக்கு அந்தப் பரிவோடு தன் கையால் கஞ்சி ஊத்த மாட்டாள்.

மூன்று மாதமாக ஒருவரோடொருவர் பேச்சு மூச்சில்லை. எல்லாம் ஊமைப் படம் போல் நடக்கும். தன் வீட்டிற்குள்ளேயே அவன் அன்னியனாகிவிட்டான்.

அவள் கோபித்துக் கொண்டு பேசாமலிருந்தாலும் பாதகமில்லை. ஆனால் அலட்சி

யத்துடனும் அருவருப்புடனும் அவனைப் பார்க்கிருனே, அதைத்தான் அவனுல் சகிக்க முடியவில்லை.

மனங் குன்றிய தொப்பை மனச்சாட்சியை மறைக்க மிதமிஞ்சிக் குடிக்கலாஞன். கள்ளுக்கடையில் கடன் விஷம் போல் ஏறியது; கூடவே கடனைப் பற்றிய கவலையும் தொப்பைக்குப் பெருகியது.

ஒரு நாள் ஐயாக்கண்ணு தொப்பையைத் தனியாகக் கூப்பிட்டு, "இந்தா தொப்பே, கடனுக்காவ கவலைப்பட்டுச் சாகாதே! பேசாமெ ஒம் மருநியை எனக்குக் கட்டிக் கொடுத்திடு. அவளை ராசாத்தியாட்டம் வச்சிக்கிறேன். நீயும் ஒரு சல்லிக்காசு கூடத் தர வேணும். ஒனக்கு ஆயுசு முழுக்க எனுமா கள்ளுத்தண்ணி ஊத்தறேன்!" என்று ஆசை காட்டினுன்.

"இந்தாண்ணே, எனக்கு எம்புட்டோ ஆசைதான்! ஆனு நம்ம மருதாயிக் குட்டி அந்த வேலமுத்துப் பய மேலேயே கண்ணுயிருக்குது. அது மகா துடுக்குப் புடிச்ச பொண்ணு. ஒன்னைக் கட்டிக்க ஒத்துக்குதோ, என்னவோ?" என்று தொப்பை இழுத்தான்.

அப்பொழுது அந்தப் பக்கம் வந்த தொண்டி, தொப்பையை நோக்கிக் கத்திஞன்:

"என், தொப்பே! பங்குனி பொறக்கப் போவுதில்லே. வளக்கம் போல இந்த வருசமும் கோழிப் பந்தயம் வைக்கிறியா, என்ன?"


பளிச்சென்று தொப்பையின் மூளையில் அபூர்வமான ஒரு யோசனை உதயமாயிற்று. "இந்தா ஐயாக்கண்ணு, எனக்கு ஒரு யோசனை தோணுது. பங்குனி மூதத் தேதியிலே ஒரு கோழிப் பந்தயம் வைக்கலாம். நீயும் அந்த வேலமுத்துப் பயலும் கோழிங்க கொண்டு வந்து சண்டைக்கு விடுங்க. எவன் கோழி ஜெயிக்குதோ அவனுக்கு எம் பொண்ணு மருநி!......இந்தாண்ணே, நா ஒனக்குப் பட்ட ஓடமைக்கு வேணுக்க, எங் காட்டுவீரன் சேவலை ஒனக்குக் கொடுக்கிறேன். அது எம் புட்டோ சண்டைங்க பாத்து ஜெயிச்சிருக்குது. அப்புறம் சாமியாப் பாத்து விட்ட வழி. நமக்கேன் ஒருத்தரு பொல்லாப்பு?" என்ருன்.

அன்றிரவு முதல் ஐயாக்கண்ணு நிசி சங்கு சொர்க்கமாஞன்.

4

கோழிப் பந்தயத்தைப் பற்றிய சங்கதியைத் தொப்பை மெல்ல மென்று விழுங்கிக்கொண்டே மருதாயியின் காதில் போட்டான். அவள் அடியுண்ட நாகம்போல் சீறி விழுந்தாள்.

"என்னைப் பந்தயம் வைக்க நான் காசா, பணமா? ஒம் புத்தியும் இப்படிப் போவுமா?"



"புத்தியில்லாமே ஐயனாரு முன்னாடி கைபோட்டுச் சொல்லிட்டேன், ஆயி! கோவிச்சுக்காதே ஆயி!"

"சரி, தொலையுது! ஒங் காட்டு வீரன் சேவலையாச்சும் அந்த வேலமுத்துகிட்டே கொடு!"

"இல்லே ஆயி! பட்ட ஒடமைப் பாரு, அதை அந்த ஐயாக்கண்ணுகிட்டே கொடுக்கிறேன்னு சொல்லிட்டேன். வேணுக்க, ஒங்கிட்ட இருக்கு பாரு; பெட்டைக்கோழி செல்லாயி, அதை வேலமுத்து சண்டையிலே உடட்டும். ஐயனாரு சாமிக்கு மனசிருந்தா என் ஒங் கோழியும் கெலிச்சிடாமப் போவுது?"

"சரி, தொலையுது! இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே கம்பும் கெல்லுமா தீனி போட்டு, சண்டைக்குப் பழக்கி என் செல்லாயியே ஒங் காட்டுவீரன் சேவலே அடிக்கச் செய்யறேன், பாரு! ஐயனாரு எனக்குத் தொணை யிருப்பாரு!" என்றாள் மருதாயி.

பங்குனி முதல் தேதி வந்தது. சந்தைப் பேட்டைக்கு அடுத்த ஐயனார் கோயில் பொட்டலில் ஏகக் கூட்டம். அங்கேதான் ஐயனார் சந்நிதிக்கு முன்னால் கோழிப் பந்தயம் நடக்க இருந்தது. ஆண் பெண் அடங்கலாக ஊர் ஜனங்கள் திரண்டு வந்திருந்தார்கள். தொப்பையும் ஆட்டுமுழி ஐயாக்கண்ணும் ஒரு கட்சி; மருதாயியும் வேலமுத்துவும் எதிர்க் கட்சி.

அன்று தொப்பை மிதமிஞ்சிக் குடித்திருந்தான். ஐயாக்கண்ணுவோ ஐந்து ஆள்; தன் காட்டுவீரன் சேவல்தான் ஜயிக்கும், மருதாயி நிச்சயம் தனக்குக் கிடைப்பாள் என்று கட்டுக் கடங்காத ஆனந்த வெறியில் 'உய், உய்யி' என்று சீட்டி யடித்துக் கொண்டிருந்தான்.

'பூம், பூம்' என்று ஒரு கொம்பு ஊதியது. இரண்டு கோழிகளின் காலிலும் நஞ்சில் தோய்த்த இரு சிறு பேனாக் கத்திகளைக் கட்டினார்கள். குழுமியிருந்த ஜனங்கள் களத்தை நோக்கிக் கொட்டக் கொட்ட விழித்துப் பார்த்தார்கள்.

"கொக்கரக்கோ!" என்று கூவிக் கொண்டே காட்டுவீரன் சேவல் களத்தை நோக்கி விர்ரென்று பாய்ந்தது. அதன் கண்களில் ஒரு மமதை, ஒரு அலட்சியம்!

"போ ஆத்தா, செல்லாயி!" என்று மருதாயி தன் கோழியின் முதுகில் வாஞ்சையோடு தடவிக் கொடுத்துக் களத்தை நோக்கி மெல்லத் தள்ளினாள்.


காட்டுவீரன் சேவல் பாய்ந்து வந்து செல்லாயியின் கழுத்தில் ஓங்கிக் கொத்தியது. அந்தச் சூட்டோடு, செல்லாயி எகிறிக் காட்டுவீரனின் கொண்டையில் தன் அலகால் கொத்தி, அதன் கழுத்திலும் தன் கால் நகத்தால் கீறியது.

கொக்கரக்கோ! ...கீ...கீ! — இரண்டு கோழிகளும் ஒன்றையொன்று கால் நகத்தாலும் அலகாலும் கீறிக்கொண்டும், 'காச் மூச்'சென்று கத்திக்கொண்டும் வெகு உக்கிரமாய்ச் சண்டை யிட்டன.

மருதாயியின் நெஞ்சு செல்லாயியின் நெஞ்சோடு ஒட்டிக்கொண்டது. அது சேவலைக் கொத்தும் போதெல்லாம் சிலிர்த்து உட்காருவாள்; அது குத்து வாங்கும்போதெல்லாம் அதைப்போல் தன் உடம்பையும் நெளித்து வளைத்துக் கொள்வாள். இடையிடையே ஏக்கம் கலந்த புன்னகையுடன் வேலமுத்துவைக் கடைக் கண்ணால் பார்ப்பாள்.

'கிரீச்!'—செல்லாயியின் ஒரு காலில் காட்டுவீரனின் கத்தி கீறிவிட்டது. ரத்தம் பீறிட்டு வழிந்தது. அதன் கால்கள் வெட வெடவென்று நடுங்கின. 'கீக்கீ' என்று கத்திக் கொண்டே செல்லாயி களத்தை விட்டு ஓடிவந்து, மருதாயியின் மடியில் ஏறிப் படுத்துக் கொண்டது.

'கொக்கரக்கோ!' — இது காட்டு வீரன் சேவலின் வெற்றியின் எக்களிப்பு. கத்தி



ளும் ஜனங்களின் வானத்தைப் பிளக்கும் கரகோஷம்.

மருதாயிக்கு அவமானமும் ஆத்திரமும் பொங்கியது. "சீச்சீ! சனியனே, தொலே!" என்று மடியில் தலே வைத்துக் கிடந்த செல்லாயியைக் கீழே தள்ளினுள். அன்பின் மெல்லிய அணைப்பை எதிர்நோக்கிய அது வெறுப்பின் இரத்தப் பலமான அடியை எப்படித் தாங்கும்? கூச்சத்துடன் தலே யைக் கோணலாகச் சாய்த்துக் கொண்டு, மெல்லக் கடைக்கண்ணுல் மருதாயியின் முகத்தை எறிட்டுப் பார்த்தது. அவள் முகத்தில் தேங்கிக் கிடந்த ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் கண்டோ என்னமோ, 'கெக்கெகே' என்று ஏதோ தன் பரிபாஷை யில் கூறியது. உடனே என்ன நினைத்துக் கொண்டதோ, களத்தை நோக்கிச் சர சரவென்று ஓடியது. அது போன வேகம் 'வெற்றி அல்லது சாவு' என்று அறை கூவுவது போலிருந்தது.

'கொக்கரக்கோ' என்று கொண்டையை ஆட்டிக் கொண்டு காட்டு வீரன் சேவல் செல்லாயியைச் சர்வ அலட்சியத்துடன் வரவேற்றது. ஆனல் செல்லாயி போன வேகத்தில் சேவலின் தாடையிலும் முது கிலும் சுருக் சுருக்கென்று கொத்தியது. காட்டு வீரன் கண்களில் தீப்பொறி! இறக்கையை விரித்துக் கொண்டு செல் லாயியின்மீது பாய்ந்தது. அதன் கத்தி செல்லாயியுடைய சிறகின் ஒரு ஓரத்தைப் பிய்த்துக்கொண்டு போயிற்று. இனி செல்லாயி சாகவேண்டியதுதான். ஆனல் எங்கிருந்து பலம் வந்ததோ தெரியவில்லே; செல்லாயி மூச்சைப் பிடித்துக் கொண்டு ஜிவ்வென்று மேலே எழும்பி, காட்டு வீரன் கழுத்தை நோக்கி விழுந்தது.

'சருக்!'—செல்லாயியின் காலில் கட்டி யிருந்த கஞ்சு தோய்ந்த கத்தி காட்டு வீரனின் கழுத்தில் பாய்ந்தது. ஆணவ மழிந்த காட்டு வீரன் மண்ணின் மீது மல்லாந்து விழுந்தது!

சுற்றிலும் ஜனங்களிடையே இடிபோன்ற சிரிப்பு; பல ரகப் பேச்சுக்கள். "அடி சக்கை!" என்றான் சப்பாணி. "என்ன ரோசக்கெடுறேன்!" என்று ஆச்சரியப்பட் டான் கருப்பாயி. "பொட்டையானலும் பாத்தியா, வலுச்சாட்டியத்தை!" என்று தன் மனைவி சாக்காயியைப் பார்த்துக் கண் சிமிட்டினுன் பனைத்தன்.

ஆட்டு முழி ஐயாக்கண்ணுவின் முகம் பேயறைந்தது போல் ரத்தம் செத்து விட்டது. "சூனியம் வச்சிட்டான்! நான் ஒத்துக்க மாட்டேன். சண்டையானப்பட்ட சண்டையிலே யெல்லாம் வெத்தின காட்டு வீரன் சேவலே ஒரு பொட்டைக் கோழி என்னமா அடிக்குமிங்கிறேன்!" என்று கத்தினான்.

"என் ஆத்தமாட்டாமே நாய்க் கணக்கா கத்தறே! ஐயனரு தயவு இருந்திச்சி, அதுக்கு மேலே எங்க அன்பு இருந்திச்சு, என் கோழி வெத்திடுச்சு!" என்று எனனம் செய்தாள் மருதாயி.

ஐயாக்கண்ணு தொப்பையின் பக்கம் திரும்பி, "என்ன தொப்பை, நீயுமா இதைச் சரியிங்கிறே? இது வெளையாட் டில்லே. மரியாதையா ஓம் மருதியை எனக்குக் கொடு. இல்லே, காலேக்கே எங் கடனேச் சாடா தீத்திடு!" என்றான்.

குடிவெறியில் தொப்பை தன் பக்கமே பரிந்து பேசுவான் என்பது அவன் நினைப்பு. ஆனல் அதற்கு மருதாயி விட வில்லே. "என் அப்பனே என்னென்னு நெனச்சே? சோறு திங்கிற சொரனே யில் லாதவருன்னு? ஐயனரு முன்னுடி ஒரு பேச்சுச் சொல்லிப்பிட்டு, அதை மாத்த அவருக்கு ரெண்டு நாக்கா, ஒரு நாக்கா?" என்றாள்.

இந்த வார்த்தைகள் தொப்பையின் உள் ளத்தைக் கிளறி விட்டன. அவன் மெல்ல மருதாயியின் கண்களே எறிட்டுப் பார்த் தான். அவன் கண்களில் இவ்வளவு நாளாக உறைந்து கிடந்த அலட்சியமும் அருவருப்பும் நீங்கி, ஆதரவும் வாஞ்சை யும் உயிர்பெற்றெழுந்து கொண்டிருந்தது. அவன் கண்களில் அல்லும் பகலும் அவன் எதைத் தேடிக்கொண் டிருந்தாளே, அது இப்போது அவனுக்குக் கிடைத்துவிட் டது. அதை மீண்டும் இழந்துவிட அவன் விரும்பவில்லே. எனவே, அவன் ஆவேசத் துடன், "ஏலே ஐயாக்கண்ணு, சும்மா சுக்கிரிவாலுத்தனம் பண்ணுதே! காலு நாப் பொழுதுக்குள்ளே, எம் பார வண்டியை வித்துத் தொலேச்சாவது ஒங் கடனே விட்டெறிஞ்சிடுறேன்! மத்தபடி எம் மரு திக்கு ஏத்தவன் இந்த வேலமுத்துத் தான்! இதை மாத்த நீயில்லே நானில்லே, அல்லாட்டி இந்த ஐயனரில்லே, ஒருத்த ராலேயும் முடியாது, ஆமா!" என்று கத்தினான்.

அப்பொழுது தொப்பையின் குரலில் தொனித்த தெம்பு, குடியின் போதையைத் தந்தையின் பாசம் வென்றது என்று எக்க ளிப்பது போலிருந்தது!

1947 மகோன்னத வருஷம்

நீங்கள் **பார்த்தவை**	இனி **எதிர்பார்ப்பவை**
கண்ணகி	கஞ்சன்
குபேர குசேலா	அபிமன்யு
மஹா மாயா	வேலைக்காரி
என் மகன்	கிருஷ்ண விஜயம்
வால்மீகி	விப்ர நாராயண
ஸ்ரீ முருகன்	
வித்யாபதி	
ராஜகுமாரி	

8 + 5

தியேடர் நிர்வாகிகளே !

உங்கள் அபிமானிகள்

ஜூபிடர்ஸ்

படங்களையே பெரிதும்

ஏன் விரும்புகிறார்கள்?

...து திரைச்சித்திரங்களின் வெற்றிச் சின்னம்.........

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட் மதராஸ் & திருப்பூர்



பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் திகழ்ந்து, தியாக அக்னியில் மூழ்கி,
நளாயனி, தமயந்தி, சாவித்திரி தேவிகளைப்போல் உலகம் உள்ளளவும்
அழியாத தெய்வத் தன்மை பெற்றுள்ள அன்னை கஸ்தூரிபாய்.



ஒப்பற்ற தியாக சீலரான பண்டித மோதிலால் நேருவைப் பர்த்தாவாகவும், ஈடுஜோடில்லாத ரத்னங்களான ஜவாஹர்லால்ஜியையும், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியையும் புதல்வர் – புதல்வியாகவும் பெறும் மகோன்னதமான பாக்யத்தை அடைந்த அன்னை ஸ்வரூப ராணி.



பாரத நாட்டு மக்களின் சுதந்திரத்துக்காக சுமார் அரை நூற்றாண்டு அருந்தொண்டு புரிந்தவரும், தம்முடைய மேதா விலாசத்தினால் ஜார்ஜ் பர்னார்ட்ஷா போன்ற அறிஞர்களையும் திகைக்கச் செய்தவருமான ஆங்கில மாதர் அன்னி பெஸண்ட் அம்மையார்.



ஜவாஹர்லால்ஜியின் தர்ம பத்தினியும், செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்து, பின்னர் எல்லாவற்றையும் துறந்து தேசியத் தவக்கோலம் பூண்டு, சிறை சென்று, சுதந்திர பலிபீடத்தில் தமது உயிரை அர்ப்பணம் செய்த வனிதாமணியுமான ஸ்ரீமதி கமலா நேரு.

நீலச் சக்கரம்

சுந்தா

நீல வானத்தில் வெண்ணிலாக் காய்வது பற்றி எத்தனையோ கவிகள் பாடியிருக்கிறார்கள். இனிமேல், வெண்ணிலாத் துகிலில் நீலச் சக்கரம் சுழல்வது பற்றியும் பல கவிகள் பாடுவார்கள்.

நமது புதிய தேசியக் கொடியின் மத்தியில் ரொம்ப அழகாக நீலச் சக்கரம் அமைந்து விட்டது. காற்றிலே நமது கோலக் கொடி பறக்கும்போது, நீலச் சக்கரம் சுழல்வது போலவே தோன்றுகிறது.

நாம் அடைந்திருக்கும் சுதந்திரத்துக்கு முத்திரையாய்த் துலங்கும் இச் சக்கரம், ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னால் அசோகரின் செங்கோலுக்கு முத்திரையாய் விளங்கிற்று. சம்ராட் அசோகரின் ஆட்சிச் சக்கரம், தென்னாட்டில் சேர சோழ பாண்டிய ராஜ்யங்கள் தவிர, மற்றப்படி பாரத கண்டம் முழுவதிலும் இயங்கிக் கொண்டிருந்தது. தென்னாட்டிலும் கூட, அசோக சக்கரவர்த்தியின் அன்புச் சக்கரம் சுழன்று கொண்டுதான் இருந்தது. அசோகரின் காலத்தில்தான் இந்தியாவின் நாகரிகச் சக்கரங்கள், இந்தியாவுக்கு வெளியிலும் வேகமாக உருண்டோடி, அநாகரிக மக்களை யெல்லாம் ஆளாக்கி வைத்தன.

மகாத்மா புத்தரின் உபதேசங்களைச் சிரமேற் கொண்ட மௌரிய மன்னர், சாரநாத் சிம்மக் கல்லில் தர்மச் சக்கரத்தைப் பொறிக்கச் செய்தார். அதற்குப் பிறகு, காலச் சக்கரத்தின் புரட்சியிலே தர்மச் சக்கரத்துக்கு எத்தனையோ சோதனைகள் நேர்ந்தன; எத்தனையோ அதிர்ச்சிகளும் தடுமாற்றங்களும் ஏற்பட்டன. ஆயினும் எல்லா இன்னல்களையும் தர்மச் சக்கரம் கடந்து வந்து, இன்றளவும் வெற்றி கோஷத்துடன் சுற்றிக் கொண்டிருக்கிறது.

மகாத்மா புத்தரின் சிஷ்யர் தர்மச் சக்கரத்தை வரையச் செய்ததுபோல, மகாத்மா காந்தியின் சிஷ்யர்கள் நீலச் சக்கரத்தை வரையச் செய்திருக்கிறார்கள். அசோகச் சக்கரத்தின் வடிவம் கொண்டிருக்கும் இந் நீலச் சக்கரம், 'காந்திச் சக்கர'த்தின் சின்னமுமாகும்.

மாபெரும் யந்திரச் சக்கரங்கள் பேரிரைச்சலுடன் சுழன்று கொண்டிருக்கும் நவீன உலகத்தில், சின்னஞ் சிறு கதர்ச் சக்கரத்தைச் சபர்மதி முனிவர் சுழல விட்டார். கைராட்டையின் சுழற்சியின் மூலம் தேசத்துக்கு விடுதலையைச் சுழற்றிக் கொண்டு வரலாம் என்று, இயக்கங்கள் செய்தார். சர்க்காவின் மூலம் தேசத்தின் எதிர்காலத்தையே நூற்கலானார்.

சக்கரவர்த்திகளும் சக்ராயுதபாணிகளும் ஆக்ஞா சக்கரத்தைச் சுழற்றி, பயங்கர சேனைகள் திரட்டிக் கடுஞ்சமர் நடத்தியதைச் சரித்திரத்தில் நிறையக் கண்டிருக்கிறோம். ஆனால், 'பாதி வேட்டிப் பண்டாரம்' ஒருவர், அன்புச் சக்கரத்தைச் சுழற்றி, சாத்வீக சேனைகள் திரட்டி, சத்தியாக்கிரகப் போர்கள் நடத்தியதை நம் தலைமுறையில்தான், நம் நாட்டில்தான் கண்டோம். பல்லாயிரக் கணக்கான பாரத மக்கள், தங்கள் வாழ்க்கைச் சக்கரங்களைச் சத்தியாக்கிரகப் போர்க்களங்களில் உருட்டி விட்டார்கள். எதிரியின் இரும்புச் சட்டங்களுடனும், ரணவெறித் திகிரிகளுடனும் எத்தனையோ தியாகச் சக்கரங்கள் மோதிச் சிதைவுண்டன. அவற்றிற்கெல்லாம் ஞாபகச் சின்னமாகவும் நீலச் சக்கரம் விளங்குகிறது.

"சுதந்திர உதய சூரியனை இந் நீலச் சக்கரம் குறிப்பிடுகிறது" என்று சிலர் சொல்கிறார்கள். "கண்ணபிரானின் சுதர்சனச் சக்கரத்தை இது ஞாபக மூட்டுகிறது" என்று வேறு சிலர் வர்ணிக்கிறார்கள். மற்றும் பற்பல சக்கரங்களையும் நினைவூட்டுவதாகச் சொல்லிக் கொண்டே போகலாம். எப்படிச் சொன்னாலும் பொருந்தவே செய்யும். ஏனெனில், சக்கரத்தில் அவ்வளவு பலனும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன. குயவன் சுற்றும் தண்டச் சக்கரம் முதல், விமானத்தில் காணும் பல்லுச் சக்கரங்கள் வரை, ஆயிரம் விதமான சக்கரங்கள் மனித வர்க்கத்துக்குப் பணி செய்து வருகின்றன. ஓட்டம், வேகம், இயக்கம், புரட்சி, முன்னேற்றம்—இவற்றிற் கெல்லாம் சக்கரமே சாதனமும் சின்னமும் ஆகும்.

இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு, சக்கரம் பதித்த கோலக் கொடியை வணங்குவோமாக!



கிளி பேசுகிறது!

விந்தன்

அந்த பங்களாவைச் சுற்றிலும் பெரிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் எத்தனையோ விதவிதமான மரங்கள், செடிகள், கொடிகள்! இலைகளில்தான் எத்தனை யெத்தனை வகைகள்; மலர்களில்தான் எத்தனை யெத்தனை நிறங்கள்; மணங்களில்தான் எத்தனை யெத்தனை விதங்கள்; கனிகளில்தான் எத்தனை யெத்தனை சுவைகள்! அம்மம்மா! அவற்றின் அழகை மனத்தால்தான் உணர முடியுமே தவிர, வாயினால் விவரிக்க முடியாது!

எல்லோருக்கும் பொதுவாக இயற்கை அளிக்கும் அந்தச் செல்வத்தைப் பங்களாவில் குடியிருந்த ஒரு சிலர் மட்டும் ஏக போகமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், தங்களைப் போன்ற மனிதர்களைத்தான் அவற்றை அனுபவிக்க முடியாதபடி அவர்களால் செய்ய முடிந்ததே தவிர, எங்களைப் போன்ற புள்ளினங்களை அவ்வாறு செய்ய முடியவில்லை.

அந்தத் தோட்டம் அவர்களுக்குச் சொந்தமாயிருக்கலாம்; அதன் மூலம் இயற்கை அளிக்கும் செல்வம் அனைத்தையும் அவர்களே அனுபவிப்பதற்கு உரிமையிருக்கலாம்; அந்த உரிமையும் சொந்தமும் எங்களுக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால் எங்களுடைய தயவு அவர்களுக்கு இல்லையென்றால், அந்த இயற்கைச் செல்வத்தில் கொஞ்சமாவது அவர்கள் அனுபவிக்க முடியுமா?

யாருடைய அனுமதியுமின்றி என் தாயும் நானும் அந்தத் தோட்டத்திலிருந்த ஒரு மாமரப் பொந்தில்தான் வசித்து வந்தோம். எங்களுக்கு அரசன் கிடையாது; ஆக்கினையும் கிடையாது; சட்டம் கிடையாது; தண்டனையும் கிடையாது.

நாங்கள் அடிமைகளாயிருக்கவுமில்லை; விடுதலை கோரவும் இல்லை.

காடு எங்களுடையது; நகரம் எங்களுடையது; நாடு எங்களுடையது; கடல் எங்களுடையது; வானம் எங்களுடையது மலைகள் நதிகளெல்லாம் எங்களுடையவை; மரம், செடி, கொடி எல்லாமே எங்களுடையவைதான்!

'என்னுடையது' என்று நாங்கள் எதை யுமே சொல்லிக் கொள்வதில்லை; எல்லைக் கோடு வகுத்துக் கொள்வதில்லை; பத் திரமோ சித்திரமோ எழுதிக் கொள் வதில்லை; ரிஜிஸ்தரோ கிஜிஸ்தரோ பண்ணிக் கொள்வதில்லை; எல்லைச் சண்டை போட்டுக் கொண்டு தொல்லைப்படுவது மில்லை; கோர்ட்டுக்குப் போய்க் கூப்பாடு போடுவதுமில்லை!

இன்னும் இறந்த காலத்தைக் குறித்து நாங்கள் வருந்துவதில்லை; எதிர்காலத்தைக் குறித்து ஏங்குவதுமில்லை; நிகழ்காலத் தோடு எங்கள் நினைவு நின்றுவிடும். ஆடு வதும் பாடுவதும் ஆனந்தக் கூத்தாடுவது மாகவே எங்கள் பொழுதெல்லாம் கழியும்.

ஆஹா! என்ன ஆனந்தமயமான வாழ்வு!

★

இத்தகைய ஆனந்த வாழ்வுக்கு ஒ[ரு] சமயம் பங்கம் நேர்ந்து விட்டது. என் னுடைய அம்மா தேடிக்கொண்டு வந்து கொடுத்த இரையைத் தின்று நான் வளர்ந்து கொண்டிருந்த காலம் அது. அப்போதுதான் எனக்கு இறகுகள் முளைத் துக் கொண்டிருந்தன. புதிய இறகு முளைப்பதோடு என் உள்ளத்தில் புதிய உற்சாகமும் பொங்கி வழிந்து கொண் டிருந்தது. பொந்தில் இருந்தபடி வானத்தை எட்டி எட்டிப் பார்ப்பேன். அந்த நீல வானிலே எத்தனை எத்தனையோ பறவைகள் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கும். அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் என[க்]கும் பறந்து சென்று அவைகளுடன் கலந்து கொள்ள வேண்டும்போல் தோன்றும். அந்தப் பறவைகள் என்னை 'வா, வா' என்று அழைத்தனவோ என்னவோ—

எனக்குத் தெரியாது; எனக்கு மட்டும் அவை ‘வா, வா’ என்று என்னை அழைப்பது போலவே யிருந்தது!

ஒரு நாள் என்னுடைய ஆவலை அம்மாவிடம் தெரிவித்தேன். “அவசரப்பட வேண்டாம்; காலம் வரும்போது உன்னுடைய ஆசை நிறைவேறும்” என்று அவள் சொல்லி விட்டாள்.

“காலம் எப்போது வருவது, ஆசை எப்போது நிறைவேறுவது!” என்று எனக்கு ஆத்திரமா யிருந்தது.

அதற்கேற்றாற்போல் அன்று ஒரு சிட்டுக் குருவி, நான் இருந்த மாமரத்துக்கும் பூமிக்குமாக ‘ஜில், ஜில்’ என்று பறந்து, ‘கீச், கீச்’ என்று விளையாடி என்னுடைய ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது.

நான் துணிந்து விட்டேன். “வான வீதிக்கு வேண்டுமானால் போகவேண்டாம்; இந்தச் சிட்டுக் ‘குருவி போல் இங்கேயே மாமரத்துக்கும் பூமிக்குமாகப் பறந்து கொண்டிருந்தால் என்ன?” என்று எண்ணிக் கீழே இறங்குவதற்காகச் சிறகடித்தேன். ஆனால், என்ன ஏமாற்றம்! என்னால் ஒரு அடிகூடப் பறந்து செல்ல முடியவில்லை; ‘பொத்’தென்று கீழே விழத்தான் முடிந்தது!

உடம்பில் பலமான அடி; வேதனையைத் தாங்க முடியவில்லை என்னால். ‘கீ, கீ’ என்று கத்த ஆரம்பித்துவிட்டேன்.

அப்போது யாரோ ஒரு சிறுமி அங்கே வந்தாள்—அவள் அந்த பங்களாவில் குடியிருப்பவர்களைச் சேர்ந்தவள்போ லிருக்கிறது—என்னுடைய கதறலைக் கேட்டதும் அவள் நான் இருக்கும் இடத்திற்கு ஓடோடியும் வந்தாள். என்னைக் கண்டதும் அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு ஆனந்தம் உண்டாகி விட்டதோ, தெரிய வில்லை. “அக்கா! கிளி, கிளி, கிளி! அக்கா! கிளி, கிளி, கிளி!” என்று கத்தினாள்.

உடனே அந்த பங்களாவிற்குள்ளிருந்து இன்னொரு பெண், “எங்கேடி, எங்கேடி?” என்று கேட்டுக்கொண்டே ஓட்டமாய் ஓடி வந்தாள்.

அவ்வளவுதான்; நான் அவர்களால் கைது செய்யப்பட்டேன்!

என்னுடைய அறியாமையால், ஆத்திரத்தால், அவசரத்தால், எனக்கு இயற்கையாகவே கிடைத்திருந்த சுதந்திரம் அன்று அநியாயமாகப் பறி போயிற்று!

“விடுதலை, விடுதலை, விடுதலை!” என்று நான் கதறும்படி யாகிவிட்டது!

அவர்கள் என்னமோ, என்னிடம் எவ்வளவோ அன்பு காட்டினார்கள். பழமும் பாலும் பரிந்து பரிந்து ஊட்டினார்கள். அடிக்கொரு தரம் என்னைத் தடவித் தடவிக் கொடுத்தார்கள். ஆத்திரத்தால் நான் ‘வெடுக் வெடுக்’ கென்று கடிப்பதைக்கூட அன்பினால் முத்தமிடுவதாக அந்த அப்பாவிகள் எண்ணிக் கொண்டார்கள்!

ஆனால் எனக்கோ பழமும் வேண்டியிருக்கவில்லை; பாலும் வேண்டியிருக்கவில்லை. யாருக்கு வேண்டும், இந்தப் பழமும் பாலும்!

ஐயோ! நம்மைக் காணாமல் அம்மா எப்படித் தவிக்கிறாளோ!

ஆம், ஆம், அவள் பேச்சைக் கேட்காத நமக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டியதுதான்!

இப்படி யெல்லாம் என்ன வெல்லாமோ எண்ணி யெண்ணி என் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

அந்தச் சிறுமிகளோ என்னுடைய சுதந்திர வேட்கையைக் கொஞ்சமாவது பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மேலும் மேலும் ராஜோபசாரம் செய்து கொண்டேயிருந்தார்கள்!

என்னுடைய சிறைச்சாலைக்குத்தான் எத்தனை சிங்காரம்! எத்தனை விதமான வர்ணப்பூச்சு! எத்தனை யெத்தனை பட்டுக் குஞ்சங்கள்!

ஆஹா! அதன் அழகுதான் அவர்களுக்கு எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்தது!

என்னை அடிமை கொண்ட அவர்களுக்கு வேண்டுமானால் அந்தப் பாழும் சிறைச்சாலை ஆனந்தத்தை யளிக்கலாம்; அடிமைப்பட்ட எனக்கோ? அதைப் பார்க்கும் போதெல்லாம் ஆத்திரம்தானே பற்றிக் கொண்டு வருகிறது!

எனக்கு மட்டும் போதிய பலம் இருந்திருக்குமானால், அதை அன்றே உடைத்தெறிந்து விட்டல்லவா வெளியே வந்திருப்பேன்!



★

வேடிக்கையைக் கேளுங்கள்: அதே பங்களாவில் என்னைப் போல் ஒரு நாயும் வளர்ந்து வந்தது. அதைப் பார்க்கும்போ

தெல்லாம் எனக்கு ஒரே எரிச்சலா யிருக்கும். அதன் அடிமை வாழ்வில்தான் அதற்கு எவ்வளவு திருப்தி!

“நன்றியுள்ள பிராணி!” என்று பெயரெடுக்க வேண்டுமாம், பெயர்! அதற்காக அது தன்னை யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்துவதில்லை. “சீ, நாயே!” என்று எத்தனை முறைதான் விரட்டி யடிக்கட்டுமே, இல்லை, செருப்பால் தான் அ டி த் து த் துரத்தட்டுமே — ஊஹூம்.........அப்போதும் அது வாலை ஆட்டு ஆட்டு என்று ஆட்டிக்கொண்டு, அவர்களுக்குப் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருக்கும்!

அதற்குச் சுதந்திரமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்; எச்சில் சோறும், எலும்பும், ‘நன்றியுள்ள பிராணி’ என்ற பட்டமும் கிடைத்தால் போதும்!

சீ! அதுவும் ஒரு ஜன்மமா!

அதை அவிழ்த்து வெளியே விடுகிற மாதிரி என்னையும் வெளியே விட்டால்...?

அந்த நாயைப்போல் நான் திரும்பியா வருவேன், அடிமையா யிருக்க?

“ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்!” என்று ஆகாய வீதியை நோக்கிக் கம்பி நீட்டிவிட மாட்டேனா!

★

அன்றொருநாள் அந்தச் சிறுமிகள் இருவரும் என்னிடம் வந்து, “ரங்க ரங்க ரங்க ரங்க ரங்கா! அக் கக் கக் கக் கா!” என்று கூச்சலிட்டனர்.

நானும் அப்படியே சொன்னேனோ இல்லையோ, அவர்களுக்கு ஒரே குஷி!

ஏன் தெரியுமா? அவர்கள் எனக்குப் பேசக் கற்றுக் கொடுத்தார்களாம்; நான் உடனே கற்றுக்கொண்டு விட்டேனாம்!

என்ன அசட்டுத்தனம்! எனக்கிருந்த வெறுப்பில் நான் அவர்களுக்கு அழகு அல்லவா காட்டினேன்!

அதற்குக் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாக இப்படி ஆனந்தப்படுகிறார்களே!

“அக்கா! இந்தக் கிளிக்கு இப்போது இறக்கைகள் வளர்ந்து விட்டன; கத்திரிக்கோல் கொண்டு வருகிறேன், வெட்டி விடுகிறாயா?” என்றாள் தங்கை.

எனக்குப் பகீரென்றது. “அடி பாவிகளா!” என்று சபித்தேன்.

நல்ல வேளையாக அக்கா அதற்கு ஒப்பவில்லை. “இறக்கைகள் வளர்ந்த பிறகு தான் கிளி பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது! அதை வெட்டி விட்டால் அவலட்சணமாய்ப் போய்விடாதோ!” என்றாள்.

அப்பாடி! ‘பிழைத்தேன்!’ என்று பெருமூச்சு விட்டேன்.

அந்தப் போக்கிரிப் பெண் அத்துடன் நிற்கவில்லை. “எனக் கென்ன, ஏமாந்தால் என்றைக்காவது ஒரு நாள் அது ஓடி விடப் போகிறது!” என்று எச்சரித்தாள்.

“ஏண்டி, இவ்வளவு நாள் நம்மிடம் வளர்ந்த பிறகு, அது எங்கேயாவது நன்றி கெட்டத்தனமாக ஓடிவிடுமா?” என்றாள் அக்கா.

ஐயோ, பாவம்! என்னையும் அவள் அந்தக் கெடு கெட்ட நாயுடன் சேர்த்துக் கொண்டாள்போலும்! இவளை நானா என்னிடம் நன்றி காட்டச் சொல்லி அழைத்தேன்?

ரொம்ப அழகுதான்!

“கூண்டின் கதவைத் திறந்துதான் பாரேன்; அது நன்றி கெட்டத்தனமாக நடந்து கொள்கிறதா, இல்லையா என்று!” என்றாள் தங்கை.

அக்காவுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. “திறந்தால் என்னடி? ஓடிப் போய் விடுமா?” என்று தங்கையிடம் வீம்பு பேசிக்கொண்டே, நான் அத்தனை நாளும் அடைபட்டிருந்த சிறையின் கதவை அன்று திறந்தே விட்டாள்!

அவ்வளவுதான்; அதற்குப் பிறகு ஒரு க்ஷணமாவது அங்கே தாமதிக்க எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? “விடுதலை, விடுதலை, விடுதலை!” என்று கூவிக் கொண்டு எடுத்தேன் ஓட்டம்!

ஆஹா! எத்தனையோ நாட்களுக்குப் பிறகு — எவ்வளவோ கஷ்டங்களுக்குப் பிறகு — நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாகக் கிடைத்த அந்த விடுதலையில்தான் என்ன இன்பம்! என்ன இன்பம்!

அந்த ரசிகர்கள் சொல்கிறார்களே, நீங்கள் சொல்லுங்கள் — நான் நன்றி கெட்டத்தனமாகவா நடந்துகொண்டேன்?

ஹூம்...அப்படியேதான் இருக்கட்டுமே. அதற்காக என் பிறப்புரிமையான சுதந்திரத்தை நான் இழந்துவிட முடியுமா?



For Whiter Brighter Washes
சலவை செய்ய
"கேரளா வாஷ்வெல்-
பார் சோப்" என்று
கேளுங்கள். அது மிக
எளிதாகவும் சிக்கன
மாகவும் சலவை
செய்கிறது. அதன்
யதேஷ்டமான
நுரை துணிகளைக்
கஷ்டமின்றி சுத்தப்
படுத்துகிறது. குறை
ந்த நேரத்தில் துணி
யை துவைப்பது
மின்றி துணிகளும்
நீண்டு உழைக்கின்
றன. உங்கள் வீட்டுக்
குச் சிறந்த சோப்பு
அதுவே. உபயோகித்
துப் பாருங்கள்.
Kerala
WASH WELL BAR
Manufacturers
FAS-KS-2
Kerala Soap Institute, Calicut



பாணிக்கிரகணம்

முதல் அத்தியாயம்
சிமா வந்தார்!

பிற்பகல் மணி ஒன்று இருக்கும். கோடை வெய்யில் தலையைப் பிளந்து கொண்டிருந்தது. மனிதர்கள் மட்டும் அல்ல, ஆடு மாடுகள்—ஏன் நாய்கள்கூட—வெய்யிலுக்குப் பயந்து உள்ளே ஓடி ஒளிந்து கொண்டு விட்டன. மரம் மட்டைகள் எல்லாம் காற்றை எதிர்பார்த்துச் சோர்ந்து வாடி யிருந்தன. காக்கைகள் மட்டும் நாய்கள் போட்டி போடாத சமயத்தில் வெளியே எறிந்திருந்த எச்சில் இலைகளை 'ஒரு கை' பார்த்து விடலாம் என்று அவசர அவசரமாக அவைகளைக் கொத்திக் கொத்தித் தின்று கொண்டிருந்தன. குட்டிலோ காலை வைக்க முடியவில்லை; இங்கு மங்கும் தாவிக்கொண்டே, "இந்தப் பாழாய்ப் போன வெய்யில் என்னமாய்க் காய்கிறது?" என்று தங்கள் பாஷையில் குசலப் பிரச்னம் செய்துகொண் டிருந்தன அக் காக்கைகள். இந்தக் 'கா கா' என்ற சத்தமும் அந்த வெய்யில் வேளையின் நிசப்தத்தை நன்கு எடுத்துக் காட்டியது.

பழமாக்குடி அக்கிரகாரத்தில் அநேகமாக எல்லோரும் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரே ஒரு வீட்டில் மட்டும் பேச்சுக் குரல் கேட்கிறது; சற்றுக் கவனிக்கலாம்.

அந்த அக்கிரகாரத்தில் இருந்த ஒரே மாடி வீடு அதுதான். வீட்டு வாயிலில் ஒரு வண்டி நிற்கிறது. இப்பொழுதுதான் மாட்டை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள்—வண்டிக் கவடுகூட இன்னும் அழிய வில்லை. யாரோ மாடி வீட்டிற்கு விருந்தினர் வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. ஒருவேளை கேட்கும் குரல்கூடப் புதிதாக வந்தவருடையதுதானோ?

"ருக்மணி, என்ன இருந்தாலும் சாரங்கனுக்கு இந்த வருஷம் கல்யாணம் பண்ண வேண்டாமா? என்னமோ மாப்பிள்ளைதான் பேசாமல் இருக்கிறார் என்றால் நீகூட இதிலே சிரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாதா?"

"அண்ணா, சாரங்கன்தான் கல்யாணப் பேச்சையே எடுக்கக் கூடாது என்கிறானே?"

"நீ சொல்றது தேவலையே! அசடு மாதிரி கல்யாணம்னு சொன்னவுடன் 'ஹா'ன்னு வாயைப் பிளந்து 'சரி' என்று



சொல்வானா என்ன? கொஞ்சம் பிருத்தான் பண்ணிப்பான். அதுவும் காலெழுத்து வாசிச்சிருக்கானோல்லியோ?''

"இவன்கூட அதைப் பற்றியே பேசற தில்லை. இன்னும் இரண்டு வருஷம் போகட்டுமென்று பார்த்தேன்."

"இதோ பார்! பையனோ பட்டணத்துக்குப் படிக்கப் போகிறேன்னு துடியாய் நிற்கிறான். பட்டணத்துக்குப் போய்விட்டு வந்தால் ஆசாமியே மாறிப் போய்விடுவான். ஏதோ ஒரு கால்கட்டு கட்டிவிட்டால் அவன் பாடு; அவன் அகமுடையாள் பாடு. அவனுக்குத்தான் வயசு இருபது ஆகிறதே!"

ருக்மணி பதில் பேசவில்லை. தமையன் சொல்வது சரி என்றுதான் அவளுக்குப் பட்டது. ஸ்ரீரங்கத்தில், பக்கத்து வீட்டு ரங்கத்தின் பிள்ளை ராஜும் பட்டணத்திற்குப் படிக்கப் போய், யாரோ ஒரு கிறிஸ்தவப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வரவில்லையா? எல்லோரும் அவனை முதலிலேயே ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு அப்புறம் பட்டணத்திற்குப் போடா என்று சொன்னபோது, "நான் படித்து வேலையான அப்பறம்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்" என்று அவன் தலைகீழாக நிற்கவில்லையா? ஒருவேளை சாரங்கனும் அப்படிச் செய்து விட்டால்?

"அண்ணா, நீ சொல்றது சரிதான். ஏதாவது வரன் இருந்தால் பாரேன்."

"வரனுக்கென்ன குறைச்சல்? சாரங்கன் கொண்டியா, முடமா? இல்லை, அவனுக்குச் சொத்தில்தான் என்ன குறைவா? தலையை அசைத்தால் எவ்வளவோ பேர் அவனுக்குப் பெண்ணைக் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதோ பாரேன், 'என் தங்கையின் பிள்ளை இண்டர்மீடியட் பாஸ் பண்ணியிருக்கான்; கெட்டிக்காரப் பையன்' என்று ரயிலில் சொல்லிக் கொண்டே வந்தேன், ஒரு பிராமணரிடம். 'பையனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?' என்று சட்டென்று கேட்டார். அப்போ பாரு, ரயிலில் ஒத்தன் மகிழம்பூ வித்துக் கொண்டு வந்தான். நான் அவனிடம் கேட்கவேயில்லை, அவனாகவே ஓரணாவுக்கு மகிழம்பூவைக் கட்டி என்னிடம் கொடுத்துவிட்டுப் போனான். உடனே நானும் சகுனத்தை விடக் கூடாதுன்னு வரன் 'கிடைச்சா பண்றதுதான்'னு சொன்னேன். ஒரு ஜாதகத்தை உடனே கொடுத்தார். அவர் பெண்ணுக்காக வரனுக்கு அலைந்துகொண்டு இருக்காராம். என்னுடன் வருகிறேன் என்றார். நான்தான் போய் விசாரிச்சுக் கடிதாக எழுதறேன்னு சொல்லி அவரை நிறுத்தினேன். பிராமணர் விலாசம் கொடுத்

இருக்கார். கும்பகோணத்தில் டபீர் தெருவாம்."

"பெண் நன்னா யிருக்குமா? குலம் கோத்திரம் சரியா யிருக்கா? எல்லாவற்றையும் நன்னா விசாரிச்சுக் கொண்டு வரக் கூடாதா? நீ எதிலே போனாலும் அரைக் காரியம் பண்ணுகிறவன் தானே!"

"நீ தேவலையே அம்மா! சித்தே நாழிக்கு முன்னே கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு வருஷம் போகட்டும்னு சொன்னாயே!"

"அதென்னமோ, விவரமாய் எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டு வந்து சொல்லு. நீ சிரத்தை எடுத்துக்காமே வேறே யார் எடுத்துக்கப் போறா?"

"எதற்கும் சாரங்கன் கிட்டே ஒரு வார்த்தை சொல்லி வை!"

இதுவரை பேசிக்கொண்டிருந்தது ருக்மணியும் அவளுடைய தமையன் சீமா என்கிற ஸ்ரீனிவாஸ ஐயங்காரும் தான். ருக்மணிக்கு வயது நாற்பது அல்லது நாற்பத்திரண்டு இருக்கும். சாரங்கன் ஒரே பிள்ளை. சீமாவிற்கு வயது ஐம்பதிற்கு மேல் இருக்கும். ஆனால் அவரைப் பார்த்தால் அவ்வளவு வயதானவராகத் தெரியாது. சூது வாது அறியாதவர். சொந்த வேலை அதிகமாக இல்லாததால், பிறர் காரியத்தில் ரொம்ப அக்கறை உண்டு. அவரிடம் உள்ள குறை ஒன்றுதான். மூளை மட்டும் சூக்ஷ்மமாக வேலை செய்யாது. எல்லோரும் அவரிடம் அன்பாகவும், அவரைவிடத் தாங்கள் கெட்டிக்காரர்கள் என்ற நினைவால் கொஞ்சம் கேலியாகவும் பேசுவார்கள். அவர் பேச்சை உண்மையாகக் கேட்பவர்கள் குறைவு. ஆனால் அவருடைய நயமான குணத்தினால் பிரயோஜனம் அடைந்த பலர் அவரிடம் அடிக்கடி வருவார்கள். ரயிலில் வந்தவர் பெண்ணுக்கு வரன் தேடுவதில் தான் பட்ட கஷ்டங்களை உணர்ச்சியோடு சொல்லவும் சீமாவின் மனம் இளகி, அவரிடம் அனுதாபம் ஏற்பட்டது அதனால்தான் சொந்த வேலையைக் கூட விட்டுவிட்டு நேரே மாப்பிள்ளை வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

ருக்மணிக்கும் அண்ணாவைப் பற்றி உள்ளுக்குள்ளே, ஊரில் உள்ளவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் உண்மையானது என்பது தெரியும். ஆனால் இந்த விஷயத்தில்—சாரங்கன் கல்யாணத்தைப் பற்றி—அவள் கொண்டிருந்த அபிப்பிராயம் தமையன் சொல்வதை ஒத்திருந்ததால், அவ



கூறுவது சரி என்று பட்டது. அதுவும் பக்கத்து வீட்டுப் பத்மாசினி தன் பேரனைக் கொண்டு வந்து பெருமையாகக் காண்பித்தபோது, தனக்கும் அம்மாதிரி சீராட்டி வளர்க்க ஒரு பேரன் இல்லையே என்று அவளுக்குப் பொருமையாகத் தான் இருந்தது.

சாரங்கன் இப்படிக் கல்யாணம் வேண்டாம் என்று பிடிவாதம் பிடிக்கிறானே? பேரனை மடியில் வைத்துச் சீராட்டாமல் செத்துப் போய் விட்டால்......சரி, சரி, இந்த வருஷமே கல்யாணத்தை நடத்தி விடவேண்டியதுதான்!



இம்மாதிரித் தீர்மானத்திற்கு அவள் எத்தனையோ தடவை வந்திருக்கிறாள். ஆனால் அதைச் சாரங்கனிடமோ, அல்லது அவரிடமோ சொன்னால் அவர்கள் பரிகாசம் தான் செய்வார்கள்.

நல்ல வேளையாக அன்று இருவரும் அவள் தீர்மானத்தைக் குலைக்க முடியாத நிலையில் அப்போது இருந்தார்கள்.

ருக்மணியின் கணவர் ராமஸ்வாமி ஐயங்கார் அப்பொழுது அயர்ந்த நித்திரையிலிருந்தார். சாதாரணமாக, அவருக்கு யார் என்ன செய்தாலும் சுலபமாகக் கோபம் வராது. ஆனால், அவரை நல்ல தூக்கத்திலிருந்து யாராவது எழுப்பிவிட்டால்—அது என்ன அவசரமான காரியமாக இருந்தாலும்—துர்வாச மாமுனியால் கூட அவ்வளவு சாபங்களைக் கொடுக்க முடியாது. அவர் மட்டும் அந்தச் சமயத்தில் தூங்காமலிருந்திருந்தால், இந்தக் கதையையே எழுத வேண்டி யிருந்திருக்காது.

சாரங்கன் அப்பொழுது வீட்டில் இல்லை. பக்கத்துத் தெரு ரகுவின் வீட்டில் சுவாரஸ்யமாகச் சீட்டாடிக் கொண்டிருந்தான். அவன் வீட்டில் இருந்திருந்தால் கல்யாணப் பேச்சையே எடுத்திருக்க முடியாது.

“அம்மா, என்னால் இரண்டுக்குள் ஒன்றைத்தான் செய்ய முடியும். ஒன்று, நான் படிக்கவேண்டும்; இல்லாவிட்டால் அகமுடையான் காலைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டும்” என்று கண்டிப்பாய்ச் சொல்லியிருப்பான்.

சீமா கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தபோது மணி ஒன்று இருக்கும். இரண்டு மணி நேரம் அந்தப் பெண்ணை பற்றியே பேசிக்கொண்டிருந்தார். ருக்மணி திருப்பித் திருப்பித் தான் சொன்னதையே சொல்லிக் கொண்டு, சரியாக மணி நான்கு அடித்தபோது, ஜாதகத்துக்கு மஞ்சள் தடவிச் சீமாவின் கையில் கொடுத்தாள்.

இரண்டாம் அத்தியாயம்

பூமாதேவி

இரண்டு நாள் வரையில் ருக்மணி தன் பிள்ளை கல்யாணத்தைப் பற்றி ஒரு வார்த்தை பேசவில்லை. ஆனால் மூன்றாம் நாள் ‘குட்டு’ தானாகவே வெளிப் பட்டு விட்டது. சாரங்கன் ஆத்திரத்தோடு

ஒரு கடிதத்தைப் பிரித்துக் கொண்டே உள்ளே வந்தான்.

"என்னம்மா, கல்யாணம் யாருக்கு நடக்கப் போகிறது? உனக்கா, எனக்கா?"

"எல்லாம் தானே இன்னும் கொஞ்ச நாளில் தெரிகிறது!" என்று ருக்மணி சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"வாயை மூடிக் கொண்டு செய்திருக்கிறாயே, காரியம்! பெண்ணைப் பார்க்க நாளைக்கே வரலாம்னு எழுதி யிருக்கே இந்தக் கடிதாசியில்?"

"பெண் நன்றா யிருந்தால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். உனக்கும் கல்யாணம் பண்ற வயசாகவில்லையா?"

"இதோ பாரம்மா! இந்தக் கல்யாணம் என்கிற பேச்சை இன்னும் ஐந்தாறு வருஷத்துக்கு எடுக்காதே! நானே சம்பாதித்துச் சாப்பிட ஆரம்பித்த பிறகுதான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன், தெரியுமா?"

"நீ சம்பாதிச்சுத்தான் சாப்பிட வேணும்னு தலையிலே எழுதி வைச்சிருக்கா, என்ன? உங்கப்பா, தாத்தா சேர்த்து வைத்திருக்கிற சொத்தில் இன்னும் பத்துப் பேர் சாப்பிடலாமே!"

இதே தோரணையில்தான் சம்பாஷணை நடந்தது. ஆனால் இந்தத் தடவை கடைசியில் ஜயித்தது ருக்மணிதான். "நீ பட்டணம் போறதுக்கு முன்னே கல்யாணம் பண்ணிக் கொண்டு போனால்தான் எனக்கு ஒரு பாரம் நீங்கும்!" என்று அவள் விசித்துக்கொண்டே சொன்னாள். சாரங்கனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. பெண்ணைப் பார்த்துவிட்டுப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடலாம் என்று நினைத்தான். அம்மாவாலும் அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியாதல்லவா? ஆகவே, "சரி அம்மா, பெண் பார்க்க வருவதாகச் சொல்லி யனுப்பு!" என்றான்.

ருக்மணியால் சாரங்கன் இப்படிச் சட்டென்று சம்மதித்ததை நம்ப முடியவில்லை. சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்று ராமஸ்வாமி ஐயங்காரிடம் சமாசாரத்தை அவசரமாகச் சொன்னாள். முதலில் அவருக்கும் சந்தேகமாய்த்தா னிருந்தது. "சாரங்கனாவது சம்மதிப்பதாவது! ஏண்டா, உன் அம்மா சொல்லுவது நிஜம் தானா?" என்று கேட்டார்.

"உங்களிடம் நான் எத்தனை நாள் பொய் சொல்லி யிருக்கேன்?" என்று மூக்கைச் சிந்திக்கொண்டே, ருக்மணி ஒரு பதில் கேள்வி போட்டாள்.

உள்ளூற ராமஸ்வாமி ஐயங்காருக்கும் சாரங்கன் சம்மதித்ததில் சந்தோஷம்தான். இத்தனை நாள் சாரங்கனை எதிர்த்து வாதாட அவருக்கு மனமில்லை. அவர் இயற்கையிலேயே கும்பலோடு கோவிந்தா போடும் கூட்டத்தைச் சேர்ந்தவர். ஊரில், கட்சிப் பிரதி கட்சி வந்தால் எந்தக் கை ஓங்கி யிருக்கிறதென்று பார்ப்பார்; உடனே அந்தக் கட்சியில் சேர்ந்து விடுவார். ஆனால் தப்பு விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ள

சிவ கிராமமா யிருந்தது

மகாத்மா வர்தாவில் இருந்தது. அவரைத் தரிசிக்க வந்தவர்களுக்கு மிகவும் சௌகரியமாகத்தான் இருந்தது. ஆகையால் நாளுக்கு நாள் பேட்டி காண வருவோரின் தொகை அதிகரித்துக் கொண்டே போயிற்று. ஜம்னாலாலின் வரையறாத கொடைக்கும் விருந்தோம்பலுக்கும் கூட ஒரு வரம்பு வேண்டாமா?

"நான் இங்கே இப்படி நகர வாழ்வு வாழ்ந்து வந்தால், பிறர் தேசத் தொண்டின் நிமித்தம் கிராமம் செல்வது தான் எப்படி நடைபெறும்? ஆரத்தில் ஒரு கிராமத்திலே போய் வசிப்பதுதான் சரி. கிராமப் புனருத்தாரண வேலையில் பிறரைத் தூண்டுவதற்கு அதுதான் சரியான முறை. இந்தப் பேட்டித் தொந்தரவும் குறையும்; பஜாஜுக்கும் சற்றுச் சிரமம் குறையும்" என்ற எண்ணம் மகாத்மாவின் மனத்திலே ஊறிக் கொண்டிருந்ததாம். மகாதேவுடனும் ஜம்னாலாலுடனும் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாராம்.

அவர்கள் தங்கள் உயிருக்கும் உயிரான பாபுவை வனவாசம் செய்ய விடுவார்களா? வர்தாவிலேதான் மகாத்மா இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறிவிட்டார்கள்.

ஒரு நாள் இராத்திரி சுமார் ஏழு மணி இருக்கும். பிரார்த்தனை முடிந்தது. கையிலே தடி ஒன்று எடுத்துக் கொண்டார் காந்தி; கதர்ச் சால்வையையும் எடுத்துக் கொண்டார். பேசாமல் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தன்னந்தனியே 'விர்' என்று கிளம்பி விட்டார், ஒரு கிராமத்தை நோக்கி.

பஜாஜுக்கும் மகாதேவுக்கும் செய்தி எட்டியது. ஆனால் அவர்களுக்கு அவரைப் பின் தொடரத் துணிவு இல்லை. மகாத்மா கோபித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தார்கள். கொஞ்ச தூரம் போய்த் திரும்பி வந்து விடுவார் என்று நம்பினார்கள்; எதிர்பார்த்தார்கள். இராத்திரி யெல்லாம் சிவராத்திரியாக விழித்திருந்தார்கள். மகாத்மா திரும்பி

ட்டார். அதற்கு வேண்டிய நெஞ்சுத் ணிவு அவரிடம் கிடையாது.

மறுநாள் எல்லோரும் கும்பகோணத் க்குப் புறப்பட்டார்கள். சீமாவுக்கு ன்னமேயே சொல்லி யிருந்ததால் அவர் ளுக்கு வரவேற்பு அமர்க்களமாயிருந்தது. பண் வீட்டாருக்கு ரொம்பத் திருப்தி. பண்ணின் தகப்பனார், "எவ்வளவோ லைந்து அலைந்து பார்த்தேன், வரன் டைக்கவில்லை. இப்படி அகஸ்மாத்தாக ல்ல வரன் கிடைத்ததே!" என்று ண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்

தார். ஆனால் மனதிற்குள் ஒரு கிலேசம் ஒரு காரியம் மிகவும் சுலபமாக நடந்து விட்டால், பின்னால் எதாவது கெடுதல் சம்பவிக்குமோ என்று பயப்படுவது சகஜம் தானே? ஆனால் அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

பெண்ணைப் பார்த்து விட்டு எல்லோரும் ஊருக்குத் திரும்பினார்கள்.

"பெண்ணின் பெயர் எனக்குப் பிடித் திருக்கு. பூமாதேவி! கர்நாடகப் பேராயும் இல்லே, அர்த்தமில்லாத புது மாதிரி பேராவும் இல்லே!" என்று ராமஸ்வாமி ஐயங்கார் அபிப்பிராயப்பட்டார்.

"இங்கிலீஷ் படிப்பு படித்திருந்தாலும் அடக்க ஒடுக்கமா யிருக்கிறாள். சாரங்க னுக்கு ஏத்த பெண். ஏதோ தெய்வ சங்கல்பத்தினால்தான் தேடாமல் நமக்குக் கிடைத்தது!" என்றாள் ருக்மணி.

"அதுதான் நான் அப்போதே சொன் னேனே, பிராமணனைப் பார்த்தவுடன் சம்பந்தத்தைக் கைவிடக் கூடாதுன்னு தோணித்துன்னு...நான் சொல்றபோது சிரிப்பாய்த்தா னிருக்கும். பின்னால் தெரி யும், யார் சொல்வது சரின்னு!" என்று சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுக்காமல் சீமாவும் சொன்னார்.

ருக்மணி, "பெண்ணின் அம்மா ரொம்ப அழுத்தம். வார்த்தையை அளந்து பேசுகிறாள். 'எம்மா, எவ்வளவு செய்வார் உங்காத்துக்காரர்?'னு விளையாட்டாக் கேட்டேன். உடனே சாதுர்யமா, 'இந்தக் காலத்திலே என்ன செய்ய முடியறது? ஒரே ஒரு பெண். இருப்ப தெல்லாம் அவளுடையதுதான்னு வைச்சுக்கோங்க ளேன்!'னு சொல்லிவிட்டாள்!" என்றாள் ராமஸ்வாமி ஐயங்காரிடம்.

"ருக்மணி! எனக்கு அப்போதே தெரி யும், நீ அசட்டுப் பிசட்டுன்னு எதாவது கேட்டு வைப்பாய்னு! பண விஷயத்தைப் பத்தி ஒண்ணும் பேசாதேன்னு காலமே தானே சொன்னேன்? நமக்கு இருக்கிறது போராதா? அந்தக் காலத்தில் உங்காத் தில் எனக்கு என்ன அளந்து விட்டா?" என்றார் ராமஸ்வாமி ஐயங்கார்.

"என்ன செய்யவில்லே? வீடு நிறைய வெள்ளிப் பாத்திரம்; ஒண்ணரை வேலி மஞ்சக்காணி நிலம்.........என் அண்ணா! இவர் இப்படிச் சொல்கிறாரே, அப்பா என்ன, குறைச்சா செய்தார்?" என்று ருக்மணி படபடப்பாகவே கேட்டாள்.

சவா கிராமமான கதை

ரவில்லே. இதற்குள் 'சோ' வென்று மழ கொட்டத் தொடங்கிவிட்டது.

கிராமத்துப் பாதை வெல்லாம் ஒரே ருகிவிட்டது. அந்த இருட்டிலும் மழயிலும் வழியிலுள்ள கஷ்டங்களை பல்லாம் பாராட்டாமல் அந்தத் தள் ாத வயதில் ஐந்து மைல் தூரம் டந்து சென்றார் மகாத்மா.

நள்ளிரவில் ஒரு கிராமத்திலே ஒரு ஏயானவன் குடிசைக்குப் போய்ச் ர்ந்தார். அவன் கொடுத்த தண்ணீர் ரப் பருகி விட்டு அவனுடைய நார்க் ட்டிலில் படுத்துக் கொண்டார். அந்தக் ராமத்திற்குச் சிவ கிராமம் என்று பெயர்.

காலையில் அவரைத் தேடிக்கொண்டு ந்தரவே திரண்டு வந்து விட்டது. ந்தக் கிராமத்திற்கு எல்லாம். "ராமன் ருப்பதே அயோத்தி!" என்பது மறு யும் உண்மையாயிற்று.

அன்று நாங்கள் பார்த்த சிவ கிராமம் ந்தப் பழைய சிவ கிராமமா? குட்டிச் வர் நிறைந்த அந்தப் பட்டிக்காடா?

நத்தி தபாலாபீசுகள் என்ன, கம்பி - ரடேன்ன, டெலிபோன் வசதி என்ன! ராமத்துக் குழந்தைகளுக்குப் பாட லை, தொழிற்சாலை, பேசாலை—என்று த்தனையோ வசதிகள்! இந்தக் கிராமம் ற்றக் கிராமங்களுக்கு ஒரு வழிகாட்டி கிவிட்டது.

சிவ கிராமம் சேவா கிராமமான தையைக் கேட்டதும், நம் நாட்டி ள்ள கிராமங்களெல்லாம் இத்தகைய று நல் அடைந்தால் எவ்வளவு ாக இருக்குமென்று எனக்குத் ான்றிற்று. ஆனால் நமக்கு இருக்கும் ந்தி ஒருவர்தானே? இப்பதில் ாளுந்திய நீயம்போலப் பல்லாயிரம் ந்திகளைத் தோற்றுவிக்கும் மந்திர க்தைதான் தெரியவில்லையே!

[ஸ்ரீமதி அம்புஜம்மாள் எழுதிய "மகாத்மா காந்தி நினைவு மாலை" என்னும் நூலி லிருந்து எடுத்தது.]

சீமாவுக்குத் தர்ம சங்கடமாகப் போய் விட்டது. ஆனாலும் தங்கையின் முகத்தைப் பார்க்கும்போது அவருக்குப் பரிதாபமா யிருந்தது. ஆகவே, "அந்தக் காலத்தில் அவர் செய்தது ஜாஸ்திதான்!" என்றார்.

"என்ன ஜாஸ்தி! அன்னிக்குச் சண்டை போட்டுக்கொண்டு நாங்கள் பேசாமல் திரும்பி வந்திருக்க வேண்டியது......அப்படி வந்திருந்தால்......"

"இந்தப் பெண்ணைப் பார்ப்பதற்கு இப்படிக் கட்டை வண்டியில் அடி பட்டுக் கொண்டு வந்திருக்கவேண்டாம், சரிதானே அப்பா?" என்று முடித்தான் சாரங்கன்.

பிறகு ஐந்து நிமிஷம் ஒருவரும் பேச வில்லை. சாரங்கனின் மனம் தீவிரமாக வேலை செய்தது. 'பெண்ணைப் பார்க்க வரு கிறேன்' என்று அவன் முதலில் சொன்ன போது, ஒரே ஒரு எண்ணம்தான் அவன் மனதில் இருந்தது. பெண்ணைப் பார்க்க வேண்டியது, உடனே பிடிக்கவில்லை என்று சொல்லிவிட வேண்டியது — அப்போது அவனிடம் ஒருவராலும் குற்றம் கண்டுபிடிக்க முடியாதல்லவா? ஆனால், பெண்ணைப் பார்த்த பிறகு அப்படி யொன்றும் சட்டென்று அவனால் சொல்ல முடியவில்லை.

அவன் மனக் கண்முன் ஒரு காட்சி அப்படியே நின்றது.

சாரங்கன், அப்பா, மாமா, பெண்ணின் தகப்பனார் எல்லோரும் ஜமக்காளத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பெண்ணின் தகப்பனார், "அம்மா பூமா, இவாளை வந்து சேவி!" என்று சொல்கிறார்.

உள்ளே யிருந்து ஒரு பெண் வருகிறாள். அப்படி ஒன்றும் பிரமாதமான அழகு என்று சொல்வதற்கில்லை. ஆனால் குறு குறுப்பான முகம்; சுருட்டையான நீண்ட கூந்தல்; கன்னங் கரேலென்று பாம்பு மாதிரித் தொங்கும் பின்னல். பெண்ணின் அழகை எடுத்துக் காட்டும் என்று எண்ணிப் புதுப் பச்சைப் புடவை ஒன்றை உடுத்தி விட்டிருந்தார்கள். பெண் வரும்போது கீழே விழுந்துவிடப் போகிறாளே என்று சாரங்கனுக்குப் பயமா யிருக்கிறது. அப்படி யொன்

றும் நல்ல வேளையாக நேரவில்லை. ந
காரம் செய்யும்போது பயத்தினாலே
என்னமோ, பெண்ணின் கண்ணில் கெ
சம் ஜலம் ததும்புகிறது. சாரங்க
அவள் கடைக் கண்ணால் ஒரு த
பார்க்கிறாள். ஆனால் அதே சம
சாரங்கன் அவளைப் பார்த்துக் கொ
டிருந்ததால் சட்டென்று அவள் மு
சிவக்கிறது. அந்த முகம் ஒரு நிமி
அவன் வைராக்கியத்தையே குலைக்கிற
கல்யாணம் பண்ணிக் கொண்டால் என
வந்துவிடப் போகிறது? தன் படி
கெட்டுவிடுமா, என்ன? தான் என
அவ்வளவு மனோதிடம் இல்லாதவனா?

சாரங்கனின் பகற் கனவு திடீரென
முடிவுற்றது. ராமஸ்வாமி ஐயங்கார் சி
த்துக்கொண்டே, "சரி, இந்தக் கல்யாண
தில் யார் அபிப்பிராயம் முக்கியமோ அ
னிடம் ஒரு வார்த்தைகூடக் கேட
வில்லையே? அதுக்குள்ளே சண்டை
வந்து விட்டாயே?" என்றார் ருக்மணியை
பார்த்து.

"கிளிபோல் இருக்கும் பெண்ணை வே
டாம்னு சொல்லுவன்? என்ன சாரங்
பெண் பிடிச்சிருக்கோல்லியோ?" என்ற
அவள்.

"அப்படி யொண்ணும் கண்ணுக்கு வி
ரமா யில்லை. ஆனால் பெண்ணுக்குப் பா
தெரியாதோ?"

"நன்னாப் பாடுமாம். பயந்த சுபா
போலெருக்கு! அவ அம்மாகூடப் பா
சொன்னா; நான்தான் பலவந்தப்படு
வேண்டாம்னேன்."

"பின்னே என்னடா, முகூர்த்தத்
வைச்சுட வேண்டியதுதான். ஸ்ரீனிவாச
ஒரு நாளைப் பார்த்து அவாகிட்டே சம்ம
தான்னு சொல்லிவிடு!" என்
ராமஸ்வாமி ஐயங்கார்.

"பெண்ணுக்கு என்னைப் பிடிச்சிருக்கா
என்று சிரித்துக் கொண்டே சா



கன் கேட்டான்.
லோரும் 'கொ
லென்று சிரித்தார்கள்
அவர்களுக்கெல்ல
அது ஒரு விகடமா
பட்டது. ஆனால் கொ
காலைக்குப் பிறகு சா
கன் தன்னைத் தா
அந்தக் கேள்வியை
பல தடவை கேட்
கொண்டான்.

(தொடரு


வந்தனம்!
நீங்கள்
லைப்பாய் தேகாப்பியாசம்!
செய்தீர்களா?
வாழ்க்கையில் உங்கள் ஆரோக்கியத்தை விட முக்கியமானது வேறெதுவுமில்லே. சரீர சௌக்கியத்தின் வாயிலாகத்தான் புத்தி கூர்மையும் வெற்றியுமடையலாம்.
தவறாமல் தேகப்பயிற்சி செய்தும், ஆக்கப் பொருள்கள் கொண்ட சாதாரண உணவை உட்கொண்டும், தேகசுத்தத்தை முக்கியமாக கவனித்தும், நீட ஆரோக்கியத்தைப் பெறுங்கள்.
ஆரோக்கியமளிக்கும் லைப்பாய் சோப், அதிலடங்கியுள்ள சுகாதாரப் பொருளின் சக்தியால் தேகசுத்தத்தைத் தருவதோடு நோய்களிலிருந்து உடலை பாதுகாக்கவும் உதவுகிறது.
லைப்பாய் தேகப்பயிற்சிப் படங்கள்
லைப்பாய் தேகப்பயிற்சிப் படங்களுக்கு Dept. B411 P.O. Box 758, Bombay, 1 என்ற விலாசத்திற்கு இரண்டணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.
LIFEBUOY
SOAP
லைப்பாய் சோப்புடன்
துவக்கும் நாளே நன்னாள்
S-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



LKI ஆகஸ்ட் 15, 1947 8 அணா

Regd No. M. 4392

License No. 18
Licensed to post without prepay



பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட். இலங்கைக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்: துரை. அருள் & கோ., லிட்., 93, செட்டியார் தெரு, கொழும்பு